தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்

TRUTH ALONE TRIUMPHS

உள்ளடக்கம்.

4-4-1989.

பக்கங்கள்

1. வினாக்கள்-விடைகள்—

உடுக்குறியிட்ட வினாக்கள் 269—296

2. தகவல் கோரல்—

(அ) செய்தித் துறை துணை இயக்குநர் ஒருவர் அரசு அலுவலர் ஒழுங்குமுறை விதிகளை மீறிச் செயல்படுவது குறித்து 296—298

(ஆ) சென்னை திரிசூலத்திற்குப் பக்கத்தில் ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு நிதியுதவி அளிப்பது குறித்து .. 298—299

(இ) சென்னையிலிருந்து மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் ஆந்திரப் பகுதியிலிருந்து திரும்புவதற்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கை .. 299

(ஈ) தெலுங்கு வருடப் பிறப்பு விடுமுறை நாள் குறித்து 300

(உ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் 300—301

(ஊ) மத்திய அரசின் செய்தி மற்றும் தகவல் ஒலிபரப்புத் துறையினால் அனுப்பப் பெற்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பெற்றுள்ள வெளியீடுகளில் உள்ள ஆட்சேபகரமான கருத்துக்கள் 301—303

(எ) எதிர்க்கட்சியைச் சேர்ந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், தொண்டர்கள் கைது செய்யப்பட்டுள்ளது குறித்து 309, 314—315

(ஏ) பேரவையில் பெண் போலீசாரைப் பணியில் அமர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து .. 338

3. ஒத்திவைப்புத் தீர்மானம்—

தென் ஆற்காடு மாவட்டம் சோனாங்குப்பத்தில் பொதுக் கூட்டத்திற்குச் சென்ற சிலர் தாக்கப்பட்டு ஒருவர் மரணமடைந்துள்ளது குறித்து. 303—308

பக்கங்கள்

4. கவன ஈர்ப்பு—

நெய்வேலி இரண்டாவது சுரங்கம் வெட்டும் பணியினால் வீடு, நிலம்இழந்தவர்களுக்கு நிவாரணம் அளிக்கவேண்டியதன் அவசியம் குறித்து .. 309–314

5. விதி 110-ன் கீழ் முதலமைச்சரின் அறிக்கை—

சென்னையில் வீட்டு வசதி வாரிய மனை ஒதுக்கீடு, அடுக்குமாடிக் கட்டிட அனுமதி ஆகியவற்றில் நடைபெற்ற முறைகேடுகள் குறித்து 315–323

6. அவையில் பயன்படுத்தப்பெற்ற சில சொற்கள் குறித்துத் தலைவரின் குறிப்புரை 323–326

7. அறிவிப்பு—

1989–90-ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளை மொழிவது குறித்து ஆளுநரின் செய்தி .. 326

8. மானியக் கோரிக்கைகள், 1989–90—விவாதமும் வாக்கெடுப்பும்—

(அ) கோரிக்கை எண். 20—வேளாண்மை ..
(ஆ) கோரிக்கை எண். 50—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு } 327

*திருமதி ரமணி நல்லதம்பி 329–333
*திரு. ஆர். பஞ்சாட்சரம் 333–338
*திரு. வி. தம்புசாமி 338–344
*திரு. கே. சுப்பிரமணிய பிள்ளை 344–346
*திரு. கே. கந்தசாமி 346–351
திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம் 351–354
*திரு. துரை சந்திரசேகரன் 355–359
திரு. ஜி. பழனிச்சாமி 359–362
திரு. எம். சேட்டு 363
*திரு. எம். முகமது சித்திக் 363–366
திரு. ஆர். சிங்காரம் 366–371
திரு. எஸ். ஆர். முனிரத்தினம் 371–373

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 374

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1989 ஏப்ரல் 4, செவ்வாய்க்கிழமை

பங்குனி 22, விபவ—திருவள்ளுவர் ஆண்டு 2020

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் மு. சாத்தையர் என்கிற தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

'' நட்டார்போல் நல்லவை சொலலினும் ஒட்டார்சொல் ஒல்லை உணரப் படும்''.

நண்பர்போல் நடந்துகொண்டு நன்மையானவற்றைச் சொன்னபோதிலும், உள்ளத்தில் பகைமை கொண்டவர் சொல்லும் சொற்களின் உண்மை வடிவம் வெகு விரைவில் உணரப் படும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்.

திருக்கழுக்குன்றம் வேதகிரீஸ்வரர் மலைக்குச் செல்ல இழுவை இரயில் அமைக்கும் திட்டம்.

23 (*வினா எண். 124)—**திரு. வீ. தமிழ்மணி** : மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருக்கழுக்குன்றம் வேதகிரீஸ்வரர் மலைக்குச் செல்ல இழுவை இரயில் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, திருக்கழுக்குன்றம் வேதகிரீஸ்வரர் திருக்கோயிலின் மலைக்குச் செல்ல இழுவை ரெயில் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனை யில் இல்லை.

திரு. வீ. தமிழ்மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்கழுக்குன்றம் மலை மேல் அமைந்திருகின்ற வேதகிரீஸ்வரர் திருக்கோயிலுக்கு தினசரி பகல் 12 மணியளவில் இரண்டு பட்சிகள் உணவு உண்பதற்காக பல்லாண்டுகளாக அங்கே வந்து போகின்றன. இந்தக் கண்கொள்ளாக் காட்சியைக் காண் பதற்கு இந்தியாவிலிருந்து மட்டுமல்லாமல், உலக நாடுகளிலே

யிருந்து எல்லாம் யாத்திரிகர்கள், உல்லாசப் பயணிகள் வந்து போகிறார்கள். அவர்களுடைய வசதிக்காக, பக்தர்களுடைய வசதியை முன்னிட்டு, அதிலும் இந்தியாவிலே வட மாநிலங் களிலிருந்து வருகின்ற பக்தர்கள் வயது முதிர்ந்தவர்களாகவே இருக்கின்ற காரணத்தால் அவர்கள் மலை மேல் ஏறிச் சென்று இந்தக் காட்சியைக் காண்பதற்கு இலகுவாக்கும் பொருட்டு, இந்தத் திட்டத்தை அவசியம் செய்வதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: தலைவர் அவர்களே, ஒரு கோயிலை கோயிலாக வைத்துக் கொள்வது ஒன்று. சுற்றுலா மையமாக்குவது இன்னொன்று. இங்கே இந்தத் திருக்கோயிலில் அந்த இழுவை இரயில் அமைக்கக்கூடிய அளவிற்கு நிதி வசதி இல்லை. அது தவிர, பழனியிலே இருக்கக்கூடிய அளவிற்கு உயரமும் இல்லை. ஆகவே, பயணிகள், பக்தர்கள் இலகுவிலே அங்கு ஏறிச் செல்லக்கூடிய வழி இருக்கிறது. இருந்தாலும்கூட, வயது முதிர்ந்தவர்கள் அங்கே வந்தால், அவர்களைத் தூக்கிச் செல்வதற்கு ஒரு ஏற்பாடும் செய்யப்பட்டிருக்கிறது என்பதனை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வீ. தமிழ்மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, அந்தக் கோயிலினுடைய இன்றைய வருமானம் ரூ. 2 லட்சத்திற்கும் கூடுதலாக பட்சிகளைக் காண வருகின்ற வர்களுடைய டிக்கெட் மூலமாக வருகின்றது. அந்தப் பணத்தைக் கொண்டு தான் தாழக் கோவிலும் பரிபாலனம் செய்யப்படு கிறது. இப்படி இழுவை ரயிலை அரசினுடைய பொறுப்பில் அமைத்து, வசதி செய்து கொடுத்தால், ஆண்டுக்கு சுமார் ரூ. 20 இலட்சத்திற்கும் மேல் நிச்சயமாக வருமானம் வரும். எனவே இப்படிப்பட்ட திட்டத்தை—முன்னுரிமை கொடுத்து—நிறை வேற்றுவதற்கு அரசு முன்வருமா என்பதை நான் அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழனி கோவிலில் மூன்று இழுவை ரயில்கள் இருந்தாலும்கூட, அங்கே ஆண்டு வருமானம் ரூ. 20 இலட்சத் தைத் தாண்டவில்லை. இங்கே இழுவை ரயில் அமைக்கின்ற பணியைவிட இந்தக் கோவில் திருப்பணி செய்வதற்காக ஏறத் தாழ ரூ. 43 இலட்சம் அளவில் திட்டமிடப்பட்டிருக்கிறது. இதற் காக ஏறத்தாழ இதுவரை ரூ. 2 இலட்சம் தான் நன்கொடையாக வும் அரசு மானியமாகவும் வசூல் செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே இப்போது இந்த இழுவை ரயில் திட்டத்தை செயல் படுத்த வேண்டுமென்ற எண்ணம் அறங்காவல் துறைக்கு இல்லை என்பதை நான் மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

1989 ஏப்ரல் 4]

திரு. பெ. சீனிவாசன் : தலைவர் அவர்களே, ஆண்டவனை தரிசனம் செய்யச் செல்லும்போது பக்தர்கள் தம்மை வருத்திக் கொண்டு போவதுதான் முறை. அதை விடுத்து ஆண்டவனை எளிதாகப் போய்ச் சேருவதற்கு, சென்று பார்ப்பதற்கு, ஒரு பொழுது போக்கு போல இந்த இழுவை ரயில் தேவைதானா என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, அதைத்தான் நான் ஏற்கெனவே சொன்னேன். திருக்கோயில் என்பது ஒன்று. சுற்றுலா மையம் என்பது வேறு. ஆனால் சுற்றுலாத் துறையின் மூலமாக அங்கே இழுவை ரயில் பதிலாக 'ரோப்-வே' என்று சொல்லக்கூடிய மின் சக்தியால் இயங்கக்கூடிய ஒரு கயிற்று வழியை நிறுவலாம் என்ற ஒரு யோசனையை சுற்றுலாத் துறை தெரிவித்திருக்கிறது. அங்கே இழுவை ரயிலை செயல்படுத்துவதை விட 'ரோப்வே' என்பதைச் செயல்படுத்தலாமா என்பதும் பரிசீலனையில் இருக்கிறது. இருந்தாலும்கூட, நான் ஏற்கெனவே சொன்னது போல் கோயில் கோயிலாக இருக்க வேண்டுமா அல்லது சுற்றுலா மையமாக ஆக வேண்டுமா என்பதுதான் பிரச்சினை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இதுபோல் திருச்சி மையத்திலே ராமாயணக் காலத்திலே ஏற்பட்ட ''ராக்ஃபோர்ட்'' டெம்பிள் இருக்கிறது. அதிலே வேறு எந்த விதமான ரோடு வசதியும் பண்ண முடியாது. இந்த மாதிரி விஞ்ச் போட்டு போவதற்குத் தான் ஒரு வழி இருக்கிறது. பக்கத்திலே ஸ்ரீரங்கம் ஒரு பெரிய யாத்ரீகர் ஸ்தலமாக இருப்பதனாலே எக்கச்சக்கமான கும்பல் வந்துகொண்டிருக்கிறது. அதிலே எங்களைப் போன்ற வயதானவர்களும் அதிகமாக வந்து கொண்டிருக்கிறார்கள். 4 படி ஏறினாலே ஹார்ட் அட்டாக் வந்து நடக்கக் கூடாது என்று டாக்டர்கள் சொல்லிவிடுகிறார்கள். ஆகையினால் அந்த 'ராக் போர்ட்டுக்கு' இந்த மாதிரி ஏதாவது ஏற்பாடு செய்வதற்கு அரசு முன் வருமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தங்களைப் போன்ற வயதானவர்கள் 'சிவனே' என்று வீட்டில் இருந்தால் என்ன என்று சில பேர் கேட்கிறார்கள். (சிரிப்பு).

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, திருச்சியிலே இருக்கக்கூடிய கோட்டை கோவிலைச் சுற்றி ஏறத் தாழ 6 லட்சம் ரூபாய் செலவிலே சுற்றுலா மையம் விளக்கு வசதி செய்து தந்திருக்கிறது. ஆனால் அந்த விளக்கைப் பராமரிப்ப தற்குக் கூட அந்தக் கோவில் இன்னும் முன் வரவில்லை. ஆகவே இந்தச் சூழ்நிலையிலே அங்கே இழுவை ரயில் அமைப்பது பற்றிய ஆலோசனை இல்லை. அங்கேயும் வயோதிகர்கள் மேலே ஏறிச் செல்வதற்கு வாய்ப்பு வசதி இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேதகிரீஸ்வரர் மலைக்குச் செல்ல இழுவை ரயில் அமைப்பது சம்பந்தமாக இந்தக் கேள்வியில் மலைக்கு போகிற வர்களைச் சுமந்து செல்வதற்கு ஏற்பாடு உண்டு என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்றையதினம் மனிதர்கள் ஒவ்வொருவரும் சுதந்திரமாக வாழ்ந்துக் கொண் டிருக்கிற காலத்தில் மனிதனை மனிதன் சுமந்துச் செல்லக் கூடிய இந்த முறையை இந்த அரசு அனுமதித்துக் கொண்டிருக் கிறதா? அதைத் தடை செய்யுமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே மனிதர்களை மனிதர்கள் சுமந்து கொண்டிருப்பதை நாம் நாடு முழுவதும் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே இதை அரசு தடை செய்யமுடியாது. மனிதர்களாகவே முன் வந்து அதைச் செய்தால்தான் நன்றாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, திருக்கழுக்குன்றம் கோவிலிலே அந்தக் கழுகுகள் வருவதையொட்டித்தான் அந்த ஆலயத்திற்கே பெருமை. ஆனால் அவ்வாறு இழுவை ரயில் போடுவதன் மூலம் அங்கேயிருக்கிற சுற்றுப்புறச்சூழல் பாதிக்கப்பட்டு, அந்தக் கழுகுகள் அங்கே வராமல் போய்விடக்கூடிய சந்தர்ப்பம் இருக் கிறது என்றுதான் பல நாள் பரிசீலனை செய்து அதை அங்கே நிறுத்தியிருக்கிறார்கள். எனவே, அதைத் தொடராமல் இருப்பதற்கு அமைச்சர் அவர்கள் முயற்சி எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, இங்கே மதிப்புமிகு உறுப்பினர் திரு. பூவராகன் அவர்களுடைய கருத்தையும் ஏற்று, இப்படிப்பட்ட திட்டம் அங்கே செயல் படுத்த முடியாத நிலையிலே இருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

வட. ஆற்காடு மாவட்டத்தில் வேளாண்மைக் கல்லூரி.

24—(*வினா எண் 24) திரு. பெ.சு. திருவேங்கடம் : மற்றும் திரு.கே. பிச்சாண்டி: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் வேளாண்மைக் கல்லூரி துவக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவக்கப்படும் ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேதகிரீஸ்வரர் மலைக்குச் செல்ல இழுவை ரயில் அமைப்பது சம்பந்தமாக இந்தக் கேள்வியில் மலைக்கு போகிறவர்களைச் சுமந்து செல்வதற்கு ஏற்பாடு உண்டு என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்றையதினம் மனிதர்கள் ஒவ்வொருவரும் சுதந்திரமாக வாழ்ந்துக் கொண்டிருக்கிற காலத்தில் மனிதனை மனிதன் சுமந்துச் செல்லக் கூடிய இந்த முறையை இந்த அரசு அனுமதித்துக் கொண்டிருக்கிறதா? அதைத் தடை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே மனிதர்களை மனிதர்கள் சுமந்து கொண்டிருப்பதை நாம் நாடு முழுவதும் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே இதை அரசு தடை செய்யமுடியாது. மனிதர்களாகவே முன் வந்து அதைச் செய்தால்தான் நன்றாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, திருக்கழுக்குன்றம் கோவிலிலே அந்தக் கழுகுகள் வருவதையொட்டித்தான் அந்த ஆலயத்திற்கே பெருமை. ஆனால் அவ்வாறு இழுவை ரயில் போடுவதன் மூலம் அங்கேயிருக்கிற சுற்றுப்புறச்சூழல் பாதிக்கப்பட்டு, அந்தக் கழுகுகள் அங்கே வராமல் போய்விடக்கூடிய சந்தர்ப்பம் இருக்கிறது என்றுதான் பல நாள் பரிசீலனை செய்து அதை அங்கே நிறுத்தியிருக்கிறார்கள். எனவே, அதைத் தொடராமல் இருப்பதற்கு அமைச்சர் அவர்கள் முயற்சி எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, இங்கே மதிப்புமிகு உறுப்பினர் திரு. பூவராகன் அவர்களுடைய கருத்தையும் ஏற்று, இப்படிப்பட்ட திட்டம் அங்கே செயல்படுத்த முடியாத நிலையிலே இருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

வட. ஆற்காடு மாவட்டத்தில் வேளாண்மைக் கல்லூரி.

24—(*வினா எண் 24) திரு. பெ.சு. திருவேங்கடம் : மற்றும் திரு.கே பிச்சாண்டி: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் வேளாண்மைக் கல்லூரி துவக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவக்கப்படும் ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை

1989 ஏப்ரல் 4]

(முற்பகல் 9-10)

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டம் தஞ்சையை விட அதிகமான அளவிலே கிணற்று பாசனத்தைப் பயன்படுத்தி முப்போகம் நெல்லை விளைவித்து, ஏறத்தாழ தமிழகத்தினுடைய அரிசி தேவையைப் பெரும்பாலும் பூர்த்தி செய்கிற ஒரு மாவட்டமாக விளங்கி வருகிறது. ஆனாலும் இருந்த அரசுகள் ஏற்கெனவே அங்கே கல்லூரியை ஆரம்பிப்பதற்காகக் கூட இடம் எல்லாம் பார்த்தார்கள். அது அதே நிலையில் இருந்துகொண்டிருக்கிறது. நம்முடைய மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் அந்த மாவட்டத்தினுடைய முக்கிய நலன் கருதி மாவட்டத்திலே ஒருவேளாண்மைக் கல்லூரியை எதிர்காலத்திலே ஆரம்பிப்பதற்கு முயற்சி எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேள்விப்பட்ட வரையில் வட ஆற்காடு மாவட்டத்தில் வேளாண் குடியைச் சேர்ந்தவர்கள், நல்ல சிறப்பு பயிற்சி பெற்று திறமையாக சாகுபடி செய்து உற்பத்தியை அதிகரிக்கிறார்கள் என்று தெரிய வருகிறது. இதைவிட பின்தங்கிய மாவட்டங்கள் இருக்கின்றன. இப்போது இருக்கின்ற நிதி நிலையையொட்டி அங்கு தற்சமயம் அப்படிப்பட்ட கல்லூரி திறப்பதற்கில்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் சிறந்த முறையில் பயிற்சி பெற்று அதிகமான உணவு உற்பத்தியைச் செய்கிறோம் என்று நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பாராட்டுகிறார்கள். நன்றி. ஆனால், சிறப்பான முறையில் விவசாயத்தைச் செய்கின்ற அந்த மக்களை மேலும் ஊக்குவிக்க அந்தக் குடும்பத்தில் உள்ள பிள்ளைகள் வேளாண்மைத் துறையிலே படித்து பட்டம் பெற தொழிலிலேயும், கல்வியிலேயும் பிற்பட்ட மாவட்டமாக இருந்து வருகின்ற அந்த நிலைமையைப் போக்க எதிர்காலத்தில் நம்முடைய அமைச்சர் அவர்கள்—ஏற்கெனவே இடம் எல்லாம் பார்க்கப்பட்டது, நம்முடைய அமைச்சர் அவர்களுக்கு தெரிந்து இருக்குமோ, தெரியாதோ எனக்குத் தெரியாது—அந்த முயற்சியை எடுக்க முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்பற்றி நிதி ஓரளவிற்கு பெருகிய பிறகு பரிசீலிக்கலாம்.

[1989 ஏப்ரல் 4

திரு. கே. பிச்சாண்டி : தலைவர் அவர்களே, திருவண்ணாமலைப் பகுதி சாத்தூர் அணை பாசன வாய்க்கால்களும் அது மட்டுமல்லாமல் செங்கத்திலே மைய அரசின் ஆயிரக் கணக்கான ஏக்கரிலே விவசாயப் பண்ணைகளும் இருக்கின்ற பகுதியாகவும், விவசாயத்தையே முக்கியத் தொழிலாகக்கொண்ட பகுதியாகவும் இருப்பதால் அங்கே வேளாண்மைக் கல்லூரி துவக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே: அந்த மாவட்டத்திலே விவசாயக் கல்லூரி துவங்கக்கூடாது என்று அரசினுடைய கொள்கை இல்லை. ஆனாலும் நிதி நெருக்கடியைப் பொறுத்தவரையில் அத்தியாவசியமான நேரங்களில், அத்தியாவசியமான மாவட்டங்களில் திறப்பதைப்பற்றி அப்போது ஆராயலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. பி. துரைசாமி (பேரவைத் துணைத்தலைவர் : பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம் நாமக்கல்லில் கால்நடை மருத்துவக்கல்லூரி இருக்கிறது. கால்நடை மருத்துவக் கல்லூரியையொட்டி கால்நடை மருத்துவப்பல்கலைக் கழகமும், ஆராய்ச்சி மையமும் நடைபெறும் என்று முந்தைய அரசு ஆணை பிறப்பித்து, இன்றைக்கு கல்லூரி மட்டும் இயங்கிக் கொண்டிருக்கிறது. கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகம் சென்னைக்கு மாற்றப்படுவதாக அறிந்த கல்லூரி மாணவர்கள் மிகவும் பதட்டம் அடைந்து கொண்டிருக்கிறார்கள். அது போன்ற உத்தேசம் உண்டா என்று உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : பேரவைத் தலைவர் அவர்களே, பிரத்யேகக் கேள்வி போடவும்.

திரு. செ. நூர்முகமது : தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் வேளாண்மை முக்கியமானத் தொழிலாக நடந்து வருகிறது. பெரிய தொழிற்சாலைகளோ, அல்லது தொழிற் கல்வி நிறுவனங்களோ அங்கு இல்லை. ஆகவே, கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு வேளாண்மைக் கல்லூரியை உருவாக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஆரம்பத்திலேயே குறிப்பிட்டேன். எல்லா மாவட்டத்திலும் இயங்குவதில் அரசுக்கு எந்தவித தயக்கமும் இல்லை. ஆனால் இப்படிப்பட்ட பொருளாதார நிலையின் காரணத்தினாலும், இன்னும் சில நெருக்கடி காரணத்தினாலும் அவற்றை தற்போது புதியதாக ஏற்படுத்துவதற்கில்லை.

திரு. கே. சுந்தர் : தலைவர் அவர்களே, ஏற்கெனவே, எந்தெந்த இடத்திலே எவ்வளவு வேளாண்மைக் கல்லூரிகள் இருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன். அதே நேரத்திலே

ஏரி மாவட்டம் என்று அழைக்கப்படுகின்ற செங்கை அண்ணா மாவட்டத்திலும் ஒரு கல்லூரியை அமைக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கு உட்பட்டு தற்போது வேளாண்மைக் கல்லூரிகள் கோயம்புத்தூர், மதுரை, சிதம்பரனார் மாவட்டத்தில் கிள்ளிக்குளம் ஆகிய 3 இடங்களில் இயங்கி வருகின்றன. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தனியாக ஒன்று இயங்கி வருகிறது.

திரு. ஆர். சிங்காரம் : தலைவர் அவர்களே, வேளாண்மைக் கல்லூரி தஞ்சையில் அல்லது ஆடுதுறையில் அமைப்பதற்கு எல்லா வகையான வேலைகளும் முடிந்த நிலையில் தற்போது தஞ்சையிலோ ஆடுதுறையிலோ வேளாண்மைக் கல்லூரி அமைப்பதற்கான திட்டம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, தற்போது இல்லை.

திரு. காதர் பாட்சா என்கிற வெள்ளைச்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையிலே இருக்கின்ற விவசாயக் கல்லூரியினுடைய ஒரு பிரிவை இராமநாதபுரம், பசும்பொன், காமராஜர் மாவட்டம் போன்ற பின்தங்கிய மாவட்டங்களுக்கு அந்தக் கல்லூரியிலிருந்து துணைப் பண்ணை ஏதாவது நிறுவுவதற்கு அரசாங்கத்திடம் உத்தேசம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அதுபற்றிய தகவல் இல்லை.

திரு. அ. இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்டத்தில் வேளாண்மைக் கல்லூரியை ஏற்படுத்த இப்போது செயற்குறிப்பு இல்லை என்று வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். வடாற்காடு மாவட்டம் போளூர் பகுதியில் கஸ்தம்பாடி அருகில் அதனுடைய கிளை ஏற்படுத்துவதற்கு முன்பு அதிகாரிகள் எல்லாம் வந்து பார்த்தார்கள். வேளாண்மைக் கல்லூரி இல்லாவிட்டாலும், வேளாண்மைப் பண்ணையை அங்கே கன்னிகாபுரம் என்ற கிராமத்தில் ஏற்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : கேள்வி கல்லூரியைப் பற்றியது என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1989 ஏப்ரல் 4

கோவை மாநகர ரேஷன் கடைகளில்
உணவுப் பொருள் வழங்கல்.

25—(*வினா எண் 182) திரு.மு. இராமநாதன் : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாநகரில் உள்ள ரேஷன் கடைகளில் இது வரை வழங்கி வந்த ரேஷன் பங்கீட்டில் 20 சதவிகிதம் குறைத்து வழங்கிட உணவு வழங்கு துறை உத்தரவு செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

திரு. மு. இராமநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேள்விக்கே இடம் இல்லை என்று பதில் அளித்து விட்டார்கள். ஆனால் அமைச்சர் மீது நான் நிறைந்த நம்பிக்கை வைத்திருக்கிறேன். நேராக நானே சென்று சில ரேஷன் கடைகளில் விசாரித்தபோது, சிவில், சப்ளைஸ் நிர்வாகத்திலேயிருந்து எங்களுக்கு அப்படி ஒரு உத்தரவு வந்திருக்கிறது என்று கடைக்காரர்கள் சொல்லி, அதன் காரணமாக 20 சதவிகிதம் குறைத்துக் கொடுப்பதாகச் சொல்லி கடைசி வாரத்தினுடைய கடைசியிலே வந்து ரேஷன் வாங்கக் கூடியவர்களைத் திருப்பி அனுப்பி விட்டீர்களே, 20 சதவிகிதம் குறைத்து என்று சொன்னாலும் கூட அந்தக் கடையில் பதிவு செய் திருக்கின்ற எல்லா கார்டு ஹோல்டர்களுக்கும்தானே அந்த 20பர் சென்ட் குறைத்துக் கொடுக்க வேண்டும்; என்றும் ஒரு குறிப்பிட்ட கடையிலே வரக்கூடியவர்களுக்கு மட்டும் இல்லை என்று சொல்கி றீர்களே, அப்படியும் உத்தரவு வந்திருக்கிறதா என்று கேட்ட போது, அப்படி வரவில்லை என்று பதில் சொன்னார்கள். ஆகவே அமைச்சர் அவர்கள் இதுபற்றி ஆராய்ந்து அந்த மாதிரியான தகவல் வந்திருந்தால், சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, அரசாங்கத்திடமிருந்து மட்டுமல்ல, எந்தத் துறையி லிருந்தும் அப்படிப்பட்ட உத்தரவுகள் பிறப்பிக்கப்படவில்லை. இன்னும் சொல்லப்போனால், கோவை மாவட்டத்திலே இந்த மாத இறுதியில் அரிசியினுடைய இருப்பு 10,916 டன் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப் போல ஏதாவது ஒரு ரேஷன் கடையில் அப்படி நடந்து கொண்டு இருப்பார்களே யானால் அவர்கள் மீது நிச்சயமாக இந்த அரசாங்கம் கடுமை யான நடவடிக்கை எடுக்கும்.

1989 ஏப்ரல் 4]

திரு. மு. இராமநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதைப்போலவே, ரேஷன் கார்டிலே இரண்டுபேர் இருக்கிற குடும்பத்தில் கணவன் இறந்து மனைவியோ அல்லது யாரரோ ஒருவர் இறந்துவிட்டு ஒரு நபர் கார்டு என்று வந்து விட்டால், அவர்களுக்கு ரேஷனே கொடுக்க வேண்டியதில்லை என்று உத்தரவு வந்திருப்பதாகவும், ஒன் மேன் கார்டுக்கு எல்லாம் ரெஃப்யூஸ் செய்து அரிசியே கொடுக்கமுடியாது என்று திருப்பி அனுப்பப்படுகிறது நிலை இருக்கின்றது. எனவே, அப்படி ஏதே னும் அரசு உத்தரவு பிறப்பித்து இருக்கிறதா? இல்லையென்றால் அதுபோல் அந்த உத்தரவைக் காரணம் காட்டி அரிசி வழங்காமல் அரசிற்குக் கெட்ட பெயர் உருவாக்கக்கூடியவர்கள் மீது நட வடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட உத்திரவு ஏதும் அரசாங்கம் பிறப்பிக்கவில்லை. ஒரு குடும்பத்திலே ஒரு நபர் மட்டும் இருந்தால் கூட அவர்களுக்கு நான்கு கிலோ அரிசி கொடுக்கவேண்டும் என்ற உத்தரவுதான் அமலிலே இருக்கிறது. பொதுவாக ஒரு குடும்பத்தில் எத்தனை பேர் இருந்தாலும் அதிகபட்சம் 12 கிலோவும், குறைந்த பட்சம் ஒரு நபராக இருந்தால் 4 கிலோவும், இரண்டு நபராக இருந்தால் 8 கிலோவும் என்று தான் அரிசி இப்போது வழங்கப்பட்டு வரு கிறது. இந்தப் புகார் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விவரங்களை அளிப்பார்களேயானால், நிச்சயமாக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரேஷன் கடைகளில், திருச்சியில் கூட 6 கிலோ அரிசி பல கடைகளில் தரப்பட்டதாகவும், கேட்ட போது அரிசி மத்திய சர்க்கார் குறைத்து விட்டதாக அதற்குக் காரணம் சொன்னதாகவும் எனக்குத் தகவல் வந்திருக் கிறது. அதேபோல், சென்னையிலும், பல பகுதிகளிலிருந்து 6 கிலோ அரிசி, அதாவது மாதக்கடைசியில். வாங்கக் கூடியவர் களுக்கு அப்படித் தரப்படுவதாகத் தகவல் வந்திருக்கிறது. அமைச்சர் அவர்கள் அதைப்பற்றி விசாரணை செய்வதற்கு நிச்சயமாக மறுபடியும் தகவல் தெரிந்து தருவதற்கு என்னால் முடியும் என்பதைக் கூறி, அமைச்சர் அதைப்பற்றி என்ன கருத்துக் கூறுகிறார் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர் களே, 15 நாட்களுக்கு ஒரு முறை 6 கிலோ அரிசி சிலர் வாங்கிக் கொள்கிறார்கள். ஒரு மாதத்திற்கு 12 கிலோ அரிசி கொடுக்க வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் நிலை. ஆனால் இந்த அரசுக்கு கெட்ட பெயர் உண்டாக்கவேண்டும் என்று சில

ஊழியர்கள் நடந்து கொள்வதாக புகார்கள் வந்து, ஏறக்குறைய இதுவரையில் 200க்கும் மேற்பட்டவர்கள் வேலை நீக்கம் செய்யப் பட்டு இருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே குறிப்பிட்டதைப் போல எந்த இடத்தில் இப்படிப்பட்ட தவறுகள் நடைபெறுகின்றன என்று குறிப்பிட்டு அரசுக்கு எழுத்து மூலமாக கொடுப்பார்களானால், நிச்சயமாக அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. பெ. ஆசையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய ஆண்டிப்பட்டித் தொகுதியில் ஏற்கனவே அரசு அறிவித்து இருந்த 12 கிலோ அரிசி வழங்குகின்ற முறை கடைப்பிடிக்கப்படாமல் இருக்கிறது. பலவிடங்களில் கார்டு களுக்கு 6 கிலோ அரிசி வழங்குகிறார்கள். இன்னும் பலவிடங் களில் கார்டுகளுக்கு முழுமையாக அரிசி வழங்கப்படுவது இல்லை. அப்படி வழங்குகின்ற அரிசியும் கூட பாசி பிடித்ததைப் போல உணவுக்கு சமைக்கப்பயன்படுத்த முடியாதஅரிசியாக இருக்கிறது. ரேஷன் கடையில் உள்ள விற்பனையாளர்களிடம் அதைத் திருப் பிக்கொடுத்தால் திரும்பப் பெற மறுக்கிறார்கள், எனவே புதிய அரிசியோடு கலந்து விற்கும் உரிமைப் பெற்றவர்களாக இருக்கிறோம் என்று எல்லாம் சொல்லி ஏமாற்று கிறார்கள். எனவே இந்த முறையைத் தவிர்த்து முறையான முறையில் அரிசி வழங்க ஏற்பாடு செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு ந. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் கள் எல்லாம் கேட்ட கேள்விகளின் அடிப்படையில் தமிழ்நாடு முழுவதும் இருக்கக்கூடிய ரேஷன் கடைகளில் பணியாற்றக்கூடிய ஊழியர்கள் இனிமேலாவது முறையாக நடந்து கொள்வார்கள் என்று நம்புகிறேன். இல்லை என்றால், யாராக இருந்தாலும் தயவு தாட்சண்யம் இல்லாமல் இந்த அரசு புகார்கள் வருகின்ற இடத்தில் கடுமையான நடவடிக்கை எடுக்கும். பாசி பிடித்த அரிசியைப்பற்றிச் சொன்னார்கள். அப்படி ஒரு குறிப்பிட்ட ரகம் பஞ்சாபிலிருந்து மத்திய அரசின் தொகுப்பிலிருந்து நமக்கு கொடுத்த அந்த அரிசியின் மீது புகார்கள் வந்ததன் அடிப்படை யில் அதனை திரும்பப் பெறும்படி சிவில் சப்ளைஸ் கமிஷனருக்கு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

பொதுவாக நமக்கு அரிசி மாதம் 40 ஆயிரம் டன் மத்திய தொகுப்பிலிருந்து வருகின்ற காரணத்தால் அவர்கள் எந்த அரிசியை அனுப்புகிறார்களோ, அதைத்தான் நாம் விநியோகிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். மேலும் ஆயிரம் டன்னுக்கு அதிகமாக மத்தியத் தொகுப்பிலிருந்து பெறப்பட்ட— இப்படி மக்களுக்கு உபயோகம் இல்லாத அரிசியை விநியோகிக்கக்கூடாது என்று அரசு உத்திரவு பிறப்பித்திருக்கிறது.

1989 ஏப்ரல் 4]

திரு. கே. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கொடுக்கின்ற 12 கிலோ அரிசி ஒரே சமயத்தில் கொடுக்கப்படவேண்டும். அப்படி வாங்க முடியாதவர்களுக்கு இரண்டாவது தரம் வேண்டுமானால் வாங்கிக் கொள்ளலாம் என்று நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த அவையில் உறுதி சொல்லியிருக்கிறார்கள். அந்த நியாய விலைக் கடையில் கொடுக்கக்கூடிய அத்தனைப் பொருட்களும் ஒரேசமயத்தில் ரேஷன் கார்டுகளுக்கு கொடுக்கப்படும் என்ற முறை அமலுக்கு வந்தால் இந்த தொல்லை இருக்காது. மேலும் இதற்கு கண் காணிப்பு என்பது மிக முக்கியம். ஏனென்றால் பழைய பெருச் சாளிகள் பலர் இருக்கிறார்கள். அவர்கள் பெரிய தொல்லைகளை நமக்கு உண்டாக்கிக் கொண்டு இருப்பார்கள். அதைத் தடுப்பதற் கான நடவடிக்கையை எடுப்பார்களா? ஒருவர் மட்டும் இருக்கிற கார்டு பற்றி எனக்கு ரிப்போர்ட்டே வந்திருக்கிறது. அதை வேண்டுமானால் நான் அனுப்பி வைக்கிறேன். 4, 5 உறுப்பினர் களைக்கொண்ட கார்டை வாங்கிக்கொண்டு இருந்த ஒரு குடும்பத்தில் 2 பேர் ஊருக்குப் போனதால் அவர், அதை கழித்து நியாயமாக ஒரே ஒருவருடைய பெயரைப் போட்டுக்கொண்டு போனதற்கு ஒருவருக்கு என்றால் ரேஷன் கொடுப்பது இல்லை என்று உத்தரவு வந்திருக்கிறது என்று, கோவை 11- சர்க்கிள் ரேஷனிங் ஆபீசர் அவரை திருப்பி அனுப்பி விட்டாராம். அவர் எனக்கு ரிப்போர்ட் கொடுத்திருக்கிறார். அதன்பேரில் உடனடியாக நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மார்ச் மாதம் 1 ஆம் தேதியி லிருந்து ரேஷன் கார்டுகளுக்கு எல்லா பொருட்களும் அவர்கள் கேட்கின்ற நாட்களில் கொடுக்கப்படவேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டு அது சரியாக அமல்படுத்தப்படுகிறதா என்று சோதனையிட்டபோது சென்னையில் மட்டும் ஏறக்குறைய 1040 ரேஷன் கடைகளில் ஒரே நாளில் சோதனையிட்டபோது, 6 கடைகளைத் தவிர மீதி எல்லாக் கடைகளிலும் அப்படி வினி யோகிக்கப்படுவதாக தகவல் வந்திருக்கிறது. தொடர்ந்து மாண்பு மிகு உறுப்பினர்கள் இங்கே இந்தத் துறையில் அதிக ஆர்வம் காட்டுகின்ற காரணத்தால் வாரத்திற்கு ஒரு முறை சோதனை யிடுகின்ற அந்தத் திட்டத்தையும் அரசு பரிசீலிக்கும். அதைப் போலவே கோவையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஒரு நபருக்கு கொடுக்க முடியாது என்று சொன்னதாகச் சொன்னார்கள். இன்றே அந்த குறிப்பிட்ட நபர் மீது அரசு நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : காலையிலே ஒரே மயக்கமா?

[1989 ஏப்ரல் 4

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : என்னுடைய கட்சி உறுப்பினரோடு பேசிக்கொண்டு இருந்தேன். மன்னிக்க வேண்டும். கோவை மாவட்டத்தில் பல்வேறு கடைகளில் 5, 6 கிலோ அரிசிக்கு மேல் வழங்கப்படுவது இல்லை. அது மட்டும் அல்ல, சிலவிடங்களில் குறிப்பாக பெரியார் மாவட்டத்தில் பின்தங்கிய பகுதியில் 2 கிலோ அல்லது 3 கிலோ அரிசி தான் இன்னமும் கொடுக்கிறார்கள். அந்தக் கடையின் பெயரை வேண்டுமானால் நான் கொடுக்கிறேன். 10 கிலோ மீட்டர், 12 கிலோ மீட்டர் தூரம் நடந்துசென்று 2 கிலோ, 3 கிலோதான் வாங்கி வருகிறார்கள். அப்படிப்பட்ட கடைகளின் மீது உரிய நடவடிக்கையை அரசு எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. பெ. சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ரேஷன் கார்டுகள் பல காலத்திற்கு முன்னாலே விநியோகிக்கப்பட்டவை. ரேஷன் கார்டுகளில் பல கார்டுகள் அடமானத்திலே இருக்கின்றன. அதிலே குறைந்தது 30 சதவீதம் போலி கார்டுகள். எனவே அமைச்சர் அவர்கள் இதைப் பரிசீலித்து, சரி செய்வதற்கு ஏதாவது நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரேஷன் கார்டுகள் எப்பொழுதும் வழங்கப்படுவதில்லை. ஆண்டு தோறும் வழங்கப்படுகிறது. அப்படி வழங்கப்படுகின்ற ரேஷன் கார்டுகள், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல, சில இடங்களிலே அடகு பிடிக்கிறார்கள். அதன் மீது கடன் கூட வாங்குகிறார்கள். இந்தப் புகார்களெல்லாம் அரசாங்கத்திற்கு வந்ததற்குப் பிறகு இந்த இரண்டு மாத காலத்தில், இதுவரையில் ஏறக்குறைய 1 லட்சத்து 40 ஆயிரம் போகஸ் கார்டுகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. தமிழகத்தைப் பொறுத்தவரையில் குறைந்தது 5 இலட்சம் கார்டுகளாவது இப்படி இருக்கக் கூடும் என்று அதிகாரிகளாலே நம்பப்படுகிறது. அந்தக் கார்டுகளைக் கண்டுபிடிக்கின்ற வேலைகளில் எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களும் ஈடுபட்டிருக்கிறார்கள்.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1989 ஏப்ரல் 4]

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு தொழில் பயிற்சிப் பள்ளி.

26—(*வினா எண். 797) திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு தொழில் பயிற்சிப் பள்ளி நிறுவும் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறுவப்படும் ?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் தொழிற் பயிற்சி நிலையம் அமைப்பதற்கான செயற் குறிப்பு தற்போது இல்லை. எனவே அடுத்த கேள்விக்கு இடமில்லை.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு ஒவ்வொரு யூனியனிலும் படித்தவர்கள் நிறைந்து இருக்கின்றார்கள். 200 ரூபாய் சம்பளத்திலே வேலை அளிப்பதற்கான சில திட்டங்களை அரசு போட்டிருக்கிறது. ஐ. ஆர். டி. பி., ஐ.யூ. டி.பி. மூலமாக கடன் வாங்கி தொழிற் நடத்துவதுகூட தெரியாமல் அவர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகையால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் மறு பரிசீலனை செய்து, ஒரு யூனியனுக்குக் கூட வேண்டாம். ஒவ்வொரு தொகுதிக்காவது இப்படிப்பட்ட பயிற்சி நிலையத்தை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு ஒன்றியத்திற்கு ஒரு தொழிற் பயிற்சி நிலையம் என்றாலும் கூட, 384 ஒன்றியங்களுக்கும் 192 கோடி ரூபாய் வருகிறது. அந்தப் பெரும் தொகையைக் கணக்கிட்டுத்தான் இப்போது அரசாங்கம் இருக்கின்ற நிலையில் அதை ஏற்றுக்கொள்ள இயலவில்லை. என்றாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற கருத்து நல்ல கருத்து என்கின்ற அடிப்படையில், அந்த இலக்கு நோக்கி அரசினுடைய நடவடிக்கைகள் அமையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இது பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று சொல்லியதற்கு என்னுடைய பாராட்டுதலையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கின்றேன். அதை நிச்சயமாகச் செய்ய வேண்டும். காரணம், பி.ஏ., படித்தவர்கள், எம். ஏ. படித்தவர்கள் போன்ற

வர்களுக்கு பேங்க் மூலமாக சொல்லி அவர்ளுக்கு 25 ஆயிரம் ரூபாய், 30 ஆயிரம் ரூபாய் வாங்கிக் கொடுத்தாலும், அந்தத் தொழிலை எப்படி நடத்துவது என்று தெரியாமல் திண்டாடுவதுடன், இரண்டாண்டுகளுக்கு உள்ளாக அந்தப் பணத்தையும் கட்டுவது இல்லை. அந்தக் கடனைப் பெற்று தொழிலையும் செய்ய முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. நான் இங்கு கூறியதைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு விட்டீர்கள். இருந்தாலும், இதைக் கண்டிப்பாக அமல் நடத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்துக்கள் பரிசீலிக்கப்படும்.

திரு. ப. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார், ஏராளமான இடங்களில் தொழிற் பயிற்சி நிலையங்களை அமைத்து அதன் மூலமாக ஏராளமானவர்கள் படித்து விட்டு, 5 ஆண்டு, 7 ஆண்டுக் காலமாக ஆயிரம் கணக்கில் வேலையில்லாமல் இருக்கிறார்கள். இதையெல்லாம் உத்தேசித்து இப்போது இருக்கின்ற, பயிற்சி பெற்றவர்களுக்கு வேலை அளிக்கின்ற வகையில், தனியார் நடத்துகின்ற அந்த பயிற்சிப் பள்ளிகளை நிறுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐ.டி.ஐ. என்பது தொழிற் பயிற்சி நிலையம். இது என்னுடைய துறையைச் சார்ந்த ஒன்று இதன் மூலமாக பயிற்சி பெற்றவர்கள் ஓரளவிற்கு வேலையில்லாமல் இருக்கின்றார்கள். அவர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்துவதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தனியார் பயிற்சி நிலையங்களுக்கு தடை விதிக்கப்படுமா என்று கேட்டார்கள். தனியார் தொழிற் பயிற்சி நிலையங்களுக்கு Affiliation கொடுக்கின்றபொழுது National Vocational Council என்கின்ற மத்திய அமைப்பின் நிபந்தனைகளுக்கு உட்பட்டுத்தான் அனுமதி வழங்கப்படுகிறது. அந்த நிபந்தனைகளை யாராவது மீறி இருந்தால் தான் அந்த அனுமதியை ரத்து செய்ய இயலும். எனவே, அந்த வகையில் அரசு கவனமாகப் பார்த்து, நிபந்தனைகளை மீறியிருந்தால் ரத்து செய்வதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளும்.

(முற்பகல் 9-30)

திரு. ஆர். சாமிநாதன் : தலைவரவர்களே, எனது தொகுதியில் திருமங்கலம் ஒன்றியத்தில் செக்கானூரில் கடந்த 20 ஆண்டு காலமாக ஐ.டி.ஐ. தொழிற் பயிற்சி நிலையம் ஒன்று நடந்து கொண்டிருக்கிறது. அது பிற்பட்டோர் மாணவர்களுக்கும், சீர்மரபினர் மாணவர்களுக்கும் நடைபெறுகின்ற ஒரு பயிற்சி நிலையம். அங்கே 20 ஆண்டு காலமானாலும

1989 ஏப்ரல் 4]

மிகவும் பிற்பட்ட முறையிலேதான் தொழிற் பயிற்சி கற்பிக்கப் படுகிறது. இந்த நிலையை மாற்றி, நவீன முறையிலான தொழிற் பயிற்சி அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்தின் அடிப்படையில் அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளும்.

திரு. கோ. வீரையன் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனியார் நடத்துகின்ற தொழிற் பயிற்சி மையங்கள் அரசின் விதிமுறைகளுக்கு உட்பட்டு நடைபெறாமல் இருந்தால் தான் அவற்றை எடுக்க முடியும் என்று சொன்னார்கள். குறிப்பாக, ஏராளமானவர்கள் அரசின் அனுமதி பெற்றும், அனுமதி பெறாமலும் தொழில் பயிற்சிப் பள்ளிகளை தொடங்கி, மாணவர்களிடம் நன்கொடை என்ற பெயரால் ஏராளமான பணத்தைப் பெற்றும் அந்த மாணவர்கள் படித்த பிறகு பரீட்சை எழுத முடியாமல் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல், தனியார் ஆரம்பிக்கும் தொழிற் பயிற்சிப் பள்ளிகளுக்கு சரியான கட்டட வசதி இல்லாத காரணத்தாலும் மாணவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இவற்றை எல்லாம் பரிசீலனை செய்து, முழுமையாக, 'ரெகுலரைஸ்' பண்ணி, விதிமுறைகளுக்கு உட்படாமலும் உரிய கட்டட வசதி இல்லாமலும் இருக்கிற தனியார் பள்ளிகளை அரசே ஏற்று நடத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையில் எங்காவது தொழிற் பயிற்சி நிலையங்கள் 'இன்ஃப்ரா ஸ்ட்ரக்சர்'' தேவையான உபகரணங்கள் இல்லாமல் நடைபெறுவதாகத் தெரிந்தால் 'அஃபிலியேஷன்' என்ற அந்த நடவடிக்கையை ரத்து செய்ய இந்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய ஆலங்குளம் தொகுதி தொழில் வளர்ச்சி இல்லாத ஒரு தொகுதி. அங்கே இருக்கிற மாணவர்கள் தொழிற் கல்வி இல்லாமல் துன்புறுகிறார்கள். அவர்கள் தொழிற்கல்வி படிக்க வசதிசெய்து கொடுத்தால், ஒரு ஐ. டி. ஐ. ஏற்படுத்திக் கொடுத்தால் அந்த மாணவர்கள் சுய வேலைவாய்ப்பு பெறுவதற்குக் கூட வசதியாக இருக்கும் என்பதால் அதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வேண்டுகோள் அரசால் பரிசீலிக்கப்படும்.

புதிய குழந்தைகள் நல மையங்கள் தொடங்குதல்.

(*27—வினா எண். 223) திரு. துரை சந்திரசேகரன்: மாண்புமிகு சமூக நலம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குழந்தைகள் நல மையங்கள் இல்லாத கிராமங்களில் புதிய குழந்தைகள் நல மையங்கள் தொடங்கும் உத்தேசம்அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தைகள் நல மையங்கள் இல்லாத கிராமங்களில் புதிய குழந்தைகள் நல மையங்களைத் தொடங்குகிற உத்தேசம் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை என்பதால் இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. துரை சந்திரசேகரன் : தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் ஏழை விவசாயக் கூலித் தொழிலாளர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அவர்களின் குழந்தைகளைப் பராமரிக்கத் தஞ்சை மாவட்டத்தில் அதிகமான குழந்தைகள் நல மையங்களை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவரவர்களே, வரும் நிதியாண்டில் எந்த எந்த மாவட்டத்தில் புதிய குழந்தைகள் நல மையம் ஆரம்பிக்க தேவை ஏற்படும் என்பதை ஆராய்ந்து அரசுக்கு செயற் குறிப்பு அனுப்பச் சொல்லி ஆங்காங்கே இருக்கிற மாவட்ட சமூக நல அதிகாரிகளுக்கு அரசு சுற்றறிக்கை அனுப்பியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவர்களுடைய பகுதியில் குழந்தைகள் அதிகமாக இருக்கிற இடத்தில் இப்படிப்பட்ட மையங்கள் தேவை என்று கருதினால் தஞ்சை மாவட்ட சமூக நல அதிகாரியைச் சந்தித்து அதற்கான விவரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

திரு. துரை சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தைகள் நல மையங்களில் பட்டதாரி ஆசிரியர்களை நியமித்து, நர்சரி பள்ளிகளைப் போன்று அவற்றை மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இந்தக் குழந்தைகள் நல மையங்கள் இப்படிப்பட்ட நர்சரிப் பள்ளிகளாகத் தான் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. குழந்தைகள் நல

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வேண்டுகோள் அரசால் பரிசீலிக்கப்படும்.

புதிய குழந்தைகள் நல மையங்கள் தொடங்குதல்.

(*27—வினா எண். 223) திரு. துரை சந்திரசேகரன்: மாண்புமிகு சமூக நலம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குழந்தைகள் நல மையங்கள் இல்லாத கிராமங்களில் புதிய குழந்தைகள் நல மையங்கள் தொடங்கும் உத்தேசம்அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தைகள் நல மையங்கள் இல்லாத கிராமங்களில் புதிய குழந்தைகள் நல மையங்களைத் தொடங்குகிற உத்தேசம் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை என்பதால் இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. துரை சந்திரசேகரன் : தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் ஏழை விவசாயக் கூலித் தொழிலாளர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அவர்களின் குழந்தைகளைப் பராமரிக்கத் தஞ்சை மாவட்டத்தில் அதிகமான குழந்தைகள் நல மையங்களை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவரவர்களே, வரும் நிதியாண்டில் எந்த எந்த மாவட்டத்தில் புதிய குழந்தைகள் நல மையம் ஆரம்பிக்க தேவை ஏற்படும் என்பதை ஆராய்ந்து அரசுக்கு செயற் குறிப்பு அனுப்பச் சொல்லி ஆங்காங்கே இருக்கிற மாவட்ட சமூக நல அதிகாரிகளுக்கு அரசு சுற்றறிக்கை அனுப்பியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவர்களுடைய பகுதியில் குழந்தைகள் அதிகமாக இருக்கிற இடத்தில் இப்படிப்பட்ட மையங்கள் தேவை என்று கருதினால் தஞ்சை மாவட்ட சமூக நல அதிகாரியைச் சந்தித்து அதற்கான விவரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

திரு. துரை சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தைகள் நல மையங்களில் பட்டதாரி ஆசிரியர்களை நியமித்து, நர்சரி பள்ளிகளைப் போன்று அவற்றை மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இந்தக் குழந்தைகள் நல மையங்கள் இப்படிப்பட்ட நர்சரிப் பள்ளிகளாகத் தான் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. குழந்தைகள் நல

1989 ஏப்ரல் 4]

அமைப்பாளர்கள் என்று அங்கே நியமனம் செய்யப்பட்டிருக்கிறவர்களுக்கு இந்தக் கல்வியைக் கற்றுக் கொடுப்பதற்கு பயிற்சி அளித்து, நர்சரிப் பள்ளிகளுக்கு ஒப்ப அங்கே கல்வி வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாகக் குழந்தைகள் நல மையங்கள் தொடங்குவதற்குரிய செயற் குறிப்பைப் பரிசீலிக்கும் போதும் கிராமப்புறங்களில் தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கக் கூடிய காலனிப் பகுதிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து அங்கே குழந்தைகள் நல மையங்களைத் துவங்குவதைக் கணக்கில் எடுத்துக் கொண்டு பரிசீலிக்கப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு குழந்தைகள் நல மையம் தொடங்குவதற்குக் குறைந்தபட்சம் 70 குழந்தைகள் அந்தப் பகுதியில் இருக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்புகிற இடத்தில் அப்படி பயன்பெறத்தக்க 70 குழந்தைகள் இருப்பார்களேயானால், கிராமப் பகுதிகளில் அது எந்தப் பகுதியாக இருந்தாலும் மையங்கள் அமைத்துத் தரப்படும்.

திரு. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னார்க்காடு மாவட்டத்தில் வல்லம் ஊராட்சி ஒன்றியத்தில் இப்படிப்பட்ட குழந்தைகள் நல மையங்கள் தொடங்குவது பற்றி அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. எனவே, ஏற்கெனவே அரசின் பரிசீலனையில் இருந்து வந்திருக்கிற இடங்களிலாவது புதிய குழந்தைகள் நல மையம் அமைக்கப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட ஒரு குழந்தைகள் நல மையத்தினைப் பற்றி அறிய விரும்பினால் அது குறித்துத் தனியாகக் கேள்வி எழுப்பப்படுமேயானால், அது எந்த நிலையில் இருக்கிறது என்பதை அவருக்குத் தெரிவிக்க இயலும்.

திரு. மா. சுந்தரதாஸ் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய மாவட்டத்தில் 70 குழந்தைகள் என்றில்லாமல் 10 அல்லது 15 குழந்தைகள் இருக்கக்கூடிய மையங்கள் கூட சில இடங்களில் இருக்கின்றன. எனவே, அத்தகைய மையங்களை 70 அல்லது 80 குழந்தைகள் இருக்கின்ற பகுதிகளுக்கு மாற்றித் தருகிற உத்தேசம் உள்ளதா ? இன்னும் சொல்லப் போனால் 5 அல்லது 6 குழந்தைகள் இருக்கின்ற மையங்கள் கூட இருப்பதை கணக்கில் எடுத்துக் கொள்ளலாம் எனவே அப்படி 5, 6 குழந்தைகள் வருகின்ற இடங்களாக

இருந்தால் அந்த மையங்களைக் குழந்தைகள் அதிகமாக வருகின்ற பகுதிகளுக்கு மாற்றி மையங்கள் அமைத்துக் கொடுக்கின்ற உத்தேசம் அரசுக்கு உள்ளதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறைந்தபட்சம் 60 அல்லது 70 குழந்தைகள் இருக்க வேண்டும் என்று தான் அரசு அறிவிப்பு செய்திருக்கிறது. நானும் பல மையங்களைச் சென்று பார்த்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவது போல் 5, 6 குழந்தைகள் என்ற குறுகிய எண்ணிக்கையில் இல்லை; 25, 35 என்ற அளவில் சில மையங்களில் குழந்தைகள் பயன் பெற்றுக் கொண்டிருந்தார்கள். நான் அதிகாரிகளை அது பற்றிக் கேட்ட நேரத்தில் இந்த மையத்திற்குக் குழந்தைகளைக் கூட்டி வருகிற ஆயாக்களினுடைய முறையீடு என்னவென்றால், இந்த மையங்கள் நீண்ட தொலைவில் அமைக்கப்பட்டிருப்பதால் குழந்தைகளை வெகுதொலைவில் இருந்து அழைத்து வர சிரமமாக இருக்கிறது; எனவே தான் குழந்தைகள் பெருமளவில் இந்த மையங்களுக்கு வந்து பயன்பெற முடியாத நிலைமை இருக்கிறது என்று அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இவைகளையெல்லாம் அரசு ஆராய்ந்து குழந்தைகள் அதிகம் இருக்கிற, மக்கள் அதிகம் வசிக்கிற பகுதிகளுக்கு இப்படிப்பட்ட மையங்களை மாற்றி அமைக்கிற உத்தேசம் அரசின் செயற் குறிப்பில் உள்ளது.

ஆதி திராவிட மாணவர் விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவர்களுக்கு உதவித் தொகை.

28—(*வினா எண். 4) திரு. என். பழனிவேல் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆதி திராவிட மாணவர்களுக்கான விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டுவரும் உதவித் தொகையை உயர்த்திக் கொடுக்கும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1988–89 ஆம் கல்வியாண்டிலிருந்து விடுதியில் தங்கிப் பயிலும் ஆதி திராவிட பழங்குடி மற்றும் மதம் மாறிய கிறித்துவ ஆதி திராவிட மாணவர்களுக்கு மாநில அரசு கல்வி உதவித் தொகைத் திட்டத்தின் கீழ் மாதம் ஒன்றுக்கு ரூ. 25 வீதம் உயர்த்தித் தர ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை ரூ. 25 வீதம் அதிகப்படுத்தப்படும் என்று இங்கே அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நாள்

இருந்தால் அந்த மையங்களைக் குழந்தைகள் அதிகமாக வருகின்ற பகுதிகளுக்கு மாற்றி மையங்கள் அமைத்துக் கொடுக்கின்ற உத்தேசம் அரசுக்கு உள்ளதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறைந்தபட்சம் 60 அல்லது 70 குழந்தைகள் இருக்க வேண்டும் என்று தான் அரசு அறிவிப்பு செய்திருக்கிறது. நானும் பல மையங்களைச் சென்று பார்த்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவது போல் 5, 6 குழந்தைகள் என்ற குறுகிய எண்ணிக்கையில் இல்லை ; 25, 35 என்ற அளவில் சில மையங்களில் குழந்தைகள் பயன் பெற்றுக் கொண்டிருந்தார்கள். நான் அதிகாரிகளை அது பற்றிக் கேட்ட நேரத்தில் இந்த மையத்திற்குக் குழந்தைகளைக் கூட்டி வருகிற ஆயாக்களினுடைய முறையீடு என்னவென்றால், இந்த மையங்கள் நீண்ட தொலைவில் அமைக்கப்பட்டிருப்பதால் குழந்தைகளை வெகுதொலைவில் இருந்து அழைத்து வர சிரமமாக இருக்கிறது ; எனவே தான் குழந்தைகள் பெருமளவில் இந்த மையங்களுக்கு வந்து பயன்பெற முடியாத நிலைமை இருக்கிறது என்று அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இவைகளையெல்லாம் அரசு ஆராய்ந்து குழந்தைகள் அதிகம் இருக்கிற, மக்கள் அதிகம் வசிக்கிற பகுதிகளுக்கு இப்படிப்பட்ட மையங்களை மாற்றி அமைக்கிற உத்தேசம் அரசின் செயற் குறிப்பில் உள்ளது.

ஆதி திராவிட மாணவர் விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவர்களுக்கு உதவித் தொகை.

28—(*வினா எண். 4) திரு. என். பழனிவேல் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆதி திராவிட மாணவர்களுக்கான விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டுவரும் உதவித் தொகையை உயர்த்திக் கொடுக்கும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1988–89 ஆம் கல்வியாண்டிலிருந்து விடுதியில் தங்கிப் பயிலும் ஆதி திராவிட பழங்குடி மற்றும் மதம் மாறிய கிறித்துவ ஆதி திராவிட மாணவர்களுக்கு மாநில அரசு கல்வி உதவித் தொகைத் திட்டத்தின் கீழ் மாதம் ஒன்றுக்கு ரூ. 25 வீதம் உயர்த்தித் தர ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை ரூ. 25 வீதம் அதிகப்படுத்தப்படும் என்று இங்கே அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நாள்

1989 ஏப்ரல் 4]

கேட்டுக்கொள்வது, இந்த உதவித் தொகை எந்த ஆண்டு நிர்ணயிக்கப்பட்டது? இன்றைக்கு அந்த மாணவர்கள் தங்கிப் பயிலக்கூடிய விடுதிகளில் எந்தவிதமான வசதிகளும் இல்லை. குடி தண்ணீர் வசதி இல்லை; குளியலறை வசதி இல்லை; கொசுத் தொல்லை மிக அதிகமாக உள்ளது; உணவின் தரம் மிக மோசம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது வருணனையா அல்லது வினாவா?

திரு. என். பழனிவேல்: தலைவர் அவர்களே, நான் குறைகளைத் தான் சொல்கிறேன். அவற்றைச் சொல்லித்தான் ஆக வேண்டும். இப்படிப்பட்ட குறைகள் எல்லாம் இருப்பதைக் கணக்கில் எடுத்துக் கொண்டு அவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகையை அதிகரித்துக் கொடுக்க அரசு உத்தர விடுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன்: பேரவைத் தலைவர் அவர்களே, உதவித் தொகை ரூ. 25 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. ஆனால் 1987 ஆம் ஆண்டு தொழில் சார்ந்த படிப்புக்கு ரூ. 75-ம், பட்டப் படிப்புகளுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 70-ம், தொழில் மற்றும் நுட்பப் படிப்புக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 60-ம் என்ற வகையில் உயர்த்தப்பட்டு, அது இதுவரையில் இருந்து வந்தது. ஆனால் தொழில் சார்ந்த படிப்புகளுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 100 ஆகவும், பட்டப் படிப்புக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 95 ஆகவும், தொழில் மற்றும் நுட்பப் படிப்புகளுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 85 ஆகவும் தற்போது உயர்த்தப் பட்டுள்ளது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

(முற்பகல் 9-40)

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்படிப்பு, என்றால் இன்ஜினியரிங் படிக்கிறவர்கள், டாக்டருக்குப் படிக்கிறவர்கள் எல்லாம் அதிலே அடங்குவார்கள். அவர்களுக்கு மாதம் ரூபாய் 100 என்பது போதுமானதா என்பதை இந்த அரசு பரிவோடு கவனிக்க வேண்டும். அத்தோடு இன்றைக்கு அந்த உதவித் தொகை பெறக்கூடிய தகுதியை ரூபாய் 6 ஆயிரத்திலிருந்து ரூபாய் 15 ஆயிரமாக நேற்றையதினம் உயர்த்தி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அந்த அடிப்படையிலே இதையும் கணக்கிட்டு உயர்த்துவதற்கு அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன்: பேரவைத் தலைவர் அவர்களே, இதைப்பற்றி அரசு பரிசீலனை செய்யும்.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் ஒவ்வொரு விடுதியிலேயும் மாணவர்களுக்கு பயிற்றுவிப்பதற்காக டியூட்டர்கள் நியமித்தார்கள். அப்போது மாதம் 50 ரூபாய் ஊதியம் அளிக்கப்பட்டது. அந்த ஊதியத்திற்கு எந்த ஆசிரியரும் விடுதிகளுக்குச் செல்லவில்லை. எனவே, டியூட்டர்களுக்குரிய தொகையை அதிகப்படுத்தி, ஆதி திராவிடர்கள் விடுதிகளுக்கெல்லாம் டியூட்டர்களை நியமிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பற்றியும் அரசு பரிசீலிக்கும்.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர்கள் நலத்துறைக்கு ஒதுக்கப்பட்ட பணத்தில் ஏறத்தாழ 15 கோடி ரூபாய் அந்த மாணவர்களுக்கு கல்வி வழங்குகிற வகையிலே செலவழிக்கப்படுகிறது. ஆகவே, அந்த 15 கோடி ரூபாயை கல்வித் துறை ஏற்றுக்கொண்டு, இந்த 15 கோடி ரூபாயை மற்றப் பணிகளுக்கு ஒதுக்குவதற்கு அரசு வழி செய்யுமா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி தனிக் கேள்வி எழுப்பினால் விவரங்கள் தெரிவிக்கப்படும்.

திரு. இரா. மோகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மாணவர்களுக்கான பல விடுதிகளுடைய நிலைமை இன்றைக்கு மிகமோசமான நிலைமையிலே இருப்பதை கண்கூடாக மாண்புமிகு அமைச்சர் அவர்களே காணலாம். பல விடுதிகளை நேரிலே பார்க்கின்ற வாய்ப்பு பெற்றவன் நான். ஆகவே சொல்கிறேன். குடிநீர் வசதிகூட இல்லாத நிலையில் பல்வேறு விடுதிகள் பாழ்பட்ட நிலை, மாணவர்களுடைய எண்ணிக்கைக்கு மேலும் அதிகமான மாணவர்கள் அதிலே தங்குகின்ற சூழ்நிலை ஆகிய இத்தனையும் அந்த ஆதி திராவிடர் மாணவர்களுடைய குடியிருப்பிலே இருக்கின்றன. அவைகளையெல்லாம் மாற்றுவதற்கு, சீர்திருத்துவதற்கு அரசு என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுற்றுப்பயணம் செல்லுகின்ற நேரத்தில் அந்தந்த மாவட்டங்களிலே இருக்கின்ற இப்படிப்பட்ட ஆதி திராவிடர் மாணவர் விடுதிகளை எல்லாம் நேரிலே சென்று பார்க்கக்கூடிய முறையில் நடவடிக்கை ஏதாவது அவர்கள் மேற்கொள்ள இருக்கின்றார்களா என்ற அந்த விவரங்களை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் மாத்திரமல்ல மாண்புமிகு உறுப்பினர் அவர்களைப் போன்றவர்கள்கூட, எல்லாக் கட்சியினுடைய உறுப்பினர்களும்கூட ஆதி திராவிடர்

1989 ஏப்ரல் 4]

களுடைய நலனை முன்னிட்டும், மாணவர்களுடைய நலனை முன்னிட்டும், அதுபோன்ற இடங்களுக்குச் சென்று அங்கேயிருக்கின்ற குறைகளை எழுதி அரசுக்கு அனுப்புவார்களானால், உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வழி ஏற்படும்.

திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மாணவர்களுடைய விடுதிகள் பெரும்பாலும் தனியார் கட்டிடங்களில் உள்ளன. அந்தக்கட்டடங்களில் போதிய இடவசதி இல்லாத நெருக்கடியில் பாதகமான சூழ்நிலை உருவாகிறது. அந்த மாணவர்கள் தேர்வு பெறுவதில் கூட இயலாமல் தவறுவதற்கும் இது காரணமாக அமைகிறது. எனவே, அரசு பரிசீலித்து அனைத்துக் கட்டடங்களையும் அரசு கட்டடங்களாக உருவாக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது அரசினுடைய நிதிநிலைமையையொட்டி பரிசீலனை செய்யப்படும்.

திரு. செங்கை சிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே உள்ள பெரம்பூர் நெடுஞ்சாலையில் ஆதிதிராவிடர் அரசினர் கல்லூரி மாணவர்கள் விடுதி மிக மோசமான நிலையிலே இருக்கிறது. அதே நேரத்திலே, அதிலே தங்குவதற்குப் போதிய வசதியும் இல்லாமல் நூற்றுக்கணக்கான மாணவர்கள் அங்கே தங்கியிருக்கிறார்கள். அதை மாற்றியமைக்கக்கூடிய அல்லது புதிய கட்டடத்தைக் கட்டுவதற்கான செயற்குறிப்பு இருக்கிறதா ? அப்படியென்றால் அதை என்னுடைய தொகுதியிலே கட்டித்தர ஏதாவது வாய்ப்பு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பற்றிய குறிப்புகளுக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக்கேள்வி எழுப்பலாம்.

திரு. எம். முகமது சித்திக் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதம் மாறிய ஆதி திராவிடர் மக்களுக்கு காலனி வீடுகள் கட்டித் தரப்படுமா ? முன்பு கட்டிய வீடுகளை அரசு செப்பனிட முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி தனிக் கேள்வி எழுப்ப வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

புக்கத்துறை கிராமத்தில் கால்நடை மருந்தகக் கட்டடம்.

29—(*வினா எண் 68) திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டம், புக்கத்துறை கிராமத்தில் கால்நடை மருந்தகக் கட்டடம் கட்டப்படாமல் இருப்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதனைக் கட்டி முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா ?

1989 ஏப்ரல் 4]

களுடைய நலனை முன்னிட்டும், மாணவர்களுடைய நலனை முன்னிட்டும், அதுபோன்ற இடங்களுக்குச் சென்று அங்கேயிருக்கின்ற குறைகளை எழுதி அரசுக்கு அனுப்புவார்களானால், உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வழி ஏற்படும்.

திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மாணவர்களுடைய விடுதிகள் பெரும்பாலும் தனியார் கட்டிடங்களில் உள்ளன. அந்தக்கட்டடங்களில் போதிய இடவசதி இல்லாத நெருக்கடியில் பாதகமான சூழ்நிலை உருவாகிறது. அந்த மாணவர்கள் தேர்வு பெறுவதில் கூட இயலாமல் தவறுவதற்கும் இது காரணமாக அமைகிறது. எனவே, அரசு பரிசீலித்து அனைத்துக் கட்டடங்களையும் அரசு கட்டடங்களாக உருவாக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது அரசினுடைய நிதிநிலைமையையொட்டி பரிசீலனை செய்யப்படும்.

திரு. செங்கை சிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே உள்ள பெரம்பூர் நெடுஞ்சாலையில் ஆதிதிராவிடர் அரசினர் கல்லூரி மாணவர்கள் விடுதி மிக மோசமான நிலையிலே இருக்கிறது. அதே நேரத்திலே, அதிலே தங்குவதற்குப் போதிய வசதியும் இல்லாமல் நூற்றுக்கணக்கான மாணவர்கள் அங்கே தங்கியிருக்கிறார்கள். அதை மாற்றியமைக்கக்கூடிய அல்லது புதிய கட்டடத்தைக் கட்டுவதற்கான செயற்குறிப்பு இருக்கிறதா ? அப்படியென்றால் அதை என்னுடைய தொகுதியிலே கட்டித்தர ஏதாவது வாய்ப்பு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பற்றிய குறிப்புகளுக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக்கேள்வி எழுப்பலாம்.

திரு. எம். முகமது சித்திக் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதம் மாறிய ஆதி திராவிடர் மக்களுக்கு காலனி வீடுகள் கட்டித் தரப்படுமா ? முன்பு கட்டிய வீடுகளை அரசு செப்பனிட முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி தனிக் கேள்வி எழுப்ப வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

புக்கத்துறை கிராமத்தில் கால்நடை மருந்தகக் கட்டடம்.

29—(*வினா எண் 68) திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு காலநடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டம், புக்கத்துறை கிராமத்தில் கால்நடை மருந்தகக் கட்டடம் கட்டப்படாமல் இருப்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதனைக் கட்டி முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கட்டடத்தை 1976 ஆம் ஆண்டில் கட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டது. ஒப்பந்தக்காரர்களிடம் வேலை ஒப்படைக்கப்பட்டது. 13 ஆண்டுகள் ஆகியும் அந்தக் கட்டடம் கட்டி முடிக்கப்படாத நிலை இருக்கிறது, அதற்கான காரணத்தை நான் சொல்ல வேண்டுமென்று சொன்னால், அங்கு செல்வாக்குப் படைத்த....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவரம் தெரிந்த உறுப்பினர் வினாவாகத் தொடுக்க வேண்டும். வினாவைக் கேளுங்கள், இருப்பதோ சில மணித் துளிகள்.

திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பேரவைத் தலைவர்அவர்களே, இந்தக் கட்டடம் கடந்த 13 ஆண்டுகளாக கட்டி முடிக்கப்படாமல் இருப்பதற்குக் காரணம் என்ன என்று சொன்னால், அங்கே செல்வாக்கு படைத்தவர்கள் காண்டிராக்டராக இருப்பதால் அவர்களுடைய தவறான நடவடிக்கையின் காரணமாக அது கட்டப்படவில்லை என்று குறிப்புகள் இருக்கின்றன. இந்த நிலையில் தவறுக்கு காரணமான அந்த ஒப்பந்தக்காரர் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? குறிப்பிட்ட காலத்தை நிர்ணயித்து, அந்தக் கால வரம்புக்குள் கட்டி முடிக்க வேண்டுமென்று அரசு உத்தரவிடுமா ?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினருடைய கேள்வியிலேயே விடை இருக்கிறது. 13 ஆண்டுக்காலம்—இடையிலே ஓர் அரசுதான் இருந்தது.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்கும் அதற்கும் சம்மந்தமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஊராட்சி ஒன்றிய.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா மட்டும்தான் No extension please (குறுக்கீடு) அமைச்சர் பதில் அளித்தால்கூட நீங்கள் வினா மட்டும் கேளுங்கள். நீங்கள் என்ன அமைச்சருக்குப் பதில் சொல்வது ?

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கட்டிடத்தை அன்றைக்கு ஊராட்சி ஒன்றியத் தலைவராக இருந்தவர் தன்னுடைய உறவினர் பெயரில் காண்டிராக்ட் எடுத்தார். அதற்குப் பிறகு அதை கட்டி முடிக்காமல் இருந்ததால் அவர்மீது அரசு நடவடிக்கை எடுத்தது. அப்படி

1989 ஏப்ரல் 4]

நடவடிக்கை எடுத்தும், சரியான நடவடிக்கை எடுத்தும். இன்றைக்கு இருக்கின்ற அந்த ஊராட்சி ஒன்றியமும் அதை முடிக்க நடவடிக்கை எடுக்காததால் அங்கு இருக்கின்ற மக்கள் மிகுந்த துன்பத்திற்கு உள்ளாகியிருக்கிறார்கள். ஆகவே, அரசு குறிப்பிட்ட காலத்தை நிர்ணயித்து, அந்தக் காலத்திற்குள் கட்டப்பட வேண்டுமென்று அரசு உத்தரவிடுமா ?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடைக்காலத்திலே இருந்த அரசு நடவடிக்கை எடுத்தது என்றும், அப்படி நடவடிக்கை எடுத்தும் கூட அந்தக் கட்டடம் கட்டப்படவில்லை என்றும், இப்பொழுது இருக்கிற ஒன்றியம் உடனடியாக நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா என்றும் கேள்வி கேட்கிறபோது அதற்கும் அரசுக்கும் நேரடியாக சம்பந்தமில்லை என்றும் இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். அதே சம்பந்தமில்லாத நிலை இன்றைக்கும் உள்ளது. இருந்தாலும் கூட என்ன செய்யலாம் என்பதை அரசு பரிசீலிக்கும்.

திரு. பி. என். வல்லரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி தொகுதி, கட்டதேவன்பட்டி தொட்டப்பநாயக்கனூரில் கால்நடை மருந்தகக் கட்டடம் அமைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை விடப்பட்டிருக்கிறது. அது நிறைவேற்றப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியில் கால்நடை மருந்தகம் அமைப்பதுபற்றி இங்கே கேள்வி எழுப்பியுள்ளார். கால்நடை மருந்தகங்களை அமைப்பதற்கு அரசு ஒரு சில நிபந்தனைகளை ஏற்கெனவே விதித்துள்ளது. ஒன்றியத்தில் முதல் கால்நடை மருந்தகக் கட்டடம் கட்ட ஆகும் செலவில், ஊராட்சி ஒன்றியம் தனது பங்குத் தொகையாக 25 சதவிகிதமும், அரசின் பங்குத் தொகையாக 75 சதவிகிதமும் அளிக்கப்பட்டு கட்டடம் கட்டப்படுகிறது. இரண்டாவது மருந்தகம் என்றால் அரசு மானியம் 50 விழுக்காடு அளிக்கும். அதுபோல ஊராட்சி ஒன்றியம் 50 விழுக்காடு செலுத்த வேண்டும். மூன்றாவது கால்நடை மருந்தகம் என்றால், அரசு 25 விழுக்காடு வழங்கும். ஊராட்சி ஒன்றியம் 75 விழுக்காடு பங்குத் தொகை செலுத்த வேண்டும். நான்காவது மருந்தகமாக இருந்தால் ஊராட்சி ஒன்றியமே முழுத் தொகையையும் கட்டடம் கட்ட செலுத்தவேண்டும். மற்றும் எட்டு கிலோ மீட்டர் சுற்றளவுக்கு உள்ளதாக எந்த கால்நடை மருத்துவ மருந்தகமோ அல்லது கிளை நிலையமோ, மருந்தகமோ இல்லாமல் இருக்க வேண்டும். அதுபோல கால்நடை மருந்தக நிரந்தர கட்டடம் கட்டும்வரை ஊராட்சி ஒன்றியமோ, சம்பந்தப்பட்ட ஊராட்சியோ தாங்கள் இலவசமாக கட்டடம்

வழங்க வேண்டுமென்று நிபந்தனை இருக்கிறது. ஆகவே இந்த நிபந்தனைகளை எல்லாம் பின்பற்றி ஊராட்சி ஒன்றியம் தீர்மானம் போட்டு, தீர்மானத்தை அரசுக்கு உரிய கருத்துரு வாக அனுப்பினால் அதுபற்றி அரசு பரிசீலனை செய்யும்.

(முற்பகல் 9—50)

திரு. வ. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவ ரவர்களே, பொதுவாக கிராமங்களில் கால்நடை மருந்தகங் களைக் கட்டும்போது, 10, 15 கிராமங்களுக்குச் சேர்த்து ஒரு கால்நடை மருந்தகம் கட்டித் தரப்படுகிறது. சில சமயங் களில் கால்நடைகளுக்கு எழுந்து நடக்க முடியாத அளவுக்கு நோய் வரும்போது, அந்தக் கால்நடைகளை நடத்திச் செல்ல முடியாமல் இருக்கிறது. எனவே அப்படிப்பட்ட நோய்களைத் தீர்க்க நடமாடும் கால்நடை மருந்தகங்களை அமைத்துத் தந்தால் பயனுள்ளதாக இருக்கும். அப்படிப்பட்ட முயற்சியை அரசு மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: பேரவைத் தலைவரவர்களே, ஏற்கனவே இயங்கும் கால்நடை மருந்தகம் என்ற பிரிவு ஒவ்வொரு கோட்டத்திலும் ஒன்று செயல் படுகிறது. அனைத்துப் பகுதிகளுக்கும் விரிவுபடுத்துவது என்பது தற்போதைய நிலையில் நிதி ஆதாரம் இல்லாததால், அதை செயற்படுத்த முடியாமல் இருக்கிறதென்பதைத் தெரிவித் துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனையை இந்த அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரி வித்துக்கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவ ரவர்களே, இன்றைக்கு கால்நடைச் செல்வங்களை அபி விருத்தி செய்வதும், பாதுகாப்பதும் மிகமிக அவசியமானது. இன்றைக்கு கால்நடை மருத்துவ மனைகள் அதிகமாக இல்லாததால் கால்நடைகள் இழப்புக்கு ஆளாகும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே கால்நடை மருத்துவமனைகளை ஆரம்பிக்க 75, 50, 25 சதவிகிதம் ஊராட்சி ஒன்றியம் கொடுக்க வேண்டுமென்ற நிபந்தனை போடுவதற்குப் பதிலாக, எங்கே அவசியமோ அங்கே கால்நடை மருத்துவமனைகளை ஆரம்பிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: பேரவைத் தலைவ ரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல எங்கெங்கு கால்நடை மருத்துவமனைகள் அமைக்க வேண் டுமோ அங்கே அமைக்க இந்த அரசு ஆவலாக இருக்கிறது. இருந்தாலும், நிதி நிலைமை அதற்கு இடம் கொடுக்காததால், படிப்படியாக உறுப்பினர்களுடைய கோரிக்கையை நிறைவேற்ற இந்த அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1989 ஏப்ரல் 4]

திரு. எஸ். டேனியல் ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கால்நடை மருந்தகங்களினுடைய கட்டடங்களைக் கட்டுவதற்கு ஊராட்சி ஒன்றியத்தினுடைய நிதியிலிருந்து 50 சதவிகிதமும், அரசினுடைய மானியமாக 50 சதவிகிதமும் கொடுப்பதாகக் கூறுகிறார்கள். நிதியில்லாத ஊராட்சி ஒன்றியங்கள் 50 சதவிகிதம் கொடுக்க முடியாத காரணத்தால், கால்நடை மருந்தகங்களின் கட்டடங்களைக் கட்ட முழு மானியத்தையும் அரசே வழங்குமா ?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அவ்வாறு ஒன்றியப் பொது நிதியில் நிதி இல்லாதிருந்தால், அரசு அதனைப் பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பெ. வெங்கடாசலம் : மாண்புமிகு தலைவரவர்களே, கால்நடை மருந்தகங்களுக்கென்று ஆண்டு ஒன்றுக்கு 10,000 ரூபாய் அளவிற்கு மருந்துகள்தான் வழங்கப்படுகின்றன என்று கால்நடை மருத்துவர்கள் குறை கூறுகிறார்கள். எனவே, மேலும் அரசு அதிக நிதி ஒதுக்கீடு செய்து, தேவையான மருந்துகளைக் கொடுக்க ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்வது போல, கால்நடை மருந்தகங்களுக்கு 10,000 ரூபாய் மருந்துகள்தான் வழங்கப்படுகிறதென்பது தவறான கருத்தாகும். ஒவ்வொரு கால்நடை மருந்தகத்திற்கும் ஆண்டு ஒன்றுக்கு 20,000 ரூபாய் மருந்துகள் வழங்கப்படுகின்றன. தற்போதைய நிதி நிலைமையைக் கருத்திற் கொண்டும், சிகிச்சைக்கு வருகிற கால்நடை எண்ணிக்கையைப் பொறுத்தும், நிர்ணயிக்கப்படுகிற ஒன்று இது. இதை அதிகப்படுத்தும் குறிப்பை பின்னால் அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மின்மோட்டார்களின் சக்தியை அதிகப்படுத்த மின் பயனீட்டாளர் தானாகவே முன்வந்து வெளியிடும் திட்டம்.

குறுகிய கால வினா் எண் (1) * வினா எண். 2008—திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

விவசாயிகள் பயன்படுத்தும் மின் மோட்டார்களின் சக்தியை அதிகப்படுத்த மின் பயனீட்டாளர் தானாகவே முன்வந்து வெளியிடும் திட்டம் (Voluntary Disclosure Scheme) ஒன்றை கொண்டுவர அரசு நடவடிக்கை எடுக்குமா ?

1989 ஏப்ரல் 4]

திரு. எஸ். டேனியல் ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கால்நடை மருந்தகங்களினுடைய கட்டடங்களைக் கட்டுவதற்கு ஊராட்சி ஒன்றியத்தினுடைய நிதியிலிருந்து 50 சதவிகிதமும், அரசினுடைய மானியமாக 50 சதவிகிதமும் கொடுப்பதாகக் கூறுகிறார்கள். நிதியில்லாத ஊராட்சி ஒன்றியங்கள் 50 சதவிகிதம் கொடுக்க முடியாத காரணத்தால், கால்நடை மருந்தகங்களின் கட்டடங்களைக் கட்ட முழு மானியத்தையும் அரசே வழங்குமா ?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அவ்வாறு ஒன்றியப் பொது நிதியில் நிதி இல்லாதிருந்தால், அரசு அதனைப் பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பெ. வெங்கடாசலம் : மாண்புமிகு தலைவரவர்களே, கால்நடை மருந்தகங்களுக்கென்று ஆண்டு ஒன்றுக்கு 10,000 ரூபாய் அளவிற்கு மருந்துகள்தான் வழங்கப்படுகின்றன என்று கால்நடை மருத்துவர்கள் குறை கூறுகிறார்கள். எனவே, மேலும் அரசு அதிக நிதி ஒதுக்கீடு செய்து, தேவையான மருந்துகளைக் கொடுக்க ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்வது போல, கால்நடை மருந்தகங்களுக்கு 10,000 ரூபாய் மருந்துகள்தான் வழங்கப்படுகிறதென்பது தவறான கருத்தாகும். ஒவ்வொரு கால்நடை மருந்தகத்திற்கும் ஆண்டு ஒன்றுக்கு 20,000 ரூபாய் மருந்துகள் வழங்கப்படுகின்றன. தற்போதைய நிதி நிலைமையைக் கருத்திற் கொண்டும், சிகிச்சைக்கு வருகிற கால்நடை எண்ணிக்கையைப் பொறுத்தும், நிர்ணயிக்கப்படுகிற ஒன்று இது. இதை அதிகப்படுத்தும் குறிப்பை பின்னால் அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மின்மோட்டார்களின் சக்தியை அதிகப்படுத்த மின் பயனீட்டாளர் தானாகவே முன்வந்து வெளியிடும் திட்டம்.

குறுகிய கால வினா எண் (1) * வினா எண். 2008—திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

விவசாயிகள் பயன்படுத்தும் மின் மோட்டார்களின் சக்தியை அதிகப்படுத்த மின் பயனீட்டாளர் தானாகவே முன்வந்து வெளியிடும் திட்டம் (Voluntary Disclosure Scheme) ஒன்றை கொண்டுவர அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : தலைவர் அவர்களே, விவசாயிகள் பயன்படுத்தும் மின் மோட்டார்களின் சக்தியை அதிகப்படுத்த மின்பயனீட்டாளர் தானாகவே முன்வந்து வெளியிடும் திட்டம் (Voluntary Disclosure Scheme) கொண்டு வரும் எண்ணம் இல்லை.

திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நாட்டில் வறட்சி தாண்டவமாடிக் கொண்டிருக்கிறது. நேற்றையதினம்கூட நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் போர்க்கால நடவடிக்கைகள் போல் நடவடிக்கை எடுத்து இந்த வறட்சி நிலைமை சமாளிக்கப்படுமென்று கூறினார்கள். நிலத்தடி நீர் கீழே போய்க் கொண்டிடுருப்பதால், தங்களுடைய இறைவைப் பாசனத்தை நம்பியிருக்கும் விவசாயிகள், ஹார்ஸ்பவரை அதிகப்படுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அனுமதியில்லாமல் ஏராளமான விவசாயிகள் தென்னாற்காடு மாவட்டத்தில் மட்டுமல்ல, பல்வேறு மாவட்டங்களில் இப்படிச் செய்திருக்கிறார்கள். கடந்த காலத்திலே மின்சார வாரியம் இப்படிப்பட்ட ஸ்கீமை, இதை அடிப்படையாக வைத்துகொண்டு வந்திருக்கிறது. 4—1—1989-ல் வெளியான போர்டு புரோசீடிங்ஸ் எண். 5. அதே மாதிரி 1987 ஆம் ஆண்டு பிப்ரவரி 9-ஆம் தேதி இப்படிப்பட்ட வாலண்டரி டிஸ்க்ளோஷர் திட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதன் போர்டு புரோசீடிங்ஸ் எண். 23. எனவே, விவசாயிகளின் நலனைக் கருதி, இந்தத் திட்டத்தை உடனடியாகக் கொண்டு வருவதற்கு அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1981-ஆம் ஆண்டிலும், 1984-ஆம் ஆண்டிலும் இதுபோல அரசாங்கம் அறிவித்தது. பல இடங்களிலே முறைகேடாக அவர்களாகவே மின்சக்தியை அதிகப்படுத்தி எடுத்துக் கொண்ட காரணத்தால் ஆங்காங்கே இருக்கிற டிரான்ஸ்பார்மர்கள் மற்றும் உபகரணங்கள் எல்லாம் வீணாகிவிட்டன. அதைப் போலவே ஆங்காங்கே இருப்பவர்கள் அதிகமான சக்தியை எடுத்துக் கொள்வதன் காரணமாக மின் அழுத்தக் குறைவும் ஏற்பட்டு, விவசாயிகளின் பம்புசெட்டுகளும் பழுதுபட்டன. எனவே இதைப்போல் அரசாங்கம் ஒவ்வொரு வருஷமும் 'வாலண்டரி டிஸ்குளோஷர்' ஸ்கீம் என்று அறிவித்தால் மின்வாரியத்திற்குத் தெரியாமலேயே அதிக மின்சக்தியை எடுத்துக் கொள்கிற விவசாயிகளை அரசே ஊக்கப்படுத்துவதாக அமையும் என்பதால், தற்போது இந்தத் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும் உறுப்பினரின் எண்ணப்படி முதலமைச்சரைக் கலந்து பேசி இதுபற்றி அறிவிக்கப்படும்.

திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவேகூட இப்படித்தான் சொல்லப்பட்டது. அன்றைக்கிருந்த நிலைமை வேறு. இன்றைக்கு மிகக் கடுமையான வறட்சி ஏற்பட்டிருக்கிறது. ,அன்-ஆத்தரைஸ்டு

1989 ஏப்ரல் 4]

அடிஷனல் லோடை ரெகுலரைஸ்' செய்வதற்குத்தான் அந்தக் காலத்திலும் இந்தத் திட்டம் கொண்டு வரப்பட்டது. ஆனாலும் இன்றைக்குக் கடுமையான வறட்சி ஏற்பட்டிருக்கிற சூழ்நிலையில் இதை உடனடியாகக் கொண்டு வந்தால், மின்வாரியத்திற்கும் இதன் காரணமாக அதிகமான லாபம் கிடைக்கும். 'அன்-கலெக்டட் ரெவின்யூ' என்ற வகையில் வசூலிக்க முடியாமல் இருக்கிற—யாருக்கும் தெரியாமல் இது செய்யப்படுவதால்—தொகையை வசூலிக்க வாரியத்திற்கு வாய்ப்பு கிடைக்கும். இதன் காரணமாக மின்சார டிரான்ஸ்பார்மர்கள் பழுதுபடுவதாகக்கூட சொன்னார்கள். அது போன்ற நிலைமை இனி ஏற்படாமல் செய்ய முடியும். எனவே இன்றைக்கிருக்கிற பிரத்தியேகச் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, முதல்வர் அவர்களோடு கலந்து பேசி, உடனடியாக அறிவிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : தலைவர் அவர்களே, அதுபற்றி பரிசீலித்து ஆவன செய்யப்படும்.

திரு. என். கணபதி : பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சிக் காலம் இது. ஒரு பட்டாவுக்கு ஒரு சர்வீஸ் கனெக்ஷன் என்று கொடுக்கப்பட்டுள்ளது. வறட்சி காரணமாக குறிப்பிட்ட கிணற்றில் தண்ணீர் இல்லாததால் அடுத்த கிணற்றின் பம்ப்செட்டைப் பயன்படுத்தி நீரை இறைத்தால், " நீங்கள் பாயின்ட் ஆப் சப்ளையை மாற்றிவிட்டீர்கள் " என்று சொல்லி நடவடிக்கை எடுத்து, மின் சப்ளையைத் துண்டித்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட வறட்சிக் காலங்களில் ஒரு பட்டா நிலத்தில் வேறு ஒரு கிணற்றின் பம்ப் செட்டைப் பயன்படுத்த அரசு அனுமதி அளிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி பல மனுக்கள் அரசுக்கு வந்திருக்கின்றன. அதைப்பற்றி அதிகாரிகளோடு கலந்து ஆலோசித்து அறிவிப்பு செய்து கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே மின் இணைப்பு துண்டிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக மின் இணைப்பு கொடுக்க ஆணையிடப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடும் வறட்சி நிலை தமிழகத்தில் நிலவுவதைக் கருத்திற்கொண்டு, மிகச் சிறிய விவசாயிகளுக்காவது மின்கட்டணத்தில் சலுகை தர அரசு நல்ல முடிவு ஏதேனும் எடுக்க இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : தலைவர் அவர்களே இதைப்பற்றி உறுப்பினர் அவர்கள் தனியாகக் கேள்வி எழுப்புவாரானால், அதற்குத் தகுந்த பதில் அளிக்கப்படும்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே கடந்த காலத்தில் மின் கட்டணம்செலுத்தப்படாமல் பாக்கிகள் பல ஆயிரக்கணக்கில் இருப்பதாகத் தெரிகிறது. அந்த பாக்கிகளைக் கட்டாததன் காரணமாக விதிக்கப்பட்ட அபராத வட்டியை முதலமைச்சர் அவர்கள் நீக்கிவிட்டதாகத் தகவல் அனுப்பியிருக்கிறார்கள். அதற்குப் பின்னால்கூட முழுத் தொகையையும் உடனடியாகக் கட்ட வேண்டும் என்ற நிபந்தனை இருப்பதால் கட்ட முடியாத நிலை இருக்கிறது. எனவே, அபராத வட்டியைத் தள்ளிவிட்டு, அந்த பாக்கித் தொகையைக்கூட தவணையில் கட்ட அனுமதிக்கப்படுமா ? பல இடங்களில் மின் சப்ளை துண்டிக்கப்படுவதை நிறுத்தி, பாக்கித் தொகையைத் தவணை முறையில் கட்ட அனுமதிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : தலைவர் அவர்களே, அதுபற்றியும் பரிசீலிக்கப்படும்.

திரு. ஆர். அண்ணாநம்பி : தலைவரவர்களே, அன்று எம். ஜி. ஆர். அவர்களுடைய காலத்தில் விவசாயிகள் பாதிக்கப்பட்டதால் ஹார்ஸ் பவருக்கு 75 ரூபாய் என்று குறைந்த கட்டணம் அறிவித்தார்கள். இன்றைக்கு விவசாயிகள் கடுமையான பஞ்சத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந் நிலையில் ஓராண்டிற்காகிலும் இலவச மின்சாரம் வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட செயற் குறிப்பு பரிசீலனையில் உள்ளது.

(முற்பகல் 10–00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

(அ) செய்தித் துறை துணை இயக்குநர் ஒருவர் அரசு அலுவலர் ஒழுங்குமுறை விதிகளை மீறிச் செயல்படுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : : ஒரு சிறிய இடையீடு. என்னிடத்தில் இசைவு பெற்றுச் சில செய்திகளைப் பேச வேண்டுமென்று மூன்று, நான்கு பேர் இசைவு பெற்றிருக்கிறார்கள். முதலில், திரு. பி.எச். பாண்டியன்.

[1989 ஏப்ரல் 4

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே கடந்த காலத்தில் மின் கட்டணம்செலுத்தப்படாமல் பாக்கிகள் பல ஆயிரக்கணக்கில் இருப்பதாகத் தெரிகிறது. அந்த பாக்கிகளைக் கட்டாததன் காரணமாக விதிக்கப்பட்ட அபராத வட்டியை முதலமைச்சர் அவர்கள் நீக்கிவிட்டதாகத் தகவல் அனுப்பியிருக்கிறார்கள். அதற்குப் பின்னால்கூட முழுத் தொகையையும் உடனடியாகக் கட்ட வேண்டும் என்ற நிபந்தனை இருப்பதால் கட்ட முடியாத நிலை இருக்கிறது. எனவே, அபராத வட்டியைத் தள்ளிவிட்டு, அந்த பாக்கித் தொகையைக்கூட தவணையில் கட்ட அனுமதிக்கப் படுமா ? பல இடங்களில் மின் சப்ளை துண்டிக்கப்படுவதை நிறுத்தி, பாக்கித் தொகையைத் தவணை முறையில் கட்ட அனுமதிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : தலைவர் அவர்களே, அதுபற்றியும் பரிசீலிக்கப்படும்.

திரு. ஆர். அண்ணாநம்பி : தலைவரவர்களே, அன்று எம். ஜி. ஆர். அவர்களுடைய காலத்தில் விவசாயிகள் பாதிக்கப்பட்டதால் ஹார்ஸ் பவருக்கு 75 ரூபாய் என்று குறைந்த கட்டணம் அறிவித்தார்கள். இன்றைக்கு விவசாயிகள் கடுமையான பஞ்சத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந் நிலையில் ஓராண்டிற்காகிலும் இலவச மின்சாரம் வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட செயற் குறிப்பு பரிசீலனையில் உள்ளது.

(முற்பகல் 10—00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

(அ) செய்தித் துறை துணை இயக்குநர் ஒருவர் அரசு அலுவலர் ஒழுங்குமுறை விதிகளை மீறிச் செயல்படுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : : ஒரு சிறிய இடையீடு. என்னிடத்தில் இசைவு பெற்றுச் சில செய்திகளைப் பேச வேண்டுமென்று மூன்று, நான்கு பேர் இசைவு பெற்றிருக்கிறார்கள். முதலில், திரு. பி.எச். பாண்டியன்.

1989 ஏப்ரல் 4]

திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அரசாங்க அலுவலர்கள் ஏதாவது குற்றச்சாட்டுக்கு ஆளானால், அரசாங்க அலுவலர்கள் மீது ஏதாவது வழக்கு போட்டாலும் கூட கவர்ன்மென்ட் சர்வன்ட்ஸ் கான்டக்ட் ரூல்ஸ்களின்படி அரசாங்கம் சஸ்பெண்ட் செய்வது வழக்கம். ஆனால் நான் பத்திரிக்கை வாயிலாகத் தெரிந்து கொண்ட ஒரு விவகாரம் இந்த அவையிலே பேசப்பட்ட விவகாரம். செய்தித் துறை துணை இயக்குநர் ஒருவர் போலீசாரால் வழக்குத் தொடரப்பட்டும், கவர்ன்மெண்ட் கான்டக்ட் ரூல்ஸ்படி சஸ்பென்ட் செய்யப்படவில்லையே; அதற்கு என்ன காரணம் என்பதை அரசாங்கத்தின் மூலமாகத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். இது ஒன்று. இரண்டாவது, இங்கே முதலமைச்சர் ராஜினாமா செய்ய வேண்டுமென்று கேட்டார்கள். இது ஜனநாயக இடம். ஆனால் அதே அதிகாரி பத்திரிகைக்கு ஒரு பேட்டி கொடுத்து, முதலமைச்சர் ராஜினாமா செய்ய வேண்டுமென்று சொல்வது எந்த விதியின் கீழ் என்று எனக்குத் தெரியவில்லை. கவர்ன்மென்ட் கான்டக்ட் ரூல்ஸ் அதற்கு இடம் கொடுக்கிறதா? இதை இப்படியே அனுமதித்தால் நம்முடைய அரசாங்கத்தில் ஒழுங்கு நடவடிக்கையே இருக்காது; ஒழுங்காக நிர்வாகம் நடைபெறாது என்ற காரணத்தால், இதற்கு ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதை அரசாங்கத்தின் மூலமாகத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பி.எச். பாண்டியன் அவர்கள் குறிப்பிட்ட அந்த அதிகாரி மீது கடந்த காலத்திலேயே குடியரசுத் தலைவர் ஆட்சியில் பல புகார்கள் கூறப்பட்டு, அதுபற்றி கவர்னர் அவர்கள் விசாரணை நடத்தச் சொல்லி, அவர் எந்தக் கட்சியினுடைய தலைவர் குடும்பத்து நண்பராக இருக்கிறாரோ அல்லது அரசியல் ஆலோசகராக இருக்கிறாரோ—அது பிரச்சினைக்குரிய ஒன்றாக இருந்தாலும் கூட—அப்படிப்பட்டவர் மீது எழுப்பப்பட்ட புகார்கள் அண்ணா தி.மு.க. ஏடுகளிலேயே வெளிவந்ததையொட்டி கவர்னர் நடவடிக்கை எடுக்கச் சொல்லி, அதுபற்றிய அறிக்கைகள் எல்லாம் தயாரிக்கப்பட்டு வந்த பிறகு, கவர்னர் ஆட்சியில், அந்த அதிகாரியே ராஜினாமா செய்ய முன்வந்த போது, அந்த ராஜினாமா ஏற்றுக்கொள்ளப்படவில்லை. காரணம், ஏறத்தாழ $1\frac{1}{2}$ லட்ச ரூபாய்க்கு மேல் அவர் அரசாங்கத்திற்கு தரவேண்டியிருந்த காரணத்தால் ராஜினாமா ஏற்றுக்கொள்ளப்படாமல், அவர் மீது மேல் நடவடிக்கை எடுப்பதற்காக குறிப்பு வைக்கப்பட்டது. இப்போது நடைபெறுகின்ற செய்திகளைப்பற்றி திரு பாண்டியன் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். உடனடியாக நடவடிக்கை எடுத்தால், ஏதோ பழி வாங்கி விட்டார்கள் என்று யாரும் கூறுவார்கள் என்பதற்காகத்தான் நடவடிக்கை எடுக்கவில்லை. இருந்தாலும்கூட உலகுக்கு நன்றாக சில விஷயங்கள் தெளியவைக்கப்

பட்டு, உலகம் தெரிந்து கொண்ட பிறகு, அவர் மேல் நடவடிக்கை எடுத்தால் எடுத்த நடவடிக்கை நியாயம் நிச்சயமாக மக்களுக்குத் தெரியும் என்ற காரணத்தால் பொறுத்திருக்கிறோம். கூடிய விரைவில் நடவடிக்கை எடுப் பதுபற்றிப் பரிசீலித்து முடிவு எடுக்கப்படும்.

திரு. பி. எச். பாண்டியன் : தலைவரவர்களே, இது போன்று உடனுக்குடன் அரசு நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் ஒவ்வொரு அதிகாரியும் அரசாங்கத்தை மீறக்கூடிய செயல் ஏற்படும். அதிகாரிகளுக்கு பயம் இல்லாமல் போய் விடும். ஆகவே என்னைப் பொறுத்தவரை யாராக இருந்தாலும் அரசாங்க விதிகளைப் பின்பற்ற வேண்டும். கவர்ன்மெண்ட் கான்டக்ட் ரூல்ஸ்-படி நீங்கள் இனிமேல் அதிகாரிகளை நிர் வகிக்கப் போகிறீர்களா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்பு கிறேன். இதில் அரசியல் தேவை கிடையாது அரசாங்க அதிகாரிக்கு. நாளைக்கு இன்னொரு அதிகாரி எனக்கு ஆலோச கராக வருவார்; அவர் ஆலோசனை சொல்வார்; அவர் பத்திரிகைக்கு பேட்டி கொடுப்பார். தாங்கிக் கொள்வீர் களா?

(ஆ) சென்னை திரிசூலத்திற்குப் பக்கத்தில் ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு நிதியுதவி அளிப்பது குறித்து.

திரு. அ, இரகுமான்கான் : பேரவைத் தலைவரவர் களே, என்னுடைய பூங்கா நகர் தொகுதி புளியந்தோப்பு பகுதியில் காந்தி நகரைச் சார்ந்த 40 பேர் ஒரு டெம்போ வேனிலே திண்டிவனத்திற்கு அருகேயுள்ள ஒரு ஊரில் தங்கள் உறவினர் ஒருவரின் மரண இறுதிச் சடங்கிலே கலந்து கொள் வதற்காகச் சென்றபொழுது, விமான நிலையத்திற்கு அருகில், திரிசூலத்திற்குப் பக்கத்திலே விபத்து ஏற்பட்டு ஆறு பேர் மரணம் அடைந்திருக்கிறார்கள். 31 பேர் சென்னை மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த விபத்திலே இறந்த ஆறு பேரும் கூலித் தொழிலாளிகள். இவர் களில் சிலர் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தையும் சார்ந்தவர்கள். ஆனால் ஏழைத் தொழி லாளிகள், ஆதி திராவிட மக்கள். இவர்களை நம்பியே அந்தக் குடும்பங்கள் இருக்கின்றன, எனவே, கட்சி வேறுபாடு களுக்கு அப்பால் மனிதாபிமானத்தின் அடிப்படையில் கருணையே உருவான நம்முடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் அந்தக் குடும்பங்களுக்கு நிவாரண உதவி அளிக்க அன்புடன் வேண்டுகிறேன் தங்கள் மூலமாக.

பட்டு, உலகம் தெரிந்து கொண்ட பிறகு, அவர் மேல் நடவடிக்கை எடுத்தால் எடுத்த நடவடிக்கை நியாயம் நிச்சயமாக மக்களுக்குத் தெரியும் என்ற காரணத்தால் பொறுத்திருக்கிறோம். கூடிய விரைவில் நடவடிக்கை எடுப்பதுபற்றிப் பரிசீலித்து முடிவு எடுக்கப்படும்.

திரு. பி. எச். பாண்டியன் : தலைவரவர்களே, இது போன்று உடனுக்குடன் அரசு நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் ஒவ்வொரு அதிகாரியும் அரசாங்கத்தை மீறக்கூடிய செயல் ஏற்படும். அதிகாரிகளுக்கு பயம் இல்லாமல் போய் விடும். ஆகவே என்னைப் பொறுத்தவரை யாராக இருந்தாலும் அரசாங்க விதிகளைப் பின்பற்ற வேண்டும். கவர்ன்மெண்ட் கான்டக்ட் ரூல்ஸ்-படி நீங்கள் இனிமேல் அதிகாரிகளை நிர்வகிக்கப் போகிறீர்களா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். இதில் அரசியல் தேவை கிடையாது அரசாங்க அதிகாரிக்கு. நாளைக்கு இன்னொரு அதிகாரி எனக்கு ஆலோசகராக வருவார்; அவர் ஆலோசனை சொல்வார்; அவர் பத்திரிகைக்கு பேட்டி கொடுப்பார். தாங்கிக் கொள்வீர்களா?

(ஆ) சென்னை திரிசூலத்திற்குப் பக்கத்தில் ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு நிதியுதவி அளிப்பது குறித்து.

திரு. அ. இரகுமான்கான் : பேரவைத் தலைவரவர்களே, என்னுடைய பூங்கா நகர் தொகுதி புளியந்தோப்பு பகுதியில் காந்தி நகரைச் சார்ந்த 40 பேர் ஒரு டெம்போ வேனிலே திண்டிவனத்திற்கு அருகேயுள்ள ஒரு ஊரில் தங்கள் உறவினர் ஒருவரின் மரண இறுதிச் சடங்கிலே கலந்து கொள்வதற்காகச் சென்றபொழுது, விமான நிலையத்திற்கு அருகில், திரிசூலத்திற்குப் பக்கத்திலே விபத்து ஏற்பட்டு ஆறு பேர் மரணம் அடைந்திருக்கிறார்கள். 31 பேர் சென்னை மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த விபத்திலே இறந்த ஆறு பேரும் கூலித் தொழிலாளிகள். இவர்களில் சிலர் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தையும் சார்ந்தவர்கள். ஆனால் ஏழைத் தொழிலாளிகள், ஆதி திராவிட மக்கள். இவர்களை நம்பியே அந்தக் குடும்பங்கள் இருக்கின்றன, எனவே, கட்சி வேறுபாடுகளுக்கு அப்பால் மனிதாபிமானத்தின் அடிப்படையில் கருணையே உருவான நம்முடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் அந்தக் குடும்பங்களுக்கு நிவாரண உதவி அளிக்க அன்புடன் வேண்டுகிறேன் தங்கள் மூலமாக.

1989 ஏப்ரல் 4]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : விபத்துகளில் இறப்பவர்களுக்குக் குடும்பப் பாதுகாப்பு நிதி தரப்படுவது ஏற்கெனவே இந்த அரசால் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதுவும் தொழிலாளிகள் விபத்துஒன்றில். இறந்திருக்கிறார்கள் எனவே, மாண்புமிகு உறுப்பினர் இரகுமான் கானுடைய இந்த முறையீடு பரிவோடு பரிசீலிக்கப்படும்.

(இ) சென்னையிலிருந்து மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் ஆந்திரப் பகுதியிலிருந்து திரும்பு வதற்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கை.

*திரு. மா. சுந்தரதாஸ் : பேரவைத் தலைவரவர்களே, 25 ஆம தேதி ஆந்திரா மாநில நெல்லூர் மாவட்டக் கடற்கரைப் பகுதியிலே மீன் பிடிக்கச் சென்ற 16 மீனவர்களை மீட்பதற்காக வேண்டிய நடவடிக்கைகளை மாண்புமிகு முதல்வரவர்கள் எடுத்ததாக இங்கே அறிவித்தார்கள். ஆனால் அதிலே ஒரு பிரச்சினை என்னவென்றால், இங்கேயிருந்து வரதன் என்ற Ass stant Direcor of Fisher es-ஐயும் பழனி என்ற Inspector cf Pol ce-ஐயும் தமிழக அரசு ஆந்திர மாநிலத்திற்கு அனுப்பியது. ஆனால், அந்த எஸ்.பி. அவர்கள் இதைப் பேசித்தான் முடிக்க வேண்டும் எனறு சொன்னாரேதவிர, பிடித்த அந்த ரௌடிகள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மேலும், 17,000 ரூபாயை நம்முடைய அப்பாவி மீனவர்களிடம் வாங்கிக் கொண்டுதான் விட்டிருக்கிறார்கள். இப்பொழுதுகூட மீன் பிடிக்கப் போக முடியாத சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. நெல்லூர் மாவட்ட எஸ். பி. அவர்கள் சொல்வது, நீங்கள் தமிழக முதல்வர் மூலமாக ஆந்திர முதல்வரவர்களைச் சந்தித்து அல்லது எழுத்து மூலமாகத் தொடர்பு கொண்டு இந்தப் பிரச்சினை முடிவாகவில்லை என்றால் இங்கு ஒன்றும் செய்ய முடியாது என்று அங்கிருக்கின்ற அதிகாரிகள் சொல்கிறார்கள். நம்முடைய அதிகாரிகளுக்கும் சரியான முறையிலே மரியாதை கொடுக்கப்படவில்லை. அந்த எஸ். பி. அவர்கள் அங்கே பார்த்துப் பேசி முடியுங்கள் என்று சொல்லிவிட்டு அதில் எந்த பிரச்சினையையும் செய்யாமல், 17,000 ரூபாயை இலஞ்சமாகக் கொடுத்ததற்குப் பின்னால்தான் விட்டிருக்கிறார்கள். ஆகையால் தங்கள் மூலமாக மாண்புமிகு முதல்வரவர்களைக் கேட்டுக்கொள்வது, முதல்வர் நல்லதொரு நடவடிக்கை எடுத்தார்கள். ஒரு தடவை அங்கே இருக்கின்ற உங்களுடைய இனிய நண்பருக்குத் தொலை பேசி மூலமாகவோ அல்லது கடிதம் மூலமாகவோ பேசி நம்முடைய மீனவர்கள் அந்தப் பகுதியிலே மீன் பிடிப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்யும்படி கேட்டுக் கொள்கிறேன்.

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : உறுப்பினர் திடீரென்று தருகின்ற புதிய தகவல்கள். பற்றி விசாரித்து ஆவன செய்யலாம்.

1989 ஏப்ரல் 4]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : விபத்துகளில் இறப்பவர்களுக்குக் குடும்பப் பாதுகாப்பு நிதி தரப்படுவது ஏற்கெனவே இந்த அரசால் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதுவும் தொழிலாளிகள் விபத்துஒன்றில். இறந்திருக்கிறார்கள் எனவே, மாண்புமிகு உறுப்பினர் இரகுமான் கானுடைய இந்த முறையீடு பரிவோடு பரிசீலிக்கப்படும்.

(இ) சென்னையிலிருந்து மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் ஆந்திரப் பகுதியிலிருந்து திரும்பு வதற்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கை.

*திரு. மா. சுந்தரதாஸ் : பேரவைத் தலைவரவர்களே, 25 ஆம தேதி ஆந்திரா மாநில நெல்லூர் மாவட்டக் கடற்கரைப் பகுதியிலே மீன் பிடிக்கச் சென்ற 16 மீனவர்களை மீட்பதற்காக வேண்டிய நடவடிக்கைகளை மாண்புமிகு முதல்வரவர்கள் எடுத்ததாக இங்கே அறிவித்தார்கள். ஆனால் அதிலே ஒரு பிரச்சினை என்னவென்றால், இங்கேயிருந்து வரதன் என்ற Ass stant Direcor of Fisher es-ஐயும் பழனி என்ற Inspector cf Pol ce-ஐயும் தமிழக அரசு ஆந்திர மாநிலத்திற்கு அனுப்பியது. ஆனால், அந்த எஸ்.பி. அவர்கள் இதைப் பேசித்தான் முடிக்க வேண்டும் எனறு சொன்னாரேதவிர, பிடித்த அந்த ரௌடிகள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மேலும், 17,000 ரூபாயை நம்முடைய அப்பாவி மீனவர்களிடம் வாங்கிக் கொண்டுதான் விட்டிருக்கிறார்கள். இப்பொழுதுகூட மீன் பிடிக்கப் போக முடியாத சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. நெல்லூர் மாவட்ட எஸ். பி. அவர்கள் சொல்வது, நீங்கள் தமிழக முதல்வர் மூலமாக ஆந்திர முதல்வரவர்களைச் சந்தித்து அல்லது எழுத்து மூலமாகத் தொடர்பு கொண்டு இந்தப் பிரச்சினை முடிவாகவில்லை என்றால் இங்கு ஒன்றும் செய்ய முடியாது என்று அங்கிருக்கின்ற அதிகாரிகள் சொல்கிறார்கள். நம்முடைய அதிகாரிகளுக்கும் சரியான முறையிலே மரியாதை கொடுக்கப்படவில்லை. அந்த எஸ். பி. அவர்கள் அங்கே பார்த்துப் பேசி முடியுங்கள் என்று சொல்லிவிட்டு அதில் எந்த பிரச்சினையையும் செய்யாமல், 17,000 ரூபாயை இலஞ்சமாகக் கொடுத்ததற்குப் பின்னால்தான் விட்டிருக்கிறார்கள். ஆகையால் தங்கள் மூலமாக மாண்புமிகு முதல்வரவர்களைக் கேட்டுக்கொள்வது, முதல்வர் நல்லதொரு நடவடிக்கை எடுத்தார்கள். ஒரு தடவை அங்கே இருக்கின்ற உங்களுடைய இனிய நண்பருக்குத் தொலை பேசி மூலமாகவோ அல்லது கடிதம் மூலமாகவோ பேசி நம்முடைய மீனவர்கள் அந்தப் பகுதியிலே மீன் பிடிப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்யும்படி கேட்டுக் கொள்கிறேன்.

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : உறுப்பினர் திடீரென்று தருகின்ற புதிய தகவல்கள். பற்றி விசாரித்து ஆவன செய்யலாம்.

[1989 ஏப்ரல் 4

(ஈ) தெலுங்கு வருடப் பிறப்பு விடுமுறை நாள் குறித்து.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரவர்களே, தெலுங்கு வருடப் பிறப்பு ஏப்ரல் மாதம் 7 ஆம் தேதி என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அரசாங்கத்தினுடைய அறிவிப்பின்படி 6 ஆம் தேதி என்று இருக்கிறது. ஆதலால் அந்தப் பண்டிகையைக் கொண்டாடுகின்ற மக்களுக்குப் பல அசௌகரியங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அதை அரசாங்கம் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு தலைவரவர்களே, காலண்டரிலே வருகிற தெலுங்கு வருஷப் பிறப்பு வருகிறதே தவிர வேறு மாதிரி வருவது எங்களுக்குத் தெரியாது.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : தலைவரவர்களே,......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏற்கெனவே இசைவு பெற்றவர்களுக்கு நான் இசைவு கொடுத்திருக்கிறேன். (குறுக்கீடு) சரி ஐயா, திரு. வெங்கடேஸ்வர தீட்சிதருக்கு ஒரு சிறப்பு விதிவிலக்கு.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : 6 ஆம் தேதியா, 7 ஆம் தேதியா என்று நிர்ணயிக்காமல் போய்க் கொண்டே இருக்கிறது. 6 ஆம் தேதி லீவ் விடப்பட்டிருக்கிறது. அவர் 7 ஆம் தேதி என்று சொல்கிறார். அதில் எது என்று சொல்லட்டுமே. அதற்கு நாங்களும் பதில் சொல்ல வேண்டும் அல்லவா? 6 ஆம் தேதி விடுகிறீர்களா அல்லது 7 ஆம் தேதியும் சேர்த்து லீவ் விடுகிறீர்களா? அதைக் கவனிக்க வேண்டாமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுக்கு 6 விடுமுறை. (குறுக்கீடு). உங்களுக்கு 7 அலுவலகம். (குறுக்கீடு) அவருக்கு நான் விடை சொல்லியிருக்கிறேன்.

(உ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மக்களுடைய பிரச்சினைகளை அதிலும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகளையெல்லாம் நாங்கள் பலரும் கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் மூலமாகக் கொடுத்திருக்கிறோம். என்னிடத்திலே நேற்றைக்கு நான் கொடுத்த மூன்று கவன ஈர்ப்புத் தீர்மானங்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது என்று எந்த விதக் காரணமும் சுட்டப்படாமல் கடிதம் வந்திருக்கிறது. இன்று முதல் நாள் ஒன்றுக்கு இரண்டு கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் எடுத்துக் கொள்ளலாம்.

[1989 ஏப்ரல் 4

(ஈ) தெலுங்கு வருடப் பிறப்பு விடுமுறை நாள் குறித்து.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரவர்களே, தெலுங்கு வருடப் பிறப்பு ஏப்ரல் மாதம் 7 ஆம் தேதி என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அரசாங்கத்தினுடைய அறிவிப்பின்படி 6 ஆம் தேதி என்று இருக்கிறது. ஆதலால் அந்தப் பண்டிகையைக் கொண்டாடுகின்ற மக்களுக்குப் பல அசௌகரியங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அதை அரசாங்கம் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு தலைவரவர்களே, காலண்டரிலே வருகிற தெலுங்கு வருஷப் பிறப்பு வருகிறதே தவிர வேறு மாதிரி வருவது எங்களுக்குத் தெரியாது.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : தலைவரவர்களே,......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏற்கெனவே இசைவு பெற்றவர்களுக்கு நான் இசைவு கொடுத்திருக்கிறேன். (குறுக்கீடு) சரி ஐயா, திரு. வெங்கடேஸ்வர தீட்சிதருக்கு ஒரு சிறப்பு விதிவிலக்கு.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : 6 ஆம் தேதியா, 7 ஆம் தேதியா என்று நிர்ணயிக்காமல் போய்க் கொண்டே இருக்கிறது. 6 ஆம் தேதி லீவ் விடப்பட்டிருக்கிறது. அவர் 7 ஆம் தேதி என்று சொல்கிறார். அதில் எது என்று சொல்லட்டுமே. அதற்கு நாங்களும் பதில் சொல்ல வேண்டும் அல்லவா? 6 ஆம் தேதி விடுகிறீர்களா அல்லது 7 ஆம் தேதியும் சேர்த்து லீவ் விடுகிறீர்களா? அதைக் கவனிக்க வேண்டாமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுக்கு 6 விடுமுறை. (குறுக்கீடு). உங்களுக்கு 7 அலுவலகம். (குறுக்கீடு) அவருக்கு நான் விடை சொல்லியிருக்கிறேன்.

(உ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மக்களுடைய பிரச்சினைகளை அதிலும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகளையெல்லாம் நாங்கள் பலரும் கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் மூலமாகக் கொடுத்திருக்கிறோம். என்னிடத்திலே நேற்றைக்கு நான் கொடுத்த மூன்று கவன ஈர்ப்புத் தீர்மானங்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது என்று எந்த விதக் காரணமும் சுட்டப்படாமல் கடிதம் வந்திருக்கிறது. இன்று முதல் நாள் ஒன்றுக்கு இரண்டு கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் எடுத்துக் கொள்ளலாம்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1989 ஏப்ரல் 4]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது தொடர்பாக அறையில் வந்து பேசவும். விடை தரப்படும். உட்காரலாம்.

(ஊ) மத்திய அரசின் செய்தி மற்றும் தகவல் ஒலிபரப்புத் துறையினால் அனுப்பப்பெற்று உறுப்பினர்களுக்கு வழங்கப்பெற்றுள்ள வெளியீடுகளில் உள்ள ஆட்சேபகரமான கருத்துக்கள்.

திரு. இரா. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என் கரங்களிலே நான் உங்களிடத்தில் ஏற்கெனவே காட்டிய Restoring Tamil Nadu to the position Leadership இந்தச் சிறிய புத்தகம் நம்முடைய Distribution Branch-இலே சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் வழங்கப்பட்ட ஒன்று.

(முற்பகல் 10-10)

இதைப் போல 10, 20 புத்தகங்கள் ராஜீவ் காந்தி அவர்களின் பேச்சுகளை எங்களுக்கு வழங்கியிருக்கிறார்கள். அதிலே எங்களுக்கு எந்தவிதமான கருத்து வேறுபாடும் இல்லை. டெல்லியில் இருக்கிற Information and Broad Casting Ministry இதை அனுப்பியிருக்கிறது. இந்தப் புத்தகத்தில் காணப்படுகிற வாசகங்கள் மனதை மிகவும் புண்படுத்தக்கூடிய வாசகங்களாக இருக்கின்றன. ராஜீவ் காந்தி அவர்கள் தென்காசியிலும், திருநெல்வேலியிலும் காங்கிரஸ் கட்சிப் பிரச்சாரத்திற்குச் சென்றபோது பேசிய பேச்சுக்கள். முன்னாள் முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களைப் பற்றி மிக மோசமாகப் பேசி, கோப்புகள் எல்லாம் ஆயிரக்கணக்கில் தேங்கிக் கிடந்தன, கவர்னர் ஆட்சியில்தான் இந்தக் கோப்புகளின் தேக்கம் எல்லாம் நீக்கப்பட்டன என்ற வாசகங்கள்; கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள் ஏராளமாக அந்த ஆட்சியில் இருந்தார்கள். எங்களுடைய கவர்னர் ஆட்சி வந்து தான் அந்தக் கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள் எல்லாம் கண்டு பிடிக்கப்பட்டனர் என்பதும், அதைப்போல தேசிய முன்னணி இங்கே ஒரு ஊர்வலம் நடத்தினார்கள், அதிலே வட நாட்டிலேயிருந்து வந்த தலைவர்கள் இங்கேயிருக்கிற தலைவர்களோடு ஒன்றாக மேடையில் நின்றார்கள். இவர்கள் எப்படி தமிழைக் காப்பாற்றப் போகிறார்கள். இவர்கள் எப்படி இந்தியை எதிர்க்கப் போகிறார்கள் என்று இப்படிப்பட்ட வாசகங்கள் அடங்கிய இந்தப் புத்தகத்தை அங்கேயிருக்கிற, டெல்லியில் இருக்கிற information and Broadcasting Minisry நம்முடைய மக்களுடைய வரிப் பணத்தில் அச்சிட்டு இலட்சக் கணக்கில் வெளியிட்டு, அதைக் கொண்டு

வந்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கியிருக்கிறார்களே, இது நியாயமா? இந்த அரசு இதை அனுமதிக்கப் போகிறதா? இப்படிப்பட்ட** எல்லாம் எதிர் காலத்திலாவது சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்காமல் இருப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கட்சித் தொடர்பாகப் பேசப்பட்ட பேச்சுகளை அரசு சார்பாக வெளியிடுவது முறையல்லவென்பது பொதுவான மரபு. தாங்கள் கொடுத்த இந்தத் தகவலை மனதில் கொண்டு, முறைப்படி அரசுக்கு இதுபற்றி எழுதி கட்சித் தொடர்பான பேச்சுகளை எந்தக் காரணம் கொண்டும் அரசின் சார்பாக வெளியிட வேண்டாம் என்று நாங்கள் வற்புறுத்துவோம்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, அவர்கள் சொல்கிற கருத்திலே விவாதத்திற்குரிய பொருள்கூட இருக்கலாம். ஆனால் ** என்று சொல்லியது இங்கே பதிவேட்டில் இருக்க வேண்டுமா என்பதைப் பற்றிச் சிந்திக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: **அகற்றி விடலாம்.

திரு. எம். அப்துல் லத்தீப்: தலைவர் அவர்களே, இது மத்திய அரசினுடைய பிரசுரம் ஆகும். இப்படிப்பட்ட ஆட்சேபகரமான அரசியல் பின்னணி கொண்ட கருத்துக்களை, இந்தப் பிரசுரத்தை நம்முடைய சட்டமன்றத்தில், நம்முடைய சட்டமன்றத் துறை விநியோகம் செய்திருக்கிறதே, அப்படி விநியோகம் செய்வதற்கு முன்பு அது அவர்களுடைய கவனத்திற்கு வரவில்லையா? யாருடைய அனுமதியோடு இது செய்யப்பட்டது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுவாக மத்திய அரசால் வழங்கப்படுகிற எல்லா வெளியீடுகளும் அதிகாரப் பூர்வமாக முத்திரை குத்தப்பட்டே வெளியிடப்படுகின்றன. எனவே, அதை நம்முடைய செயலகம் இயல்பாகவே இங்கே வழங்குகிறது. அதிலே ஆட்சேபகரமாக இருந்தால், கட்சி சார்பிலே இருக்கிறது. என்பதற்காக முறைப்படி மத்திய அரசிற்கு எழுதி இதுபோன்ற நடவடிக்கையைத் தவிர்க்க வேண்டுமென்று நாங்கள் கண்டிப்பாக வற்புறுத்துவோம்.

திரு. எம். அப்துல் லத்தீப்: எங்களுடைய கோரிக்கையெல்லாம் இப்படி மத்திய அரசின் சார்பாக வெளியிடப்பட்டிருந்தாலும் நம்முடைய சட்டமன்றத்தில் உறுப்பினர்களுக்கு விநியோகம் செய்கிற போது அவை என்ன கருத்துக்களைக்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றன.

கொண்டிருக்கின்றன என்பதைப் படித்துப் பார்த்து, பிறகு உரியவர்களிடம் கலந்து தானே விநியோகம் செய்ய வேண்டும். வருவதையெல்லாம் சட்டமன்றத் துறையிலே விநியோகம் செய்வது என்று சொன்னால், நாங்கள் ஏதாவது பிரசுரத்தைக் கொடுக்கிறோம். அதை விநியோகம் செய்வதற்கு அவர்கள் தயார் தானா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 'நீங்கள்' என்றால் தனிப்பட்ட முறையில் திரு. அப்துல் லத்தீப் அவர்களா அல்லது அரசு சார்பிலா? அரசு சார்பில் வெளியிடுகிற கருத்து என்ப தால் முதலில் சொல்லியிருக்கிறேன். இதன் தொடர்பாகச் செய லகத்திற்கு உரிய குறிப்பு வழங்கப்படும்.

திரு. எம். அப்துல் லத்தீப்: நான் கேட்பது தங்களுடைய வாயிலாக, இது முறைதானா? முறையில்லை என்றால் என்ன நடவடிக்கை மேற்கொள்ள இருக்கிறீர்கள்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதன் தொடர்பாக ஏற் கெனவே விடை சொல்லியிருக்கிறேன். மத்திய அரசிற்கு எழுதி, கட்சி சார்பாக வெளியிட வேண்டாம் என்று கேட்டுக்கொள் வோம்.

திரு. எம். அப்துல் லத்திப்: அப்படியானால் இப்போது விநியோகம் செய்யப்பட்டவை வாபஸ் பெறப்படுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, அச்சடித்த குறிப்புகளைத் (குறுக்கீடு) திரும்பப் பெறுவது என்பது பிரச்சினை அல்ல. செயலாளரிடம் இதுபற்றிக் கலந்தாலோசித்து முடிவு எடுக்கப்படும்.

**திரு. குமரி அனந்தன்: தலைவர் அவர்களே, இது * * * * கோமேதகமா என்பதை நீங்கள் படித்து முடிவு எடுங்கள். அதுவரையில் எந்தவிதமான சொற்களையும் அதுபற்றிச் சொல்லி யாருடைய மனதும் புண்பட வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

தென் ஆற்காடு மாவட்டம் சோணாங்குப்பத்தில் பொதுக் கூட்டத் திற்குச் சென்ற சிலர் தாக்கப்பட்டு ஒருவர் மரணமடைந்துள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த அலுவல், ஒத்தி வைப்புத் தீர்மானம். மாண்புமிகு திரு. எஸ். டி. உகம்சந்த், '' 2-4-1989 அன்று இரவு தென்னாற்காடு மாவட்டம் சோணங் குப்பம் அருகில் பொதுக் கூட்டத்திற்குச் சென்ற அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் கமான் என்பவர் தாக்கப்பட்டு சரியான சிகிச்சை அளிக்கப்படாமல் இறந்திருக் கிறார் என்றும், மேலும் சிலர் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1989 ஏப்ரல் 4] [திரு. எம். அப்துல் லத்தீப்]

கொண்டிருக்கின்றன என்பதைப் படித்துப் பார்த்து, பிறகு உரியவர்களிடம் கலந்து தானே விநியோகம் செய்ய வேண்டும். வருவதையெல்லாம் சட்டமன்றத் துறையிலே விநியோகம் செய்வது என்று சொன்னால், நாங்கள் ஏதாவது பிரசுரத்தைக் கொடுக்கிறோம். அதை விநியோகம் செய்வதற்கு அவர்கள் தயார் தானா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 'நீங்கள்' என்றால் தனிப்பட்ட முறையில் திரு. அப்துல் லத்தீப் அவர்களா அல்லது அரசு சார்பிலா? அரசு சார்பில் வெளியிடுகிற கருத்து என்ப தால் முதலில் சொல்லியிருக்கிறேன். இதன் தொடர்பாகச் செய லகத்திற்கு உரிய குறிப்பு வழங்கப்படும்.

திரு. எம். அப்துல் லத்தீப்: நான் கேட்பது தங்களுடைய வாயிலாக, இது முறைதானா? முறையில்லை என்றால் என்ன நடவடிக்கை மேற்கொள்ள இருக்கிறீர்கள்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதன் தொடர்பாக ஏற் கெனவே விடை சொல்லியிருக்கிறேன். மத்திய அரசிற்கு எழுதி, கட்சி சார்பாக வெளியிட வேண்டாம் என்று கேட்டுக்கொள் வோம்.

திரு. எம். அப்துல் லத்திப்: அப்படியானால் இப்போது விநியோகம் செய்யப்பட்டவை வாபஸ் பெறப்படுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, அச்சடித்த குறிப்புகளைத் (குறுக்கீடு) திரும்பப் பெறுவது என்பது பிரச்சினை அல்ல. செயலாளரிடம் இதுபற்றிக் கலந்தாலோசித்து முடிவு எடுக்கப்படும்.

**திரு. குமரி அனந்தன்: தலைவர் அவர்களே, இது * * * * கோமேதகமா என்பதை நீங்கள் படித்து முடிவு எடுங்கள். அதுவரையில் எந்தவிதமான சொற்களையும் அதுபற்றிச் சொல்லி யாருடைய மனதும் புண்பட வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

தென் ஆற்காடு மாவட்டம் சோணாங்குப்பத்தில் பொதுக் கூட்டத் திற்குச் சென்ற சிலர் தாக்கப்பட்டு ஒருவர் மரணமடைந்துள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த அலுவல், ஒத்தி வைப்புத் தீர்மானம். மாண்புமிகு திரு. எஸ். டி. உகம்சந்த், "2-4-1989 அன்று இரவு தென்னாற்காடு மாவட்டம் சோணங் குப்பம் அருகில் பொதுக் கூட்டத்திற்குச் சென்ற அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் கமான் என்பவர் தாக்கப்பட்டு சரியான சிகிச்சை அளிக்கப்படாமல் இறந்திருக் கிறார் என்றும், மேலும் சிலர் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

என்றும் தெரிவித்து இதனால் ஏற்பட்ட நிலை குறித்து விவாதிக்க பேரவையின் இன்றைய இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும். என்ற தீர்மானத்தை மொழிய அனுமதி கோரி முன்னறிவிப்பு கொடுத்துள்ளார். இதே பொருள் குறித்து மாண்புமிகு திரு. குமரி அனந்தன் அவர்களும் ஓர் அறிவிப்பைக் கொடுத்திருக்கிறார். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக்கொள்கிறேன். இரண்டு பேர்களில் யாராவது ஒருவர், அதை முடிவு செய்வது நீங்களே.

*திரு. எஸ். திருநாவுக்கரசு: பேரவைத் தலைவர் அவர்களே, தனித்தனி கட்சிகள் சார்பில் கொடுக்கிறபோது, அந்தந்தக் கட்சியில் பலபேர் அறிவிப்புகளைக் கொடுத்திருந்தால் அவர்களில் ஒருவர் என்ற முறையில் ஒவ்வொரு கட்சிக்கும் வாய்ப்பு கொடுக்க வேண்டும், இரண்டு பேர்களில் ஒருவர் என்று பேசச் சொல்லக் கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் கருத்தை ஏற்போம்.

திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு கடலூர் அருகில் நடைபெற்ற காங்கிரஸ் பொதுக் கூட்டத்திற்கு அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த தொண்டர்களும், காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த தொண்டர்களும் செல்கிற நேரத்தில் அங்கே தொண்டர்கள் எல்லாம் மிரட்டப்பட்டு, அந்தக் கூட்டத்திற்குச் செல்கிறவர்களை மிரட்டுகிற ஒரு நிலைமை ஏற்பட்டு, அப்படிச் சென்ற அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த தோழர் கமான் அவர்களும், அவருடைய குடும்பத்தைச் சார்ந்தவர்களும் சில விஷமிகளால் பயங்கர ஆயுதங்களால் தாக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் தாக்கப்பட்ட அந்த சூழ்நிலையை எண்ணிப்பார்க்கின்ற நேரத்தில், அவர்கள் எந்த நோக்கத்திற்காக, ஜனநாயக உரிமையை நிலைநாட்ட வேண்டும் என்ற முறையில், எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களுடைய அந்தக் கூட்டத்திற்குச் செல்ல வேண்டும் என்ற முறையில், அரசினுடைய சார்பாக செய்யப்பட்டிருக்கின்ற அந்தக் கொடுமைகளை எல்லாம் சொல்லப்படுகின்ற அந்தக் கூட்டத்திலே கலந்துகொள்ள வேண்டும் என்ற காரணத்திற்காகச்சென்ற அந்தத் தோழரை, மிகக் கொடூரமான முறையில், அவர்கள் தாக்கியிருக்கிறார்கள். அவர்களுக்கு உடனடியாக சிகிச்சை வழங்க வேண்டும் என்ற முறையிலே, நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அங்கேயிருந்த தோழர்களும், மற்றவர்களும் கோரியிருந்தாலும்—அதைப்பற்றி நேற்றையதினம் நம்முடைய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த துணைத் தலைவர் அவர்களும் வற்புறுத்தினார்கள்—நடவடிக்கை எடுக்கப்படவில்லை. சரி

யான சிகிச்சை வழங்கப்படாத காரணத்தாலே, அவர் மருத்துவ மனையிலே இறக்கிற ஒரு நிலைமை ஏற்பட்டு இன்றைக்கு அங்கே பதட்ட நிலைமை நிலவுகிறது. அங்கே இருக்கிற மக்களை எல்லாம் காவல்துறையைச் சேர்ந்தவர்கள் மிரட்டுகின்ற அளவிற்கு பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக நாங்கள் அறிகிறோம். இந்தப் பிரச்சினையை திசைதிருப்பு கின்ற அளவிற்கு அங்கே யாராவது இதற்கு சாட்சி சொன்னா லும், அல்லது அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்தாலும், அவர்களும் மிரட்டப்பட்டு வருவதாக எங்களுக் குப் புகார்கள் வந்துள்ளன. எனவே, இப்படிப்பட்ட நிலைமை யில் அங்கேயிருக்கின்ற மக்களுடைய உடைமைகளுக்கும், உரிமைகளுக்கும் பாதுகாப்பு இல்லை என்ற நிலைமை ஏற்பட் டுள்ளது. எனவே இப்படிப்பட்ட ஜனநாயக படுகொலை யைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்ற காரணத்திற்காக இந்த அவையை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டும் என்று நான் கேட் டுக்கொள்கிறேன்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, சோணாங் குப்பத்தைச் சேர்ந்த ராமலிங்கம்-தனம் என்ற தம்பதி யினருடைய அருமைத் திருமகன் கமான், நானும் புதுவை மாநில முதலமைச்சர் பாரூக் அவர்கள் பேசுகின்ற காங்கிரஸ் பொதுக் கூட்டத்திலே வந்து கலந்துகொண்டு கருத்துரைகளைக் கேட்க வந்த இடத்திலே, கடைத்தெருவிலே வைத்து மறித்து, சைக்கிள் செயினாலும், இரும்புக் குழாய்களாலும், உருட்டுக் கட்டை களாலும் அடிக்கப்பட்டு இருக்கிறார்கள். ஏற்கனவே 4 நாட் களுக்கு முன்பு, இதே சோணாங்குப்பத்தைச் சேர்ந்த சிலர் தாக்கப்பட்ட நேரத்திலே, அங்கேயிருக்கின்ற ஊர் பஞ்சாயத் துத் தலைவர் அன்பிற்குரிய நாராயணன் என்று சொல்லப்படு கிற திருமகனார், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த வர், ஊர் பஞ்சாயத்துத் தலைவராக இருப்பவரிடம் போய்ச் சொன்னபோது கூட, நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. என்றாவது இவர்கள், போலீசுக்குச் சென்றால், போலீசாரிடம் கூட, ஊர் பஞ்சாயத்தைக் கூட்டி, நாங்கள் முடிவு எடுத்துக் கொள்கிறோம், ஏன் இதிலே போலீஸ் தலையிடவேண்டும் என்று சொல்கிறார்கள். இது எப்போதிலிருந்து தொடர்ந்து வருகிறது என்றால், தேர்தலிலே வாக்குகளை அதிகம் பெற்றுவிட்டது திராவிட முன்னேற்றக்கழகம் என்று சொல்கிற செய்தி வந்த வுடனே, இந்தத் தாக்குதல்கள் தொடங்கிவிட்டன என்று சொல்கிறார்கள். இந்தத் தாக்குதல்களினால், அவர்கள் தொடர்ந்து அச்சுறுத்தப்படுவது மட்டுமல்லாமல், இந்தக் கூட்டத்திற்கு வருகிறபோது, பூமிநாதன், குருநாதன், சுப்பிர மணியம், இரண்டு அன்புகள்,—ஒருவருடைய பெயரும் அன்பு இன்னொருவர் பெயரும் அன்பு—இன்னும் சிலர் சேர்ந்து கூடி யிருந்து அவர்களைத் தாக்கியிருக்கிறார்கள். இங்கே நான் குறிப்பிட விரும்புவது, கூட்டத்தைக் கேட்கவருகின்றவர்களுக்கு – பேசுவதற்கு இருக்கின்ற உரிமையே மறுக்கப்படுமானால், இங்கே நாம் எவ்வளவோ வாதாடுகிறோம் — '' செல்வத்

துள் செல்வம் செவிச் செல்வம்', அச்செல்வம் செல்வத்துள் எல்லாம் தலை'' என்ற வள்ளுவர் குறளை நாள்தோறும் சபாநாயகர் அவர்களே, நீங்கள் சொல்லித்தானே இந்த அவையைத் தொடங்குகிறீர்கள். அந்தச் செவிச் செல்வத்தைப் பெற வந்தவர்களை அடித்திருக்கிறார்கள் என்று சொல்கிறபோது, பெண்களும் இதிலே அடிபட்டு இருக்கிறார்கள். அவர்களுடைய தாயார் அடிக்கப்பட்டு இருக்கிறார், தனம் என்று சொல்லப்படுகின்றவர். சுந்தரப்பால் என்று சொல்லப்படுகின்றவர் அடிபட்டிருக்கிறார். வெள்ளைப் பொன்னு என்று சொல்லப்படுகின்றவர் அடிபட்டு இருக்கிறார். நாங்கள் கூட்டம் முடிந்து, புதுவை மாநில முதல்வர் அவர்களும், நானும் தங்கும் விடுதிக்கு வந்தவுடனே, எங்களிடம் முன்னாள் எம்.எல்.ஏ. ஹிலால் வந்து, அவர்கள் ஆஸ்பத்திரியிலே அனுமதிக்கப்பட்டு இருகிறார்கள் என்று சொன்னவுடனே, நாங்கள் போய்ப் பார்த்தோம்.

(முற்பகல் 10-20)

நானும் வெங்கடேசன் எம். பி.யும் போய்ப் பார்த்தோம். அங்கே கட்டிலிலே நினைவிழந்த நிலையிலே அவர் படுத்திருந்தார் தலையிலே அடிபட்ட காரணத்தாலே அவர் நினைவு இழந்ததாகச் சொன்னார்கள். தாடை முழுவதுமாக பிய்ந்து போய் தொங்கிக் கொண்டிருக்கிற நிலைதான் என்று சொல்கின்ற அளவிற்கு எல்லா இடங்களிலும் ரத்தம் வடிந்து கொண்டிருந்தது. அப்போது நான் அங்கிருக்கின்ற டாக்டரை அழைத்து, அவரைக் கேட்டபோது சென்னைக்குக் கொண்டுபோனால்தான் ஒரு வேளை பிழைக்கக் கூடும், அதுகூட ஐயப்பாடு தான் என்று சொல்லும்போது ஏன் இவ்வளவு நேரம் வைத்திருக்கிறீர்கள் என்று சொன்னோம். அவர்கள் சற்று நேரம் தயங்கிவிட்டு, இனிமேல் நீங்கள் எல்லாம் சொன்னால் நாங்கள் ஏற்பாடு செய்யலாம் என்று சொன்னதற்குப் பிறகு அரசாங்க வாகனத்தில் அனுப்பியிருக்கிறார்கள். அரசாங்க வாகனத்திலே அனுப்பியதிலே கூட, இந்த அவைக்கு நான் சொல்லவிரும்புவது, ஓட்டுநரும், அவருக்குத் துணையாக மாற்று ஓட்டுநர் ஒருவரும் தான் வந்திருக்கிறார்களே தவிர, வைத்தியம் தெரிந்தவர்கள் யாரும் அதிலே வரவில்லை. நண்பர்கள் சிலர் வந்திருக்கிறார்கள். வந்தவர்கள் எல்லாம் அவரை சென்னை ஆஸ்பத்திரியிலே சேர்க்கின்ற நேரத்தில், அவர் இறந்துவிட்டார் என்ற செய்தி தான் அவர்களுக்குக் கிடைத்தது. 20 வயது வாலிபன். அடுத்த மாதம் திருமணம் செய்கின்ற ஏற்பாடு நடந்து கொண்டிருந்தது. அந்த வாலிபனை இழந்து நிற்கின்ற அண்ணா தி.மு.க. என்ற அமைப்புக்கு மட்டுமல்லாமல், ஜனநாயக உரிமையை இழந்து நிற்கின்ற ஒரு கூட்டமாக இருக்கின்றனவே என்று எண்ணிப் பார்க்கின்ற நேரத்தில், காங்கிரஸ்காரர்கள், தாக்கப்படுகிறார்கள், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தாக்கப்படுகிறது. இப்போது என்னுடைய நண்பர், எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் பேசுகின்ற நேரத்தில் அவர்கள் சொன்னார். பலர் கைது செய்யப்படுகிறார்

கள் என்று. கோவையிலே நகரச் செயலாளர் கலைச்சோலை கைது செய்யப்பட்டிருக்கிறார்கள், இன்னும் சிலர் கைது செய்யப் பட்டிருக்கிறார்கள் மணி உட்பட. இதுபோன்று எல்லாவற்றையும் ஒத்திவைப்புத் தீர்மானத்தில் சொல்ல வேண்டியதில்லை. நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வ தெல்லாம், இப்படிப்பட்ட அசம்பாவிதங்கள், சம்பவங்கள் மட்டுமல்ல. அச்சுறுத்தல் சம்பவங்கள், அராஜக சம்பவங்கள் பயங்கர வெறித் தாக்குதல்கள், கொலைவெறித் தாக்குதல்கள் நடந்துகொண்டிருக்கின்றனவே, ஆதலால் இந்தப் பதட்ட நிலை எல்லா இடங்களிலும் ஏற்பட்டுக்கொண்டிருக்கிற நேரத்தில், இந்த பதட்ட நிலையைப் பற்றி இங்கே விவாதிப்பதற்கு இந்த அவையினுடைய பிற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென நானும் கேட்டுக்கொள்கிறேன்.

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் துறைமுகக் காவல் நிலைய சரகத் தைச் சார்ந்த சோணாங்குப்பம் கிராமத்திலுள்ள மீனவச் சமுதாயத்தில் சுமார் இரண்டு ஆண்டுகள் தங்கமணி என்பவர் ஊர்த் தலைவராக இருந்து வந்தார். அவர் அ.இ.அ.தி.மு.க. இயக்கத்தைச் சார்ந்தவர். கடந்த ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஊர்த் தலைவர் பதவிக்கு நாராயணன் என்பவர் வந்துள்ளார். இவர் தி.மு.க.வைச் சார்ந்தவர்.

அதைப்போலவே தென்னாற்காடு மாவட்ட விசைப் படகு உரிமையாளர் சங்கத் தலைவராக விமலசேகரன் என்பவர் இருந்தார். இவர் அ.இ.அ.தி.மு.க. இயக்கத்தைச் சார்ந்தவர் அதற்குப்பிறகு திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த நடராஜன் என்பவர் இப்போது சங்கத்தின் தலைவராக பொறுப்பு ஏற்றுள்ளார். மேலும் சுமார் 7 அல்லது 8 மாதங்களுக்கு முன்பு ராமலிங்கம் என்பவர் மகன் கமான் என்ற அ.இ.அ.தி.மு.கவைச் சார்ந்தவருக்கும் தி.மு.கவைச் சார்ந்த குருநாதன், பூமிநாதன், வில்லியம்ஸ் ஆகியோருக்கும் மீன்பிடிக்கும்போது தகராறு ஏற் பட்டு விரோதம் ஏற்பட்டது. 2—4—1989 அன்று மாலை சுமார் 6 மணிக்கு கடலூர் முது நகர காசுக்கடைத் தெருவின் முன்பு சோணாங்குப்பம் தி.மு.க. வைச் சார்ந்தவர்கள் என்று கூறப்படும் குருநாதன், பூமிநாதன், வில்லியம்ஸ் ஆகியோர் அ. .அ.தி.மு.க. வைச் சார்ந்த கண்ணன் என்பவரிடம் கொடுத்த கடனைப் பற்றிக் கேட்டிருக்கிறார்கள். ஆனால் கண்ணன் அனைவரிடமும் கடன் வாங்கிக் கொண்டு திருப்பித் தராதவர் என்று அறியப் படுகிறது. கடன் தொகையைப் பற்றி கேட்டபோது தகராறு முற்றியது. அத்தோடு கலைந்து சென்று விட்டார்கள் என்றும் கூறப்படுகிறது. இந்தச் சம்பவத்திற்குப் பிறகு அன்று 7.00 மணி யளவில் கமான் என்ற அ.இ.அ.தி.மு.க. நண்பர் பலரால் தாக்கப் பட்டிருக்கிறார்கள். இந்தச் சம்பவம் குறித்து தனலட்சுமி அவர்கள் கொடுத்த புகாரின் பேரில் கடலூர் முது நகர காவல் நிலையக்குற்ற எண்.776/89, 147, 148, 341, 324 மற்றும் 307 இ.பி.கோ. படி வழக்குப் பதிவு செய்யப்பட்டது. மேற்படி காய

மடைந்த கமான் சிகிச்சைக்காக சென்னை பொது மருத்துவ மனைக்குக் கொண்டுவரப்பட்டு, 3—4—1989 அன்று காலை 6.35மணியளவில் இறந்துவிட்டார். எனவே குற்ற எண் 2776/89ன் கீழ் 147, 148, 324, 307 இ.பி.கோ. வழக்கை 302 இ.பி.கோ. ஆக மாற்றம் செய்து விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது. வழக்கு விசாரணையில் உள்ளது. எதிரிகள் தலை மறைவாக உள்ளார்கள். குற்றம் செய்தவர்களில் ஒருவர் கந்தசாமியினுடைய மகன் பரசுராமன் என்பவர் கைது செய்யப் பட்டுள்ளார் என்று செய்தி வந்துள்ளது. அந்தப் பகுதியிலே போலீஸ் பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது. தற்போது அந்தப் பகுதி அமைதியாக உள்ளது. பதட்ட நிலை எதுவும் இல்லை.

நேற்று நண்பர் குமரி அனந்தன் பேசும்போது தன்னுடைய பொதுக்கூட்டத்திற்குப் பாதுகாப்பே தரப்படவில்லை, போலீஸ் பாதுகாப்பு இல்லை என்று சொன்னார்கள். அது பற்றியும் நான் விவரம் விசாரித்தேன். அந்தக் கூட்டத்திற்கு காவல் ஆய்வாளர், இன்ஸ்பெக்டர் ஒருவர், உதவி ஆய்வாளர்-சப்-இன்ஸ்பெக்டர் ஒருவர், தலைமைக் காவலர் 4 பேர், காவலர் 10 பேர், ஆயுதப் படைக் காவலர் 30 பேர் வந்தார்கள் என்று எனக்குச் செய்தி அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இது போன்ற கொலைக் குற்றங்களில் குற்றவாளிகள் நிச்சயமாகத் தப்ப மாட்டார்கள். அவர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என்பதைத் தெரிவித் துக்கொள்கிறேன்.

கோயம்புத்தூரைப் பற்றியும் அவர்களுடைய பேச்சிலே இடையிலே குறிப்பிட்டக் காரணத்தால் குறிப்பிடுகிறேன், கோவையிலே திராவிடர் கழகம் கூட்டம் நடைபெற்று, கூட்டத் திற்கு வந்தவர்கள் கலைந்து செல்லுகிற நேரத்தில் ஹக்கீம் என்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த ஒரு முஸ்லீம் வாலிபர், 19 வயதான ஒரு வாலிபரை அங்கே ஆர். எஸ். எஸ். இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் கொன்று விட்டார்கள் என்று செய்தி வந்திருக்கிறது. அதன் தொடர்பாக ஏதாவது நட வடிக்கை எடுக்கப்பட்டிருக்கலாம் என்று அறிகிறேன். இவை எல்லாவற்றையும் பற்றி விசாரித்து உரிய நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்து, எனவே அவையை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தலைவர் அவர்களுக்குத் தெரியப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பின் அவையை ஒத்தி வைத்து இது குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால் இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது. அடுத்த அலுவல்

2. தகவல் கோரல்—தொடர்ச்சி.

(எ) எதிர்கட்சியைச் சேர்ந்த முன்னால் சட்டமன்ற உறுப்பினர்கள், தொண்டர்கள் கைது செய்யப்பட்டுள்ளது குறித்து.

திரு. எம். அப்துல் லத்தீப் : தலைவர் அவர்களே, கோயம்புத்தூரில் நடந்த அந்தக் கொலை குறித்து, ஹக்கீம் என்னும் திராவிட முன்னேற்றக் கழக இளைஞர் அணியைச் சேர்ந்த தோழர் கொலை செய்யப்பட்டதைக் குறித்து நான் கூட ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நேற்றைக்கும்கூட இப்படித்தான் விவாதம் நடந்தது. செய்தியே இப்போதுதான் கிடைத்திருக்கிறது, என்னிடத்திலே முழு விவரம் இல்லை. அதை முறைப்படி ஒத்திவைப்புத் தீர்மானமாக, முன்கூட்டியே உரிய நேரத்தில் கொடுத்தால், நாளைக்கு முறைப்படி எடுத்துக்கொண்டு விவாதிக்கப்படும்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஹக்கீம் அவர்கள் கொலை செய்யப்பட்டது சம்பந்தமாக ஆர். எஸ். எஸ். தோழர்கள் கைது செய்யப்பட்டால் அதில் எனக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் கிடையாது. கைது செய்யப்பட்ட கலைச்சோலை மணி என்பவருக்கும் ஆர். எஸ். எஸ்.க்கும் எந்தத் தொடர்பும் இல்லை. அவர் நகர காங்கிரஸ் கமிட்டியினுடைய செயலாளர். வீட்டிலே படுத்து உறங்கிக் கொண்டு இருந்த நேரத்தில் அவர் கைதுசெய்யப்பட்டிருக்கிறார். நிச்சயமாக அவருக்கும் இந்த இயக்கத்திற்கும் சம்பந்தம் கிடையாது. எனவே அதை எழுப்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாளைக்கு இது தொடர்பான ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக் கொள்ளப்படுகிற போது உரியவர்கள் அதைப் பற்றிப் பேசலாம்.

4. கவன ஈர்ப்பு.

நெய்வேலி இரண்டாவது சுரங்கம் வெட்டும் பணியினால் வீடு, நிலம் இழந்தவர்களுக்கு நிவாரண அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் இ. புகழேந்தி, ஏ. கணேசமூர்த்தி, மு. இராமநாதன், டாக்டர் கோ. நந்தகோபாலகிருட்டிணன், சி. கோவிந்தராஜன், மற்றும் கோ. பூவராகன் ஆகியோர் ஒரே பொருள் குறித்துக் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார். திரு. ஏ. கணேசமூர்த்தி.

2. தகவல் கோரல்—தொடர்ச்சி.

(எ) எதிர்கட்சியைச் சேர்ந்த முன்னால் சட்டமன்ற உறுப்பினர்கள், தொண்டர்கள் கைது செய்யப்பட்டுள்ளது குறித்து.

திரு. எம். அப்துல் லத்தீப் : தலைவர் அவர்களே, கோயம்புத்தூரில் நடந்த அந்தக் கொலை குறித்து, ஹக்கீம் என்னும் திராவிட முன்னேற்றக் கழக இளைஞர் அணியைச் சேர்ந்த தோழர் கொலை செய்யப்பட்டதைக் குறித்து நான் கூட ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நேற்றைக்கும்கூட இப்படித்தான் விவாதம் நடந்தது. செய்தியே இப்போதுதான் கிடைத்திருக்கிறது, என்னிடத்திலே முழு விவரம் இல்லை. அதை முறைப்படி ஒத்திவைப்புத் தீர்மானமாக, முன்கூட்டியே உரிய நேரத்தில் கொடுத்தால், நாளைக்கு முறைப்படி எடுத்துக்கொண்டு விவாதிக்கப்படும்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஹக்கீம் அவர்கள் கொலை செய்யப்பட்டது சம்பந்தமாக ஆர். எஸ். எஸ். தோழர்கள் கைது செய்யப்பட்டால் அதில் எனக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் கிடையாது. கைது செய்யப்பட்ட கலைச்சோலை மணி என்பவருக்கும் ஆர். எஸ். எஸ்.க்கும் எந்தத் தொடர்பும் இல்லை. அவர் நகர காங்கிரஸ் கமிட்டியினுடைய செயலாளர். வீட்டிலே படுத்து உறங்கிக் கொண்டு இருந்த நேரத்தில் அவர் கைதுசெய்யப்பட்டிருக்கிறார். நிச்சயமாக அவருக்கும் இந்த இயக்கத்திற்கும் சம்பந்தம் கிடையாது. எனவே அதை எழுப்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாளைக்கு இது தொடர்பான ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக் கொள்ளப்படுகிற போது உரியவர்கள் அதைப் பற்றிப் பேசலாம்.

4. கவன ஈர்ப்பு.

நெய்வேலி இரண்டாவது சுரங்கம் வெட்டும் பணியினால் வீடு, நிலம் இழந்தவர்களுக்கு நிவாரண அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் இ. புகழேந்தி, ஏ. கணேசமூர்த்தி, மு. இராமநாதன், டாக்டர் கோ. நந்தகோபாலகிருட்டிணன், சி. கோவிந்தராஜன், மற்றும் கோ. பூவராகன் ஆகியோர் ஒரே பொருள் குறித்துக் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார். திரு. ஏ. கணேசமூர்த்தி.

[1989 ஏப்ரல் 4

திரு. ஏ. கணேசமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''நெய்வேலி இரண்டாவது சுரங்கம் வெட்டும் பணியினால்—வீடு, நிலம் இழந்தவர்களுக்கு மாற்று ஏற்பாடுகளும் வேலை வாய்ப்புகளும் ஏற்படுத்திக் கொடுக்காதது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நெய்வேலியில் 2-வது சுரங்கம் வெட்டும் பணியினால் வீடு நிலம் இழந்தவர்களுக்கு மாற்று ஏற்பாடுகளை, வேலை வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்காதது குறித்த கவன ஈர்ப்புத் தீர்மானம் குறித்துச் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

நெய்வேலியில் இரண்டாவது சுரங்கப் பணிக்கு தேவைப் பட்ட நிலத்தைக் கொடுத்ததால் வீடு நிலம் இழந்தவர்களுக்கு மாற்று ஏற்பாடுகளும் வேலை வாய்ப்பு ஏற்பாடுகளும் கொடுக்கப் படவில்லை என்று கூறி மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த அவை யிலே கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள்.

நெய்வேலி நிர்வாகத் தலைவர் டாக்டர் மஜீத்சிங் அவர்கள் என்னை 31—3—1989 அன்று சந்தித்தபோது இந்தப் பிரச் சினைக்குறித்து அவர்களிடத்திலே விளக்கமாகப் பேசி இருக் கிறேன். இப்போதுள்ள பிரச்சினை நெய்வேலியில் இரண்டாவது சுரங்கத்தின் விரிவாக்கப் பணிக்கு உடனடியாக நிலமும் தேவை, அதேசமயத்தில் அதன் மூலம் நிலம் வீடுகளை இழந்தவர்களுக்கு மாற்று ஏற்பாடும், வேலை வாய்ப்பும் தரப்பட வேண்டும் என்பதும் தேவை.

(முற்பகல் 10-30)

நிர்வாகத்தின் தலைவர் என்னை சந்தித்த சமயத்தில் உடனடி யாக காலிசெய்யப்படவிருக்கும் தெற்கு வேலூர் வேப்பங்குறிச்சி பழைய நெய்வேலியைச் சேர்ந்த பாதிக்கப்படும் குடும்பங்களுக்கு குடும்பத்திற்கு 5 சென்ட் வீதம் அவர்கள் கோரும் இடங்களில் வீட்டு மனையும், தற்போது காலி செய்யப்படும் வீடுகளைச் சார்ந்தவர்களுக்கு சுமார் 500, 600 பேர்களுக்கு வேலை வாய்ப் பும் நிர்வாகம் அளிக்க முன்வர வேண்டும் என்று அவர்களிடத் திலே கூறியுள்ளேன். இதனை இப்போது மாத்திரம் நான் கூற வில்லை. ஆட்சிக்கு வருவதற்கு முன்பே கூட இந்தப் பிரச்சினை குறித்து என்னிடத்திலே மனு ஒன்று தரப்பட்டபோது, அதைப் பற்றி, கழகம் ஆட்சிக்கு வருமேயானால் ஆவன செய்யப்படும் என்று உறுதியளித்திருக்கிறேன். அந்த அடிப்படையில் தொடர்ந்து நிர்வாகத்தினரோடு பேசி, அந்தப் பகுதியிலே பாதிக்கப்பட்டு உள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்க ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1989 ஏப்ரல் 4]

திரு. ஏ. கணேசமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் பொது முக்கியத்துவமும், அவசரமும் வாய்ந்த பொருள்களை இந்த அவையிலே கூற விரும்புகிறேன். 1979–80 ஆம் ஆண்டுகளில் எடுக்கப்பட்ட.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆளுக்கு ஒரு வினா என்ற அடிப்படையில், ஒரு வினா தொடுக்கவும்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர்கள் தேவைப்பட்டால் கேட்கலாமே தவிர, கேட்டேதான் ஆகவேண்டும் என்ற அவசியம் இல்லை. அவர்கள் விரும்பினால் கேட்கலாம். முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எப்போதும் எந்த பேச்சாளரையும், விரும்பாவிட்டால் நான் வற்புறுத்துவது இல்லையே.

திரு. ஏ. கணேசமூர்த்தி : தலைவர் அவர்களே, வீடுகள் நிலங்கள் கொடுத்தவர்களுக்கு நீதிமன்றங்கள் அடிப்படையில் ஈட்டுத்தொகை வழங்க வேண்டும், வழங்க முடியுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நீதிமன்றங்களைக் குறித்து நான் எதுவும் சொல்வதற்கில்லை. இருந்தாலும் நிர்வாகத்தினரோடு கலந்து பேசி தக்க நிவாரணங்களை அளிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும் என்ற உறுதியைத் தான் என்னால் அளிக்க இயலும்.

*திரு. சி. கோவிந்தராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் 56வது விதியின்கீழ் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்தேன். அது இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தோடு இணைத்து வந்திருக்கிறது. பிரச்சினை என்னவென்று சொன்னால் அங்கிருக்கக் கூடிய விவசாயிகள் ஆயிரம் பேருக்கு மேற்பட்டவர்கள் சுமார் 5 ஆயிரம் ஏக்கர் நிலத்தை 10 ஆண்டுகளுக்கு முன்னதாக அந்த நிறுவனத்திற்கு கொடுத்திருக்கிறார்கள். அவர்களுக்கு நஷ்ட ஈட்டுத்தொகையாக கொடுத்தது 2,000மும் 7,000மும். பக்கத்தில் இருக்கக்கூடிய நிலத்தினுடைய மதிப்பு 60,000 ரூ. ஆகவே அவைகளைப் பெற்றுக்கொள்ளாமல் அந்த விவசாயிகள் சார்பு நீதிமன்றத்திற்கு கடலூருக்கும், விருத்தாசலத்திற்கும் சென்றார்கள். அந்த நீதி மன்றம் 45,000 சில நிலங்களுக்கும், 65,000 சில நிலங்களுக்கும் அளித்துத் தீர்ப்பு அளித்தது. அதைவிட்டு உயர்நீதி மன்றத்திற்கு வந்த பிறகு உயர் நீதிமன்றமும் அந்தத் தீர்ப்பை ஊர்ஜிதப்படுத்தியது. அந்த நஷ்டஈட்டுத் தொகை மட்டுமல்ல 30 சதவிகிதம் ஆறுதல் தொகையும், அது கொடுபட வேண்டிய காலத்திலிருந்து 9 சதவிகிதம் வட்டியும் சேர்த்து கொடுக்கப்பட

வேண்டும் என்று தீர்ப்புக் கொடுக்கப்பட்டது. இதனால்தான் அங்கிருக்கக்கூடிய விவசாயிகள் பூராவும் மனம் வருந்தி பல்வேறு கிளர்ச்சிகளிலே இறங்கினார்கள். இன்றைக்கு வந்திருக்கக்கூடிய நிறுவனத் தலைவர் நஷ்ட ஈடு எதுவும் கொடுக்க முடியாது என்றும்—இடையிலே வேலை பிரச்சினை என்று ஒன்று வந்தது. வீட்டிற்கு ஒருவருக்கு வேலை என்று, அதற்கென தனிப்பட்ட முறையிலே நேர்முகத் தேர்வுகளும் நடந்துவிட்டன. வீட்டை இடித்துவிட்டு வந்தால் தான் கொடுப்பேன் என்று சொல்லக்கூடிய நிலைமை இருக்கிறது. எனவே இன்றைக்கு வந்திருக்கும் நிறுவனத்தலைவர் நஷ்ட ஈடும் கொடுக்க முடியாது—வேலை கொடுப்பது என்பதும் எளிதல்ல என்று அறிக்கையே விட்டிருக்கிறார்கள். எனவே அங்குள்ள பிரச்சினையை முதலமைச்சர் கூறிய மாதிரி 5 சென்ட் நிலம் என்று பொதுவாகச் சொன்னால் மட்டும் போதாது. அவர்கள் அத்தனை பேரும் ஏழை விவசாயிகள். 10 ஆண்டுக் காலமாக அவர்கள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்தத் தீர்ப்பு வந்தும் 4 ஆண்டுகாலம் ஆகிவிட்டது. இதற்கு உரிய முறையிலே அந்த விவசாயிகளையும், நிறுவனத் தலைவரையும் அழைத்து ஒரு நியாயமான நஷ்ட ஈட்டை வழங்குவதற்கு முதலமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : முதலிலே நான் அளித்த விளக்கத்திலே அதைத்தான் சொல்லியிருக்கிறேன். தொடர்ந்து அதற்கான ஏற்பாடுகள் அரசின் சார்பில் செய்யப்படும்.

*திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அளித்த விளக்கத்திலிருந்து, நெய்வேலி இயக்குநர் அவர்கள் இங்கே வந்து பார்த்தார்கள் என்றும், அவர்களுடன் பேசி இந்தப் பிரச்சினையைத் தீர்க்கலாம் என்றும் சொல்லியிருக்கிறார்கள். இந்தப் பிரச்சினையை அவர்கள் வந்து பார்த்தது, உடனடியாக அவர்களுக்கு இடம் வேண்டும்; அதை மட்டும் நீங்கள் காலிசெய்து கொடுங்கள் என்று கேட்டிருப்பதாக நான் அறிகின்றேன். அவர்கள் எப்போதுமே இந்தப் பிரச்சினைக்குப் போவதில்லை. நானும் 25 ஆண்டுகளாக நெய்வேலியைச் சுற்றி, என்னுடைய கிராமம் பக்கத்திலே இருப்பதனாலேயும் அவர்கள் காரியங்கள் செய்கின்றதை தொடர்ந்து அறிந்து வருகிறேன். எப்போதெல்லாம் பிரச்சிதனகள் வருகின்றனவோ, அப்போது, நம்முடைய முதல்வர்களை, ஆட்சியிலே இருப்பவர்களை அணுகி அவர்களுடைய கோரிக்கையை சாதித்துக் கொள்கிறார்களே தவிர, நிரந்தரமாக அந்த வட்டாரத்திலே இருக்கின்ற விவசாய மக்களுக்கு, நிலத்தை அளிக்கின்ற மக்களுக்கு ஒருவிதமான பயனும் அளிப்பதில்லை என்பதை முதலமைச்சர் அவர்கள் உணர்ந்து, எல்லோரையும் அழைத்து வைத்து, எங்களையும் சேர்த்து வைத்து இந்தப் பிரச்சினையை விவாதிப்பதற்கு முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

1989 ஏப்ரல் 4]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, திரு. மஜீத் சிங் என்ற நிர்வாகத் தலைவர் அவர்கள் என்னை வந்து சந்தித்தபோது அவர்கள் ஏதோ அந்த இடத்தை ஒதுக்கீடு செய்து தரவேண்டும் என்று கேட்பதற்காக மாத்திரம் வந்ததாகச் சொன்னார்கள். அவர்கள் இப்போது புதிதாகப் பொறுப்பேற்றிருப்பவர்கள். அந்த முறையிலே ஒரு மரியாதை சந்துப்பிற்காக வந்தார்கள். அதை நான் பயன்படுத்திக்கொண்டு, அங்கே பாதிக்கப்பட்டுள்ள மக்களுடைய பிரச்சினைகளை அவர்களிடத்திலே எடுத்துச் சொல்லியிருக்கின்றேன். அவர் என்னிடத்திலே குறிப்பிட்டது, இப்போதுதான் புதிதாக வந்து இருக்கிறேன். இந்தப் பிரச்சினை முழுவதும் எனக்குத் தெரியாது, எவ்வளவு சாதகமாக இந்தப்பணியை என்னால் ஆற்ற இயலுமோ அந்த அளவிற்குச் சாதகமாக ஆற்றுகிறேன் என்று கூறி இருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் அவரைச் சந்தித்து, தங்களுடைய கோரிக்கைகளை மக்களுடைய கோரிக்கைகளை அவர்களிடத்திலே எடுத்துக் கூறலாம். அவர்களுக்கு உதவியாக அரசும் நிச்சயமாக இருக்கும். பாதிக்கப்பட்ட மக்களை நிச்சயமாக அரசும் பரிதவிக்கவிடாது என்ற உறுதியை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. இராமநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்த கருத்தினுடைய அடிப்படையில் மக்களுடைய பிரதிநிதிகளும், விவசாயிகள் சார்பிலே, அதாவது பாதிக்கப்பட்ட அந்த நில உடைமையாளர்களுடைய சார்பிலேயும் அரசினுடைய சார்பிலேயும் முத்தரப்பு என்கின்ற அளவிலே ஒரு குழுவை அமைத்து அவர்களுக்குச் சரியான நியாயங்கள் கிடைக்கவும், வேலைவாய்ப்புக்களோ அல்லது வீடுகள் இழக்கக்கூடியவர்களுக்கு உண்டான நஷ்டஈடோ அல்லது மாற்று இடம் என்கின்ற முறையிலே முதல்வர் சொன்னது போல, 5 சென்ட் இடம் என்கின்ற அளவிற்கு இடமோ அந்த வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு, முத்தரப்புக் குழுவை அரசு அமைக்குமா? அதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு உறுப்பினருடைய ஆலோசனையைப் போல, ஒரு முத்தரப்புப் பேச்சுவார்த்தை நடத்தி பிரச்சினையை முடிக்கலாமா என்ற கருத்தையும் அரசு ஆய்வு செய்து வருகிறது.

திரு. இ. புகழேந்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருத்தாசலம் பொதுக் கூட்டத்தில் மக்கள் அளித்த அந்த மனுவின்மீது மாண்புமிகு முதல்வர் அவர்கள் அன்றைய தினம் ஆளுகின்ற பொறுப்பிலே இல்லாமலிருந்தாலும்கூட, இந்த பிரச்சினையை ஆளுகின்ற பொறுப்பிற்கு வருகின்ற நேரத்தில் கவனிப்பேன் என்ற உறுதியினை அளித்ததற்கேற்ப இன்றைக்கு

[திரு. இ. புகழேந்தி] [1989 ஏப்ரல் 4

மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்த மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக ஆவன செய்வதாக, 'சொன்னதைச் செய்வோம்' என்ற நிலைப்பாட்டிற்கேற்ப இங்கே சொல்லியிருப்பதற்குப் பாராட்டினையும், நன்றியினையும் தெரிவித்துக்கொண்டு வெகு விரைவில் ஓய்வுபெறக்கூடியோர் அந்த என்.எல்.சி.கார்ப்பரேஷனில் 3,000 பேர்களுக்கு மேல் இருப்பதாக தெரிய வருகிறது. அந்த 3,000 பேர்களுக்கு மேல் ஓய்வு பெறக்கூடிய சூழ்நிலை இருக்கிற நிலையில் இன்றைக்கே அந்தப் பணிகளுக்கான ஆட்களைத் தேர்வு செய்கின்ற நிலையில் வீட்டினுடைய உரிமையாளர்கள். நிலத்தினுடைய உரிமையாளர்கள் ஆகியோர்களுக்கு முன்னுரிமையினை, தகுதி அடிப்படையிலே கொடுத்து, அவர்களைத் தேர்வு செய்து வைத்துக் கொள்கின்ற ஒரு நிலை ஏற்படுமேயானால், அந்த மக்களுடைய மனநிலையில் மிகப்பெரிய மகிழ்ச்சி நிலை ஏற்படுவதற்கு வாய்ப்பிருக்கிறது. அந்த நிலையினை அரசு தன்னுடைய ஆலோசனையில் வைத்துக் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-40)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, ஏற்கெனவே அளித்த உறுதியின் அடிப்படையில் காலி செய்யப்படும் குடும்பங்களுக்கு உடனடியாக மாற்று மனை கொடுக்கவும், வேலை வாய்ப்புகளை அவர்களுக்குப் பெற்றுத் தரவும் நிவாரணங்கள் வழங்கவும் தொடர்ந்து நிர்வாகத்திடம் பேச்சு வார்த்தை நடத்துமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார். அவரும் அந்தப் பணியை இப்போது செய்து வருகிறார். விரைவில் அரசு இதிலே தீவிர கவனம் செலுத்தி அந்த மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்க முன்வரும் என்பதை மீண்டும், மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த அலுவல், 1989-90ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும்.....

2. தகவல் கோரல்—தொடர்ச்சி.

(எ) எதிர்க்கட்சியைச் சேர்ந்த முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர்கள் தொண்டர்கள் கைது செய்யப்பட்டுள்ளது குறித்து—தொடர்ச்சி.

*திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜனநாயகத்தில் ஊர்வலங்களும், உண்ணாவிரதங்களும் அனுமதிக்கப்பட்ட முறைகள். நேற்று மதுரையில் முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் சேடப்பட்டி முத்தையா, திரு. ஐக்கையன் முன்னாள் எம். பி., முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் போடி ராமதாஸ், சுப்பிரமணியம் ஆகியோர்களோடு இன்னும்

500 பேர் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள் என்பதை அரசினுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன். இந்த கைதுகள் தொடராமல் இருக்க வேண்டும் என்று நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் 25ஆம் தேதி சட்டமன்றத்தில் நடைபெற்ற வன்முறை சம்பவங்களையொட்டி நாங்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் குறிப்பிட்டதைப் போல அதற்குப் பொறுப்பு ஏற்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ராஜினாமா செய்யவேண்டும் என்பதை வலியுறுத்தி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வெளிநடப்புச் செய்கிறது.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்புச செய்தனர்.)

5. விதி 110-இன் கீழ் முதலமைச்சரின் அறிக்கை.

சென்னையில் வீட்டு வசதி வாரிய மனை ஒதுக்கீடு, அடுக்கு மாடிக் கட்டிட அனுமதி ஆகியவற்றில் நடைபெற்ற முறைகேடுகள் குறித்து.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்: 110-வது விதியின்கீழ் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பொருளைப் பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஓர் அறிக்கையைப் படைப்பார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதித் துறை எம்.எம்.டி.ஏ., விதிகளை மீறி அனுமதி வழங்கியதில் உள்ள ஒழுங்கீனங்களைப் பற்றிய அறிவிப்பு: சென்னை நகரத்தில் புதிய கட்டிடங்கள் கட்டுவதற்குத் தேவையான அனுமதிகளை வழங்குவதில் 1986-87 ஆம் ஆண்டுகளில் அதிக அளவுக்கு முறைகேடுகள் நடந்துள்ளன என்றும், மக்களின் பாதுகாப்பிற்கும், நல்வாழ்விற்கும் தேவையான அடிப்படை வசதிகள் பற்றிய சட்ட விதிகளைத் (எம்.எம். டி.ஏ. ரூல்ஸ்) தளர்த்தி பலருக்கு முறைகேடான அனுமதிகளை அன்றைய அந்தத் துறையின் அமைச்சர் வழங்கியுள்ளார் என்றும், கட்டிட விதிகளை ஒழுங்குபடுத்தும் பொறுப்பினை ஏற்றுள்ள சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் (எம்.எம். டி.ஏ.) மற்றும், அரசு செயலாளர் பரிந்துரை செய்யாமல் ஆட்சேபணை தெரிவித்த பலஅடுக்குமாடிக்கட்டிடங்களுக்கு அமைச்சர் தன்னிச்சையாக எந்தக் காரணமும் இன்றி விதிகளைத் தளர்த்தி அனுமதி தந்து உத்தரவிட்டுள்ளார் என்றும் (கூச்சல்-குழப்பம்).

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கத்தின் சார்பில் அறிவிப்பு.......(கூச்சல்-குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலமைச்சர் பேசும் போது, அறிக்கை படிக்கும்போது இடையிலே யாரும் பேசுவதற்கு வாய்ப்பே கிடையாது. (கூச்சல்-குழப்பம்).

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கடுமையான கண்டனங்கள் பொது மக்களிடமிருந்து எழுந்தன. (கூச்சல்-குழப்பம்) குடியிருப்புப் பகுதியில் கடைகள், ஓட்டல்கள், லாட்ஜ்கள் மற்றும் வியாபாரக் கட்டிடங்கள் (கூச்சல்-குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த அலுவல். 1989–90 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது..........

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.......... (கூச்சல்-குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் ஒவ்வொரு நாளும் இதேப் பிரச்சினையை எழுப்பிக் கொண்டிருந்தால் எப்படி? இப்போது நீங்கள் உட்கார முடியுமா, முடியாதா ? (கூச்சல்-குழப்பம்). அறிக்கையைப் படிக்கட்டும், அறிக்கையைப் படித்த பிறகு உங்களுக்குப் பேசுவதற்கு வாய்ப்பு இருக்கும். அறிக்கை படிக்கும்போது குறுக்கே பேச முடியாது. (கூச்சல்-குழப்பம்) 110-வது விதியின் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிக்கை படிக்கிறபோது வேறு யாரும் குறுக்கே பேச முடியாது.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்று பேசிக்கொண்டே இருந்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது நீங்கள் விதிகளின் கீழே கட்டுப்படவில்லையென்றால் நான் உங்களை மறுபடியும் வெளியேற்ற வேண்டியிருக்கும். (கூச்சல்-குழப்பம்).

I request the Members of the All–India Anna D.M.K. to withdraw from the House. (கூச்சல்-குழப்பம்).

திரு. எஸ். திருநாவுக்கரசு : இதே வேலைதானா தினமும். (கூச்சல்—குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதே வேலை யாருக்கு ? (கூச்சல்-குழப்பம்) அவர்களை வெளியேறுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளியேறாமல் நின்று கொண்டே இருந்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சார்ஜண்ட், வாட்ச் அண்டு வார்ட் வந்து, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களை வெளியேற்றுமாறு ஆணையிடுகிறேன். (கூச்சல்-குழப்பம்).

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து பேரவைக் காவலர்களால் வெளியே அழைத்துச் செல்லப்பட்டனர்.) (குறுக்கீடுகள்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லோரும் தயவு செய்து உட்காருங்கள். இப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிக்கையைப் படைப்பார்கள்.

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, 110-வது விதியின்படி பொது முக்கியத்துவம் வாய்ந்த பொருளைப் பற்றி ஒரு அமைச்சர் பேரவைத் தலைவரின் இசைவுடன் அறிக்கை ஒன்றை அளிக்கலாம் என்ற 110-ஆவது விதியின் கீழ்தான் இதைப் படிக்கிறேன்.

சென்னை நகரத்திலே புதிய கட்டிடங்களைக் கட்டுவதற்குத் தேவையான அனுமதிகளை—இதுகூட கவர்னர் குரானா அவர்களிடத்திலே கொடுக்கப்பட்ட புகாரின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையொட்டிய அறிக்கையைத்தான் படிக்கிறேன். சென்னை நகரத்தில் புதிய கட்டிடங்கள் கட்டுவதற்குத் தேவையான அனுமதிகளை வழங்குவதில் 1986–87ஆம் ஆண்டுகளில் அதிக அளவுக்கு முறைகேடுகள் நடந்துள்ளன என்றும், மக்களின் பாதுகாப்பிற்கும், நல்வாழ்விற்கும் தேவையான அடிப்படை வசதிகள் பற்றிய சட்ட விதிகளை (எம்.எம்.டி.ஏ. ரூல்ஸ்களை) தளர்த்திப் பலருக்கு முறைகேடான அனுமதிகளை அன்றைய அந்தத் துறையில் அமைச்சர் வழங்கியுள்ளார் என்றும் நான் பெயரைக் கூடச் சொல்லவில்லை—அந்தத் துறையின் அமைச்சர் வழங்கியுள்ளார் என்றும், கட்டிட விதிகளை ஒழுங்குபடுத்தும் பொறுப்பினை ஏற்றுள்ள சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் (எம்.எம்.டி.ஏ.) மற்றும், அரசு செயலாளர் பரிந்துரை செய்யாமல் ஆட்சேபணை தெரிவித்த பல அடுக்கு மாடிக் கட்டிடங்களுக்கு அந்த அமைச்சர் தன்னிச்சையாக எந்தக் காரணமும் இன்றி விதிகளைத் தளர்த்தி அனுமதி தந்து உத்திரவிட்டுள்ளார் என்றும் கடுமையான கண்டனங்கள் பொது மக்களிடமிருந்து எழுந்தன. குடியிருப்புப் பகுதியில் கடைகள், ஓட்டல்கள், லாட்ஜ்கள் மற்றும் வியாபாரக் கட்டிடங்கள் கட்டவும், ஏற்கனவே நெருக்கடியான, குறுகிய சாலைகள் உள்ள இடங்களில் அடுக்கு மாடிக் கட்டிடங்கள் கட்டுவதற்கும் முறைகேடாகப் பெருமளவில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதுபற்றி சென்னையிலே உள்ள நுகர்வோர் நடவடிக்கைக் குழு (கன்ஸ்யூமர் ஆக்ஷன் குரூப்) உச்ச நீதி மன்றத்திலே வழக்கு ஒன்றும் தொடர்ந்தது.

இதற்கிடையில் திருவாளர்கள் வலம்புரி ஜான், ஏ.சி. சண்முகம், ஜகத்ரட்சகன் ஆகிய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள், வீட்டு வசதித் துறை அமைச்சர் புதிய கட்டிடங்கள் கட்ட அனுமதிகள் வழங்க உத்தர விடுவதில் பெருமளவு ஊழல்கள் புரிந்துள்ளார் என்று அப்பொழுது இருந்த கவர்னர் திரு. குரானா அவர்களிடம் மனு ஒன்றை அளித்தார்கள். அந்த மனுவின் மீது விஜிலன்ஸ் கமிஷனர் விசாரணை செய்ய ஆளுநராக இருந்த மேதகு குரானா அவர்கள் உத்தரவிட்டிருந்தார்.

மேலும் 180 என்.எஸ்.சி. போஸ் ரோட்டில் வசிக்கும் திரு. எஸ். கிருஷ்ணன் என்பவரும் தனது வீட்டுக்கு அருகில் உள்ள மனையில் கட்டிடங்கள் கட்டுவதற்கு திரு. வி. தாயாராம் மற்றும் திரு. வி. சிமன்தாஸ் இருவருக்கும் அனுமதி வழங்குவதில் அமைச்சர் முறைகேடாக உத்தரவு இட்டிருக்கிறார் என்று முறையிட்டு, அதுகுறித்து விசாரிக்கும்படி கேட்டிருந்தார். அந்த மனுவின் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

(முற்பகல் 10-50)

கவர்னர் குரானா விடுத்த உத்தரவையொட்டி இதுபோன்ற பொதுநல விரோத நடவடிக்கைகளைக் களைந்திட ஆர்வம் கொண்டுள்ள இன்றைய இந்த அரசு இதுபற்றி விரிவாக ஆய்வு செய்ததில் கீழ்க்கண்ட உண்மைகள் புலனாகியுள்ளன:—

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் மற்றும் வீட்டுவசதித் துறையால் பரிந்துரை செய்யப்படாமலிருந்தும் அமைச்சர் தன்னிச்சையாக உத்தரவிட்ட அயிட்டங்கள்.

21-10-1986 முதல் 30-11-1987 வரை	.	124 அயிட்டங்கள்
1-12-1987 முதல் 24-12-1987 வரை	.	17 அயிட்டங்கள்
25-12-1987 முதல் 6-1-1988 வரை	..	33 அயிட்டங்கள்
7-1-1988 முதல் 29-1-1988 வரை	.	7 அயிட்டங்கள்
மொத்தம்	..	181 அயிட்டங்கள்

இந்த 181 இனங்களில் 174 இனங்கள் ஒருவர் அந்தத் துறையின் அமைச்சராக இருந்தபோது உத்தரவு போட்டவைகளாகும்.

1989 ஏப்ரல் 4] [டாக்டர் மு. கருணாநிதி]

எம். ஜி. ஆர். மறைந்த நான்காவது நாளான 28-12-1987ல் 2 அடுக்குமாடிக் கட்டிடங்களுக்கும்; 5ஆவது நாளான 29-12-1987-ல் 1 அடுக்குமாடிக் கட்டிடத்திற்கும்; 30-12-87-ல் 1 அடுக்குமாடிக் கட்டிடத்திற்கும்; 31-12-1987-ல் அதாவது அந்த அமைச்சர் தனது பதவிக் காலத்தில் கையொப்பமிட்ட கடைசி நாளில் மட்டும் ஒரேயடியாக 29 அடுக்குமாடிக் கட்டிடங்களுக்கு உத்தரவிட்டுள்ளார்; இந்த விதிகளை எல்லாம் மீறி உத்தரவிட்டுள்ளார்.

மொத்தமாக, அவர் அந்தத் துறையின் அமைச்சராகப் பொறுப்பு வகித்த காலத்தில், அதாவது 21-10-1986 முதல் 31-12-1987 வரை 174 அயிட்டங்களில் எம்.எம்.டி.ஏ. மற்றும் வீட்டுவசதித்துறை ஆகியவற்றின் ஆட்சேபணைகளைப் புறக்கணித்து தன்னிச்சையாக, முறைகேடாக உத்தரவிட்டுள்ளார்.

"இன்னின்ன காரணங்களுக்காக அனுமதி மறுக்கப்படுகிறது" என்று தெள்ளத் தெளிவாக எம்.எம்.டி.ஏ.-யும் வீட்டுவசதித் துறையும் எழுத்துப் பூர்வமாக கோப்புகளில் விளக்கியிருந்தும்கூட, பெருமளவுக்கு முறைகேடான உத்தரவுகள் அந்த அமைச்சரால் வழங்கப்பட்டுள்ளன என்பது தெளிவாகிறது.

திரு. எஸ். கிருஷ்ணன் என்பவர் அன்றைய கவர்னர் குரானா அவர்களிடம் கொடுத்த மனுவில் நடவடிக்கை எடுக்கப்பட்டு, கவர்னர் அலெக்சாண்டர் ஆட்சியில் இதுகுறித்து முன்னாள் அட்வகேட் ஜெனரல் திரு. கிருஷ்ணமூர்த்தியிடம் 10-11-1988 அன்று சட்டக் கருத்து (லீகல் ஒப்பினியன்) பெறப்பட்டுள்ளது. அதன்படி "விதிகளைத் தளர்த்தி முன்னாள் அமைச்சர் எடுத்த முடிவுகள் எந்தக் காரணத்தின் அடிப்படையிலும் அமையவில்லை—அவ்வாறு காரணம் குறிப்பிடாமல் பிறப்பிக்கப்பட்ட முன்னாள் அமைச்சரின் ஆணைகள் தன்னிச்சையானது—சட்டப்படி செல்லத்தக்கதாகாது. இதுபோன்ற அதிகாரங்களைப் பயன்படுத்துவது முறைகேடானது என்று அறிவிக்கப்பட வேண்டும்" என்று அட்வகேட் ஜெனரல் கிருஷ்ணமூர்த்தி கருத்துக் கூறியுள்ளார். அட்வகேட் ஜெனரல் கூறியக் கருத்தை அப்படியே ஆங்கிலத்திலே கூறவேண்டுமென்றால்,

"The Ex-Minister's decision to relax the rules is not supported by any reason...........

In the absence of any such reasoning it has necessarily to be held that the decision of the Ex-Minister as found in the file is arbitrary and cannot stand the test referred to above. The exercise of such power by an authority would have to be declared as irregular."

இப்படிப்பட்ட காரியங்களால் கீழ்க்கண்ட பொதுநலக் கேடுகள் விளைந்துள்ளன :—

(1) பல குடும்பங்கள் வசிக்கின்ற நெரிசலான நிலையில் பல அடுக்கு மாடிக் கட்டிடங்களுக்கு பாதுகாப்பு விதிகளை மீறி அனுமதி அளித்ததால் தீ விபத்து மற்றும் போக்குவரத்து நெருக் கடி ஏற்பட்டு சாலை விபத்துக்கள் அதிகரிக்கக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது.

(2) அடுத்தடுத்த நெருக்கமான பலமாடிக் கட்டிடங்களுக்கு தேவையான இடைவெளியும் திறந்த வெளியும் ஒதுக்கப்படாமல் அது சம்பந்தப்பட்ட அவசியமான விதிகளைத் தளர்த்தி தனி யார் பலருக்கு உதவிடும் வகையில் உத்தரவிட்டதில் போதிய காற்றோட்டம், சூரிய வெளிச்சம் போன்ற அடிப்படை வசதிகள் கிடைக்காமல் போவதுடன் அந்த வட்டாரத்தில் வாழ்வோரின் "பிரைவசி"யும் பாதிக்கப்படுகிறது.

(3) குடிதண்ணீர் விநியோகம், கழிவுநீர் அகற்றுதல் முத லிய அடிப்படை வசதிகள் பாதிக்கப்படும் அளவுக்கு ஏற்கெனவே நெருக்கமாக குடியிருப்புகள் உள்ள பகுதிகளில் மேலும் மேலும் அதிக அளவு அடுக்கு மாடிக் கட்டிடங்களை விதிகளை மீறி அனு மதித்ததன் மூலமாக மக்களின் ஆரோக்கியமான வாழ்வு சிதைந்து விட்டது.

அ.இ.அ.தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்களான திருவா ளர்கள் வலம்புரி ஜான், ஏ. சி. சண்முகம், ஜகத்ரட்சகன் ஆகியோர் கொடுத்திருந்த மனுவின்பேரில் முன்பு ஆளுநராக இருந்த திரு. குரானா அவர்களே இதுபற்றி விஜிலன்ஸ் கமிஷனர் விசாரிக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்.

அதையொட்டி இந்த அரசு முன்னாள் அமைச்சர் செய்த அடுக்குமாடிக் கட்டிட ஊழல் குறித்து உகந்த விசாரணையை மேற்கொள்ளும் என்று இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள் கிறேன்.

புதிய வீட்டுவசதித் திட்டங்களை உருவாக்கும்போது மொத்த பரப்பளவில் 10 சதவீதம் பூங்கா, சமூகக்கூடம், ஆரம்ப சுகாதார நிலையம், பள்ளிக்கூடம், கடைகள் முதலிய பொது நோக்குக் காரியங்களுக்காக ஒதுக்குவது என்று விதிகள் செய்யப் பட்டிருக்கின்றன. இதுபோன்ற பகுதிகள் மேற்கண்ட விதி களுக்கு மாறாக வீட்டுமனைகளாக மாற்றப்பட்டு 1986 மற்றும் 1987ஆம் ஆண்டுகளில் அதிக அளவில் தனியாருக்கு ஒதுக்கீடு

செய்யப்பட்டுள்ளதென்று பொதுமக்கள் கண்டனம் தெரிவித்தனர். இதுபோன்ற பொது நோக்குக் காலியிடங்களை வீட்டு மனைகளாக மாற்றம் செய்து, சம்பந்தப்பட்ட துறையின் அன்றைய அமைச்சரே அவருடைய தனி அதிகாரத்தைப் பயன்படுத்தி ஒதுக்கீடு செய்துள்ளார்.

பயன்

அண்ணா நகரில் காங்கிரஸ் ஆட்சியில் துவக்கப்பட்ட தொழிற் கண்காட்சி 1967-ல் பேரறிஞர் அண்ணா காலத்தில் திறந்து வைக்கப்பட்டது நினைவு இருக்கலாம். அதன் நினைவுச் சின்னங்களாக ஒரு கோபுரமும் மற்றும் சிலைகளும், பூங்காக்களும் இன்னும் இருந்து வருவது நினைவிருக்கலாம். இதுபோன்று சமூகக்கூடம், அந்த வட்டாரப் பொதுமக்களுக்குப் பயன்படும் மருத்துவமனை, பள்ளிக்கூடம், பூங்காக்கள் போன்றவைகளை உருவாக்குவதற்காக ஆங்காங்கே காலியாக விடப்பட்டிருந்த சுமார் 302 கிரவுண்டுகளை வீட்டுமனைகளாக மாற்றி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

இப்படித் தனியாருக்கு விநியோகம் செய்யப்பட்ட 240 பிளாட் அதாவது 302 கிரவுண்டுகளும் இன்று சென்னை மாநகரத்திலேயே மிக அதிகமான ரூபாய்க்கு விற்பனையாகக்கூடிய அண்ணா நகர், கலைஞர் கருணாநிதி நகர், பெசன்ட் நகர், இந்திரா நகர் போன்ற "போஷ் லொக்காலிட்டி"-யில் இருப்பவை என்பது குறிப்பிடத்தக்கதாகும். இதிலிருந்தே இந்த வீட்டு மனைகளின் விலை மதிப்பை மாண்புமிகு உறுப்பினர்களும், தமிழக மக்களும் ஒருவாறு யூகித்துக்கொள்ளலாம்.

மார்க்கெட்டுக்காக ஒதுக்கப்பட்டவை ..	17 பிளாட்
கடைகளுக்காக ஒதுக்கப்பட்டவை ..	50 பிளாட்
பொதுக் காரியத்திற்காக ஒதுக்கப்பட்டவை ..	26 பிளாட்
வியாபாரப் பகுதிக்காக ஒதுக்கப்பட்டவை ..	22 பிளாட்
திறந்த வெளிக்காக ஒதுக்கப்பட்டவை	17 பிளாட்
கிணறுக்காக ஒரு பிளாட்	
பள்ளிக்கூடத்திற்காக	2 பிளாட்
வாகனங்கள் நிறுத்துமிடத்திற்காக	8 பிளாட்
தொழில் பள்ளிக்கூடங்களுக்காக	13 பிளாட்
நலிவடைந்தோருக்கான வீடுகளுக்காக	17 பிளாட்
புதிதாக ஒதுக்கப்பட்டவை	35 பிளாட்
சமூகக்கூடத்திற்காக ஒதுக்கப்பட்டவை.. ..	13 பிளாட்
குடியிருப்புப் பகுதிகளுக்காக ஒதுக்கப்பட்டவை ..	8 பிளாட்
பூங்காக்களுக்காக ஒதுக்கப்பட்டவை	4 பிளாட்
மருத்துவமனைக்காக ஒதுக்கப்பட்டவை ..	7 பிளாட்

மொத்தம் 240 பிளாட்டுகள், ஆக மொத்தம் 302 கிரவுண்டு களை விதி முறைகளைக் கடைப்பிடிக்காமல் பெரும்பாலான ஒதுக்கீடுகளில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் செயற் பொறி யாளர்கள் (எக்சிகியூட்டிவ் என்ஜினியர்கள்), அமைச்சருடைய வெறும் வாய்மொழி உத்தரவைப் பெற்றதன் மூலமே வீட்டு வசதி வாரியம் மூலம் அரசுக்கு காலியிடங்களை வீட்டுமனைக ளாக மாற்றுவது குறித்து அறிக்கை அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது இவ்வாறு அறிக்கைகள் அனுப்பப்படுவதற்கு முன்பு சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் (எம்.எம்.டி.ஏ.) அனுமதி எதை யும் பெறவில்லை. அவசர அவசரமாக தமிழ்நாடு வீட்டுவசதி வாரியச் செயற் பொறியாளர்களிடமிருந்து அறிக்கைகள் பெறப் பட்டு உடனுக்குடன் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. ஒரு ஒதுக்கீட்டில்கூட, இன்னாருக்கு ஒதுக்கீடு செய்யலாம் என்று வீட்டு வசதி வாரியம் பரிந்துரை செய்யவில்லை.

இந்த 240 பிளாட்டுகளில், 43 நபர்கள் வீட்டுவசதி வாரியத் திடமிருந்து (நோ அப்ஜக்ஷன் சர்ட்டிபிகேட்) அதாவது ஆட்சேபணையில்லாத சான்றிதழைப் பெற்று கட்டிடம் கட்டும் வேலையைத் துவங்கிவிட்டனர். மீதமுள்ள 197 நபர்கள் இன்னும் கட்டிடம் கட்டத் துவங்கவில்லை.

உதாரணத்திற்கு, இதுபோன்ற 52 இனங்களை ஆய்வு செய்த தில் ஏராளமான ஒழுங்கீனங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஒரே நபருக்கு 2 ஒதுக்கீடுகள் செய்யப்பட்டதும், ஏற்கெனவே வீடு உள்ளோருக்கு மீண்டும் வீட்டுமனை ஒதுக்கீடு செய்யப்பட் டுள்ளதும் விசாரணையில் கண்டறியப்பட்டது.

அன்றைய அரசின் அல்லது அமைச்சரின் அலாதி அன்பைப் பெற்ற சில வி.ஐ.பி.-க்களின் பெயர்களை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன்.

டாக்டர் திருமதி பானுமதி தம்பிதுரை. திரு. தம்பித்துரை, எம்.பி. அவர்களின் துணைவியார். இது மருத்துவமனைக்காக உரிய பகுதியல்ல. இது மாற்றப்பட்டு அதுவும் 7½ கிரவுண்டு அண்ணா நகரில் 24—7—1987-ல் இவருக்கு ஒதுக்கப்படுகிறது.

இன்னொருவர் டாக்டர் திருமதி நற்குணம். இவருக்கும் சுமார் 7½ கிரவுண்டு பெசன்ட் நகரில் வழங்கப்பட்டிருக்கிறது. இந்த நிலம் அந்த வட்டார மக்களுக்குத் தேவையான மார்க்கெட் ஒன்று கட்டுவதற்காக ஒதுக்கப்பட்டிருந்தது. அதையும் மாற்றி இவருக்குத் தரப்பட்டுள்ளது. இதுபோன்ற பல பெயர்கள் உள்ளன. பொதுவாக வீட்டு வசதி வாரியத்தில் வீடு கட்டுவதற்கு 2 அல்லது 2½ கிரவுண்டுகள்தான் தருவது வழக்கம். விதிகளை மீறியதுமல்லாமல் ஏழரை கிரவுண்டுகள் வழங்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

1989 ஏப்ரல் 4] [டாக்டர் மு. கருணாநிதி]

அதுபோலவே கலைஞர் கருணாநிதி நகரில் அந்த வட்டார மக்களுக்கு உதவும் வகையில் கடைகள் கட்டுவதற்காக ஒதுக்க பட்டிருந்த இடம் அ.இ.அ.தி.மு.க. மாவட்டச் செயலாளர் திரு. கருப்பசாமி பாண்டியனுக்கும், திரு. கோவைத்தம்பிக்கும் வீடு கட்டுவதற்கு என்று வழங்கப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 11-00)

இவ்வாறு முறைகேடாக தரப்பட்டுள்ள 302 கிரவுண்டில் உள்ள 240 பிளாட்களின் மார்க்கெட் விலை சுமார் 13 கோடி ரூபாய்.

இதன் பின்னணியில் இந்த 240 பிளாட்டுகள் ஒதுக்கீடு தொடர்பாக விரிவாக விசாரணை செய்து நடைபெற்ற வீட்டு மனை ஒதுக்கீடு ஊழல் குறித்து கீழ்க்கண்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநருக்கு இவ்வரசு ஆணையிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(1) ஒதுக்கீடு பெற்றோர்கள் அனைவரும் வீட்டுமனை பெறத் தகுதி உள்ளவர்களா என்பதை விசாரித்து, தகுதியற்றவர்கள் ஒதுக்கீடு பெற்றிருப்பின், அவ்வொதுக்கீடுகளை உடனடியாக ரத்து செய்ய வேண்டும்.

(2) இந்த மனைகளில் முறையான விசாரணையின்றி வீடுகள் கட்டுவதற்கு அனுமதி வழங்கக்கூடாது.

(3) ஏற்கெனவே ஒதுக்கீடு செய்யப்பட்ட, பூங்கா, சமூக கூடம் போன்ற பொதுநோக்குக் காலியிடங்களை வீட்டுவசதி வாரியம் திரும்பப் பெறவேண்டும்.

இந்த ஆணையை நிறைவேற்ற வீட்டுவசதி வாரியம் உடனடியாக உரிய விசாரணை நடத்தி ஒரு மாத காலத்திற்குள் அரசுக்கு அறிக்கை தரவேண்டும். அதனையொட்டி இந்த வீட்டுமனை ஒதுக்கீட்டு ஊழல்கள் புரிந்தோர் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைச் சொல்லி இந்த அறிக்கையை அவையில் வைக்கிறேன்.

6. அவையில் பயன்படுத்தப் பெற்ற சில சொற்கள் குறித்துத் தலைவரின் குறிப்புரை

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, மக்களுடைய ஆதரவாலும், இறைவனுடைய திருவருளாலும் ஒரு முறை பாராளுமன்ற உறுப்பினராகவும், மூன்றாவது முறையாக சட்டமன்ற உறுப்பினராகவும் வந்திருக்கிறேன். நான் என்ன சொல்ல விரும்புகிறேன், எதைச் சொல்ல விரும்புகிறேன் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியினுடைய துணைத்

1989 ஏப்ரல் 4] [டாக்டர் மு. கருணாநிதி]

அதுபோலவே கலைஞர் கருணாநிதி நகரில் அந்த வட்டார மக்களுக்கு உதவும் வகையில் கடைகள் கட்டுவதற்காக ஒதுக்கபட்டிருந்த இடம் அ.இ.அ.தி.மு.க. மாவட்டச் செயலாளர் திரு. கருப்பசாமி பாண்டியனுக்கும், திரு. கோவைத்தம்பிக்கும் வீடு கட்டுவதற்கு என்று வழங்கப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 11-00)

இவ்வாறு முறைகேடாக தரப்பட்டுள்ள 302 கிரவுண்டில் உள்ள 240 பிளாட்களின் மார்க்கெட் விலை சுமார் 13 கோடி ரூபாய்.

இதன் பின்னணியில் இந்த 240 பிளாட்டுகள் ஒதுக்கீடு தொடர்பாக விரிவாக விசாரணை செய்து நடைபெற்ற வீட்டு மனை ஒதுக்கீடு ஊழல் குறித்து கீழ்க்கண்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநருக்கு இவ்வரசு ஆணையிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(1) ஒதுக்கீடு பெற்றோர்கள் அனைவரும் வீட்டுமனை பெறத் தகுதி உள்ளவர்களா என்பதை விசாரித்து, தகுதியற்றவர்கள் ஒதுக்கீடு பெற்றிருப்பின், அவ்வொதுக்கீடுகளை உடனடியாக ரத்து செய்ய வேண்டும்.

(2) இந்த மனைகளில் முறையான விசாரணையின்றி வீடுகள் கட்டுவதற்கு அனுமதி வழங்கக்கூடாது.

(3) ஏற்கெனவே ஒதுக்கீடு செய்யப்பட்ட, பூங்கா, சமூக கூடம் போன்ற பொதுநோக்குக் காலியிடங்களை வீட்டுவசதி வாரியம் திரும்பப் பெறவேண்டும்.

இந்த ஆணையை நிறைவேற்ற வீட்டுவசதி வாரியம் உடனடியாக உரிய விசாரணை நடத்தி ஒரு மாத காலத்திற்குள் அரசுக்கு அறிக்கை தரவேண்டும். அதனையொட்டி இந்த வீட்டுமனை ஒதுக்கீட்டு ஊழல்கள் புரிந்தோர் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைச் சொல்லி இந்த அறிக்கையை அவையில் வைக்கிறேன்.

6. அவையில் பயன்படுத்தப் பெற்ற சில சொற்கள் குறித்துத் தலைவரின் குறிப்புரை

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, மக்களுடைய ஆதரவாலும், இறைவனுடைய திருவருளாலும் ஒரு முறை பாராளுமன்ற உறுப்பினராகவும், மூன்றாவது முறையாக சட்டமன்ற உறுப்பினராகவும் வந்திருக்கிறேன். நான் என்ன சொல்ல விரும்புகிறேன், எதைச் சொல்ல விரும்புகிறேன் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியினுடைய துணைத்

[திரு. குமரி அனந்தன்] [1989 ஏப்ரல் 4

தலைவராக, திரு. மூப்பனார் அவர்களுடைய தளபதியாக இங்கே பணியாற்றிக் கொண்டிருக்கிறேன். ஏன் என்று கூட சொல்லாமல், 'வாடா, போடா' என்று சொல்வது பொருத்தம்தானா ? ஏற்கெனவே ஒரு தடவை நான் இந்தப் பொருளைத் தான் பற்றி சொன்னேன். இதைப் போல ஒரு தடவை எழுந்த போது 'அடுத்த கையை ஒடிப்பேனடா' என்று எந்த திசையி லிருந்து அந்த சொற்கள் வந்தனவோ, அதே போல இங்கே வருவதனை நான் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குச் சொல் லிக்கொள்கிறேன்.

முதல்வர் அவர்களே, இந்த கை சங்கத் தமிழ் எழுதுகின்ற ஆற்றல் பெற்ற கையல்ல, பாலைவன ரோஜாக்களை எழுது கின்ற ஆற்றல் பெற்ற கையல்ல. அரசாங்கக் கோப்புகளிலே கையெழுத்துப் போடுகின்ற ஆற்றல் பெற்ற கையும் அல்ல. ஆனாலுங்கூட சொல்கிறேன். நமது அவையிலே எடுத்தவுட னேயே, யாரை யார் சொல்வது என்பது கூட இல்லாமல் 'வாடா, போடா' என்று சொல்வதும், நம்மிலே சில உறுப்பினர்களும் அதற்கு ஆதரவாக வெகு நேரம் பேசுவதும், ஒருவர் ** என்று சொன்னால், மாண்புமிகு சபாநாயகர் அவர்கள் அதை மிக இலக்கியச் சுவையோடு சொல்கிறார்கள், அதையும் நான் பார்க்கிறேன். இந்த இலக்கியச் சுவையை உணர்கின்ற இதயத்தை நாம் எல்லாம் நம் தமிழ் அன்னையிடத்திலே பெற் றிருக்கிறோம். பிறகு அது குப்பையா, கோமேதகமா என்று சொல்கிறேன். அதன் பிறகு தொடர்ந்து வாதம் செய்வதை அனுமதிக்கிறீர்கள். இன்னும் சொல்லப்போனால், பாரதி தாசன் விழா எடுக்க இருக்கிறோம். நமக்குத் தெரியும். வானத்திலே இருக்கின்ற நட்சத்திரக் கூட்டங்களை ''வானம் எங்கும் வைரக் குப்பை'' என்றே சொல்வான். மக்கள் குடியிருக்கின்ற இடம் குப்பம் என்று பெயர். இத்தனையை யும் நான் இங்கே விளக்கிச் சொல்வதற்கு நேரம் தருவார்களா ? இல்லை. ஆனால் மற்றவர்களுக்கெல்லாம் கொடுக்கப்படு கிறது. எனவே, உங்களை பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். 'வாடா, போடா' என்ற சொற்களையெல்லாம் தவிர்ப்பது நல்லது. இப்படிப்பட்ட சொற்றொடர்களை நாம் பயன் படுத்துவதன் மூலம் ஒருவருக்கொருவர் வேதனைப்படுவதைத் தவிர வேறு இருக்காது. நம்முடைய சட்டமன்றத்தைப் பற்றி, யார் தவறு செய்தாலும் சொல்கிறேன், அந்த வகையிலே பார்க் கின்றபோது, இந்த பகுதியிலே சத்தம் போடுகிறவர்கள் யாருக் கும் உயர்ந்தவர்களாக அவர்கள் இல்லை என்பதை மனவேதனை யோடு சுட்டிக்கொண்டு, இப்படிப்பட்ட காரியங்கள் நடப்பதை கண்டித்து எங்களுடைய கட்சியினுடைய சார்பிலே அனை வருமாக வெளிநடப்பு செய்கிறோம்.............

திருமதி பாப்பா உமாநாத் : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர்...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள். முதல்வர் அவர்கள் பேசட்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் அணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அந்த வார்த்தைகளை திருப்பிச் சொல்லக்கூட விரும்பவில்லை. நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள், அ.தி.மு.க.-வினர் ஒரு காரணத்திற்காக வெளியேறினால், அவர்களும் ஒரு காரணத்தைச் சொல்லிவிட்டு வெளியேற விரும்புவது இந்த பாராளுமன்ற முறையிலே எங்களோடு சேர்ந்து ஒத்துழைத்து நடத்திக் கொடுப்பதற்கு ஒருவேளை முன்வரவில்லையோ என்று பெரிதும் வேதனைப்படுகிறேன். தங்களைப்போன்ற தமிழ் உள்ளம் படைத்தவரிடத்திலே நான் அப்படிப்பட்ட ஒரு நிலையை எதிர் பார்க்கவில்லை. யார் அப்படிப்பட்ட வார்த்தையைச் சொல்லியிருந்தாலும், 'வாடா, போடா' என்ற வார்த்தையை சொல்லியிருந்தாலும், அதற்காக நான் அவர்கள் சார்பிலே மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன். அல்லது இன்னார் என்று சொன்னால், திரு. குமரி அனந்தன் அவர்கள் சுட்டிக் காட்டுவார்களேயானால், அவரை இங்கே எழுந்து மன்னிப்புக் கேட்டுக்கொள்ளச் சொல்ல நான் தயாராக இருக்கிறேன். அவர்களும் இலக்கியத்தைப் பற்றிச் சொன்னார்கள். இலக்கியம் அவருக்கும் பிடிக்கும் என்பதால் சொல்கிறேன். 'தமிழன் என்று சொல்லடா, தலை நிமிர்ந்து நில்லடா' என்று அங்கே 'டா' போடுகிறோம். அது இலக்கியம். அதுபோல' 'கொலை வாளினை எடடா, மிகக் கொடியோர் செயல் அறவே என்று அங்கே 'டா' போடுகிறோம். அது இலக்கியம். ஆனால் உரையாற்றும்போது, கோபத்தில், ஆத்திரத்தில், ஒருவரை ஒருவர் தாக்கிப் பேசுகிற நேரத்தில் 'வாடா, போடா' என்று சொல்வதெல்லாம் பாராளுமன்ற முறை அல்ல, அரசியல் பண்பாடு அல்ல, இன்னும் சொல்லப் போனால், அரசியலை எல்லாம் விட்டுவிட்டுப் பார்த்தால்கூட, தமிழ்ப் பண்பாடல்ல என்பதை நானும் உணர்த்துகிறேன். அதற்காக நான் மெத்தவும் வருந்துகிறேன். யாரோ அப்படிச் சொன்னார்கள் என்று சொன்னார்கள். யார் என்று குறிப்பிட்டு நண்பர் திரு. குமரி அனந்தன் அவர்கள் சொல்வார்களேயானால் அவரை இந்த அவையில் எழுந்து மன்னிப்புக் கேட்டுக்கொள்ளச் சொல்ல நான் தயாராக இருக்கிறேன்.

திரு. குமரி அனந்தன் : பாராளுமன்ற நடவடிக்கைகள் செம்மையாக நடைபெற வேண்டும் என்பதில் இந்திய தேசிய காங்கிரஸ் மிகுந்த அக்கறை கொண்டிருக்கிறது. ''கொலை வாளினை எடடா, மிகக் கொடியோர் செயல் அறவே'' என்று சொல்லுகின்ற அருமையான சொற்றொடரை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆண்டவனைப் பற்றிக்கூடச் சொல்லும்போது, கோபத்தில் 'என்னடா ஆண்டவா, ஏன் என்னை இத்தனை துயரத்திற்கு ஆளாக்கி விட்டாய்' என்று ஒருமையில் பேசுவதும் உண்டு. ஆனால் இந்தப் பொருள்களில் இங்கே பேச்சு நடைபெறவில்லை.

அதனாலேதான் இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லும்போது குறிப்பிட்டுப் பெயரை சொல்லச் சொன்னார்கள். ஆனால் குறிப்பிட்டு நான் பலரைச் சொல்ல வேண்டி வரும். ஆனாலும் ஒன்றே ஒன்றை மனதிலே குறித்து வைத்துக்கொண்டால் போதும். வளர்கிற பிள்ளைகள் இருக்கின்றார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்வதை மனதில் வைத்துக் கொண்டும், என்னைப் போன்றவர்கள் வேதனையோடு சொல்வதை மனதிலே வைத்துக்கொண்டும் இனிமேல் இப்படிப்பட்ட சொற்றொடர்களை பயன்படுத்தாமல் இருந்தால் அதுவே போதும் என்பது இந்திய தேசிய காங்கிரஸ் அவர்களுக்கு சொல்லுகின்ற நல்ல நன்றியாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மதிப்புமிக்க உறுப்பினர் பெருமக்களே, உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்கள் எழுப்பிய இந்த வேதனையான வினாவும், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தந்த ஆறுதலான விடையும் மனதிற்கு மகிழ்ச்சியை அளிக்கின்றன. எந்தக் காரணம் கொண்டும் இந்த அவையில் ஒரு கருத்துக்கு இன்னொரு கருத்து என்று வளருமானால்கூட தவறான சொற்களை, அவதூறான சொற்களை, பண்பாட்டுக்கும் நாகரீகத்திற்கும் குறைவான சொற்களைப் பயன்படுத்துவதை ஒவ்வோர் உறுப்பினரும் கட்டாயம் கைவிட்டே ஆக வேண்டும். மீண்டும் அதுபோன்ற தொடர்களை அவர்கள் பயன்படுத்துவார்களானால், சுட்டப்படுவார்களானால் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே சொன்னதைப் போல, இந்த அவையிலேயே அவர்கள் மன்னிப்பும் வருத்தமும் தெரிவிக்க வேண்டிய சூழ்நிலை வரும் என்பதையும் மனதில் கொண்டு அனைவரும் மிகுந்த பண்பாட்டுடன் நடந்து கொண்டு, நம்முடைய எதிர்கால சந்ததியினர்களுக்கு விட்டுச் செல்வது நல்ல மரபே தவிர இதுபோன்ற தவறான உதாரணங்களாக இருக்கக்கூடாது என்பதை மனதில்கொண்டு இந்தப் பிரச்சினையை இத்தோடு முடிவுக்குக் கொண்டுவரலாம் என்று தெரிவித்து அனைவருடைய ஒத்துழைப்பையும் நாடி என்னுடைய அடுத்த அலுவலுக்குப் போகிறேன்.

7. அறிவிப்பு.

1989-90ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளை மொழிவது குறித்து ஆளுநரின் செய்தி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1989-90 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளை முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது:

"In pursuance of Article 203, Clause (3), of the Constitution of India, I, P. C. Alexander, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the Demands for Grants for the year 1989-90."

அதனாலேதான் இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லும்போது குறிப்பிட்டுப் பெயரை சொல்லச் சொன்னார்கள். ஆனால் குறிப்பிட்டு நான் பலரைச் சொல்ல வேண்டி வரும். ஆனாலும் ஒன்றே ஒன்றை மனதிலே குறித்து வைத்துக்கொண்டால் போதும். வளர்கிற பிள்ளைகள் இருக்கின்றார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்வதை மனதில் வைத்துக் கொண்டும், என்னைப் போன்றவர்கள் வேதனையோடு சொல்வதை மனதிலே வைத்துக்கொண்டும் இனிமேல் இப்படிப்பட்ட சொற்றொடர்களை பயன்படுத்தாமல் இருந்தால் அதுவே போதும் என்பது இந்திய தேசிய காங்கிரஸ் அவர்களுக்கு சொல்லுகின்ற நல்ல நன்றியாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மதிப்புமிக்க உறுப்பினர் பெருமக்களே, உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்கள் எழுப்பிய இந்த வேதனையான வினாவும், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தந்த ஆறுதலான விடையும் மனதிற்கு மகிழ்ச்சியை அளிக்கின்றன. எந்தக் காரணம் கொண்டும் இந்த அவையில் ஒரு கருத்துக்கு இன்னொரு கருத்து என்று வளருமானால்கூட தவறான சொற்களை, அவதூறான சொற்களை, பண்பாட்டுக்கும் நாகரீகத்திற்கும் குறைவான சொற்களைப் பயன்படுத்துவதை ஒவ்வோர் உறுப்பினரும் கட்டாயம் கைவிட்டே ஆக வேண்டும். மீண்டும் அதுபோன்ற தொடர்களை அவர்கள் பயன்படுத்துவார்களானால், சுட்டப்படுவார்களானால் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே சொன்னதைப் போல, இந்த அவையிலேயே அவர்கள் மன்னிப்பும் வருத்தமும் தெரிவிக்க வேண்டிய சூழ்நிலை வரும் என்பதையும் மனதில் கொண்டு அனைவரும் மிகுந்த பண்பாட்டுடன் நடந்து கொண்டு, நம்முடைய எதிர்கால சந்ததியினர்களுக்கு விட்டுச் செல்வது நல்ல மரபே தவிர இதுபோன்ற தவறான உதாரணங்களாக இருக்கக்கூடாது என்பதை மனதில்கொண்டு இந்தப் பிரச்சினையை இத்தோடு முடிவுக்குக் கொண்டுவரலாம் என்று தெரிவித்து அனைவருடைய ஒத்துழைப்பையும் நாடி என்னுடைய அடுத்த அலுவலுக்குப் போகிறேன்.

7. அறிவிப்பு.

1989–90ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளை மொழிவது குறித்து ஆளுநரின் செய்தி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1989–90 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளை முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது:

"In pursuance of Article 203, Clause (3), of the Constitution of India, I, P. C. Alexander, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the Demands for Grants for the year 1989-90."

(அ) கோரிக்கை எண் 20—வேளாண்மை.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக்கோரிக்கை எண் 20—வேளாண்மை என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,65,59,43,000க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பயிர் இன்சூரன்ஸ் திட்டம் அனைத்து விவசாயிகளும் பயனடையும் முறையில் அமைக்கப்பட வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 20—வேளாண்மை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,65,59,43,000இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேதாரண்யம் தொகுதியில் பணப்பயிராக விளைந்து, அண்டை மாநிலத்தில் மாபெரும் வியாபாரச் சந்தைகளிலும் நுழைந்துள்ள பணப் பயிரான சவுக்கு வளர்ச்சி மீது வேளாண்மை ஆராய்ச்சிகள் நடத்தவேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:—

''மானியக் கோரிக்கை எண் 20—வேளாண்மை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,65,59,43,000இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

THIRU PON. VIJAYARAGAVAN : Mr. Speaker, Sir, I move that—"To discuss the need to distribute quality pesticides to the farmers by the Agriculture Department" the sum of Rs. 1,65,59,43,000 under Demand No. 20—Agriculture be reduced by Rs. 100."

திரு. ஜி. பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு மானியத்துடன் வழங்கும் இடுபொருட்கள் வழங்கும்போது காலாவதியான விதை, பூச்சி மருந்துகள் வழங்குவதை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதன் அவசியம் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:—

"மானியக் கோரிக்கை எண் 20—வேளாண்மை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,65,59,43,000இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

(ஆ) கோரிக்கை எண் 50—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 50—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 2.26,18,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

(முற்பகல் 11-10)

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வேளாண்மைப் பணி மையங்களில் விவசாயக் கருவிகளை ஏழை விவசாயிகளுக்கு வாடகைக்கு வழங்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:—

"மானியக் கோரிக்கை எண் 50—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,26,18,000இல் ரூ. 100 குறைக்கவேண்டும்."

திரு. ரவி அருணன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாவட்டங்களில் பல பகுதிகளில் கட்டப்பட்டுள்ள வேளாண்மை கிடங்கிகள் பயனில்லாமல் இருப்பதை நீக்க வேண்டியது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :—

"மானியக் கோரிக்கை எண் 50—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,26,18,000இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.

திரு. பொன். விஜயராகவன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :—

"மானியக் கோரிக்கை எண் 50—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,26,18,000இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.',

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன. மாண்புமிகு அமைச்சரவர்கள் ஏதாவது முன்னுரையாகக் கூற வேண்டுமென்றால் கூறலாம்.

1989 ஏப்ரல் 4]

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : பேரவை தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை மற்றும் வேளாண்மை குறித்த மூலதனச் செலவு ஆகியவற்றைப் பொறுத்தவரையில் அரசின் கொள்கை விளக்கக் குறிப்புகளும், செயல்வினை முறைத்திட்டம் பற்றிய குறிப்புகளும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு முன்னமேயே அனுப்பப்பட்டிருக்கிறது. காலமின்மையின் காரணத்தால் அவற்றை நான் பேரவையில் படித்ததாக* ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். வேளாண்மை அபிவிருத்திப் பெருக்கம் மற்றும் வேளாண்மை ஆகியவை குறித்து மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்துக்களைக் கேட்டதற்குப் பிறகு என்னுடைய பதிலுரையில் விளக்கங்கள் அளிக்கக் காத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இன்று பேச இருப்பவர்கள் ஒவ்வொருவரும் சரியாக 10 மணித் துளிகள் எடுத்துக்கொண்டு, பேச வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நிறைய உறுப்பினர்கள் தங்களுக்குப் பேசுவதற்கான வாய்ப்புகள் வரவில்லை என்றும், ஒருசிலரே தங்களுடைய நேரத்தை அதிகமாக எடுத்துக்கொள்கிறார்கள் என்றும் வருத்தப்படுகிறார்கள். எனவே 'equal participation' என்பதை மனத்திலே வைத்துக்கொண்டு, ஒவ்வொருவருக்கும் 10 மணித்துளிகள், மிஞ்சிப்போனால் 2 மணித்துளிகள் தரப்படும். அதற்குள் முடிக்கவில்லை என்றால், அடுத்தவர்களுக்கு வாய்ப்பு தானாகச் சென்றுவிடும் என்பதை மனதிலே கொண்டு, பேசவும், முதலிலே வேளாண்மைத் துறை குறித்த மானியக் கோரிக்கையில் உரையாற்றுகிறவர் திருமதி ரமணி நல்லத்தம்பி அவர்கள்.

*திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடப்பு ஆண்டு நிதிநிலை அறிக்கையின்மீது பேசுவதற்கு, அதுவும் குறிப்பாக வேளாண்மை குறித்த மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, என்னுடைய பேச்சைத் துவக்குகிறேன். இந்த ஆண்டு விவசாயத் துறைக்கு 25 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எந்த ஒரு திட்டமாக இருந்தாலும் அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு முன்னதாக சில அடிப்படைத் தன்மைகளை ஆய்வு செய்ய வேண்டிய நிலை இருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

நிதிநிலை அறிக்கையில், ''வேளாண்மைப் பணிகள் மாநிலம் முழுவதும் பெருகுவதோடு, வேளாண்மை உற்பத்தியும், ஆதாயமும் மேலும் உயர்வதற்கு உதவும்'' என்று சொல்லப்பட்டிருக்கிறது. இநத விவசாயிகள் நிலையை முதலாவதாக ஆராய்ந்து பார்த்து அரசின் மானியங்களையும், அரசின் திட்டங்களையும் அவர்கள் பயன்படுத்தி, அவர்கள் உற்பத்திக்கு உதவும் வகையில் இருக்கின்றதா என்று எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம்.

* குறிப்பு...இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.

இன்றைக்கு விவசாயிகளின் நிலையை எடுத்துக் கொண்டோமானால், வறட்சியால் அதிகமாக பாதிக்கப்பட்ட காரணத்தால் மழைப் பொழிவு இல்லாமல் போய்விட்ட காரணத்தால், நிலத்தடி நீர் மிகவும் கீழே சென்று விட்டதால், கிணற்றை ஆழப்படுத்திப் பார்த்தாலும் நீரைப் பார்க்க முடியாத காரணத்தால், விவசாயிகள் விவசாயம் செய்ய முடியாமல் இருக்கிறார்கள். விவசாயம் பல்வேறு நிலைகளில் ஒடுங்கியிருக்கிறதென்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். முதலாவதாக, மண் வளம் இருக்கிறதா என்று பார்க்கவேண்டும். அதற்காக சில இலாக்காக்கள் இயங்கிக், கொண்டிருக்கின்றன. விவசாயி, விவசாயம் செய்யும் தகுதியிலே சூழ்நிலையிலே, சுகாதாரமான வலுவான விவசாயிகளாக இருக்கிறானா என்றால் இல்லை. விவசாயி கடனில் இருக்கிறான். வறுமையில் இருக்கிறான். நீர் இல்லாத நிலையில் இருக்கிறான் சில பொருள்களை விற்று அதை, மூலதனமாகக் கொண்டு, கடன் பெறுவதற்கான பேப்பர்களை மூவ் பண்ணுகிறான். ஆனால், அரசின் மானியம் எல்லாம் இடைத் தரகர்களுக்கும், அரசு ஊழியர்களுக்கும் போய்விடுகிறது. விவசாயிகள் அதைப் பெறுவதில்லை அதை ஆரம்பிக்கும்போதே, பொருளை விற்றதால் ஏற்பட்ட கடன் அவர்களுக்கு இருக்கும். இருந்தாலும் மானியம் அவர்களுக்குக் கிடைப்பதில்லை. வங்கியில் அந்த மானியத்தை நிறுத்தி வைத்துக் கொடுக்கிறார்கள். இதெல்லாம் ரிக்கார்டட் எவிடன்ஸ். அடுத்து, மின் இணைப்பு துண்டிக்கப்படுகிறதென்றால் மற்ற தொழில்களில் 'Feture profit shop' ஆகிறது, Investment எந்தவிதமான நஷ்டத்திற்கும் உள்ளாவதில்லை. விவசாயத்தைப் பொறுத்தவரையில், மின் இணைப்பு துண்டிக்கப்படுகிறதென்றால், மின் கட்டணம் கட்டவில்லை என்பதற்காகவோ அல்லது வேறு காரணங்களுக்காகவோ துண்டிக்கப்படுகிறதென்றால், அவனுடைய நிலத்திலே, விவசாயத்திலே, முன்னாலே எதை எதையெல்லாம் முதலீடு செய்திருந்தானோ— பணம், உழைப்பு, குடும்பத்தாருடைய உழைப்பு, நேரம்— எல்லாமே கருகிவிடுகிறது. அவனுடைய Total loss க்குகாரணம்மின் துண்டிப்பு என்ற நிலை இருந்து வருகிறது. அப்படியே தண்ணீர் கிடைத்தாலும், மழை பெய்தாலும் மின் இணைப்பு கிடைக்கவில்லை என்றால், விவசாயி சுதந்திரமாகச் செயல்பட முடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, விவசாயிகளின் நிலை 'கை கட்டப்பட்ட' நிலையாக இருக்கிறது. சுதந்திரம் பறிபோன நிலையாக இருக்கிறது. கடன் சுமையால் அழுத்தப்பட்ட நிலையாக இருக்கிறது. அரசாங்கத்திடமிருந்து கடனையெல்லாம் சுதந்திரமாகப் பெறமுடியாத நிலை இருக்கிறது.

அடுத்து விதைகள், பொறுக்கு விதைகள், உரங்கள் மற்றும் பல டெக்னிகல் இன்ஸ்ரூமெண்ட்ஸ்--விதைப்பான்கள் நஞ்சை இல்லாத இடத்தில் களைக் கொல்லிகள்—ஆகியவற்றை நிறைய ஸ்டாக் வைத்திருக்கிறார்கள். அதிலே ஊழல் நடக்கிறது. அவைகள் தேவைப்படுகிற இடத்தில் கிடைப்பதில்லை. தேவையில்லாத இடத்தில் கிடைக்கின்றன. விவசாயி விவசாயத்தை நல்லபடியாகச் செய்ய வேண்டுமென்று திட்டம் தீட்டினால், அப்படிப்பட்ட திட்டம் வெற்றி பெற வேண்டு

1989 ஏப்ரல் 4] [திருமதி ரமணி நல்லதம்பி]

மானால் முதலில் விவசாயிகள் வாழ்க்கையில் சுதந்திரம் தேவை—பொருளாதார வசதி தேவை. அப்படிப் பார்க்கும்போது இப்போது வழங்கப்படும் மானியங்களையும், கடன்களையும் மாற்றி—இதை நான் மாண்புமிகு விவசாய அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்—இந்த மானியங்களையெல்லாம் மின்சார இலாகாவுக்கே கொடுத்து விவசாயிக்கு இலவசமாக மின்சாரம் கொடுக்கிற சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்போதுதான் உண்மையிலேயே விவசாயி பயன் பெற முடியும். அப்போதுதான் டைரெக்டாக விவசாயிக்கு பெனிபிட் கிடைக்கும். நேரடியாகப் பயன் கிடைக்கும். அதோடு top priority should be given to agricultural purposes என்ற நிலையை உருவாக்கவேண்டும். மின் இணைப்பை, எந்த விவசாயி எப்போது கேட்டாலும் கொடுக்கவேண்டும். காரணம் அவன் உணவை உற்பத்தி செய்கிற உன்னதப் பணியில் ஈடுபட்டிருக்கிறான். ஆனாலும், உணவு உற்பத்தியில் ஈடுபட்டுள்ள இந்த 70 சதவீத விவசாயி எல்லோராலும் அமுக்கப்பட்டு, அடக்கப்பட்டு, ஒடுக்கப்படுகிற சூழ்நிலையில் இருக்கிறான். எனவேதான் சொல்லுகிறேன், மானிய கடன்களைப் பல்வேறு துறைகள் மூலமாகக் கொடுப்பதன் மூலமாக அப்படிப்பட்ட திட்டங்களின் நன்மை விவசாயிகளுக்குக் கிடைக்கவில்லை. இந்த நிலைமை நீடிப்பது சரியல்ல. தீவிர அரிசித் திட்டம் என்று அறிக்கையில் 36-வது பாராவில் போட்டிருக்கிறீர்கள். அதைச் செயல்படுத்த முடியாது. இந்த நிலையை நீடிக்கவிட்டால் இந்த திட்டமே ஒரு டோட்டல் பெயில்யூர் தான் ஆகும். விவசாயியும் விவசாயத்தைத் துறந்தும் மறந்தும் வாழ்கிற நிலைமை ஏற்படும். மின் வாரியம் எப்போது மின்சாரத்தைத் துண்டிக்கும். எப்போது அவர்கள் என்ன செய்வார்கள் என்று சொல்ல முடியாது என்ற நிலை தற்போது இருந்து வருகிறது.

எங்கள் பகுதி நிறைய வறட்சியால் பாதிக்கப்பட்டிருப்பதால்—மின்இலாகாவால் விவசாயிகள்பழிவாங்கப்படும் சூழ்நிலை இருப்பதால்—ஒரு மின் இணைப்பு வேண்டுமென்றால் அதற்குப் பல ஆண்டுகள் காத்திருக்க வேண்டிய சூழ்நிலை இருப்பதால் தற்போது விவசாயிகள் நிச்சயமாகச் சந்தோஷமாக, சுகாதாரமாக சுதந்திரமாக விவசாயத்தை மேற்கொள்ள முடியாத நிலை இருக்கிறது.

தற்போது 25 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறீர்கள். இந்த 25 கோடி ரூபாயும் விரையமாக்கப்படாமல், உண்மையாகவே நாட்டின் உணவு உற்பத்திக்கு, தானிய உற்பத்திக்குப் பயன்படும் வகையில் செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : எந்தத் துறையில் ரூ. 25 கோடி என்று சொன்னால் நல்லது. எல்லாவற்றையும் சேர்த்துப் பேசாமல், குறிப்பாகப் பேச வேண்டும். சிறப்பு அரிசி உற்பத்தி திட்டம்பற்றி ஏதோ பேச ஆரம்பித்து விட்டுவிட்டீர்கள். குறிப்பாகச் சொல்லி, அதற்கு ஆதாரம் இருந்தால் தலைவர் மூலமாக எனக்கு அளிக்கலாம்.

திருமதி ரமணி நல்லதம்பி : நான் சிறப்பு அரிசித் திட்டத்திற்கு வரவேயில்லை. எடுத்துக்காட்டாகக் கூறினேன். ஏனென்றால் உணவு உற்பத்தியில் தற்போது பற்றாக்குறை இருக்கிறது. உணவு உற்பத்தி நிச்சயமாக அதிகரிக்கப்பட்டாக வேண்டும். இது வேறு பீல்டு போல் அல்ல. பிளாஸ்டிக் இண்டஸ்ட்ரி மாதிரி இதைச் செய்துவிட முடியாது. உணவு உற்பத்தியை வயலில்தான் செய்தாக வேண்டும். அதை விவசாயிதான் செய்தாக வேண்டும். சேற்றில் அவன் கால் வைத்தால்தான் நாட்டு மக்கள் சோற்றில் கை வைக்க முடியும் என்ற நிலை இருக்கிறது. 70 சதவீத மக்களாக விவசாயிகள் இருப்பதனால் நான் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அனைத்துத் திட்டங்களையும் ஒருங்கிணைத்து, முதலில் விவசாயிகளுக்கு சுதந்திரம் தரப்பட வேண்டும். முதலில் மின் இலாகாவிலிருந்து விவசாயிக்கு சுதந்திரம் வேண்டும். அதுதான் Fundamental requirements for the Agriculturist விவசாயி எப்போது மின்சாரம் கேட்டாலும் கொடுக்க வேண்டிய சூழ்நிலை இருக்க வேண்டும். எப்போது வேண்டுமானாலும் மின்சாரத்தைத் துண்டிப்பார்கள் என்ற அபாயகரமான நிலையிலிருந்து அவனுக்கு பரிபூரண விடுதலை வேண்டும். அதைப் போலவே மின் பாக்கி, அபராத வட்டி இவற்றை ரத்து செய்வதால் மட்டும் விவசாயிக்கு சுதந்திரம் கிடைக்காது. அப்படியே தொடர்ந்தால் விவசாயி விவசாயத்தைத் துறந்துவிட்டு வேறு ஏதாவது வேலைக்குப் போய்ப் பிழைக்கலாம் என்ற சூழ்நிலை வந்துவிடும். அதன் காரணமாக உணவு உற்பத்தி வெகுவாகப் பாதிக்கப்படும் என்பதையெல்லாம் அரசு நன்கு ஆலோசனை செய்து பார்த்து, மானியங்களையெல்லாம் மின் இலாகாவுக்கே கொடுத்து, அனைத்து விவசாயிகளுக்கும் மின்சாரத்தை இலவசமாக எப்போது வேண்டுமானாலும் வழங்குகிற நிலையை உருவாக்கினால்தான் விவசாயி சுதந்திர உணர்வோடு செயல்படுவான். அதுமட்டுமல்ல, நீண்ட காலத் தவணையில் கடன் வழங்க முன்வருவீர்களானால் விவசாயி துணிவோடு விவசாயத்தில் ஈடுபட முன்வருவான். அப்போதுதான் அவர்கள் நாட்டு உணவு உற்பத்தியில் சாதனை படைக்க முடியும் என்பதை இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அத்தகைய சூழ்நிலையை உருவாக்க நீங்கள் முன்வர வேண்டும் என்றுகேட்டுக் கொள்கிறேன்.

ஒரு பள்ளிக்கூடம் தொடங்க வேண்டுமென்றால்கூட அதற்குச் சில ரிக்கொயர்மென்ட்ஸ் தேவை. கட்டிடம் இருக்க வேண்டும் — சுகாதார நிலை இருக்கவேண்டும்—சானிடரி கண்டிஷன் சரியாக இருக்கவேண்டும்—கழிப்பிடம் இருக்க வேண்டும்—குடிநீர் இருக்க வேண்டும்—என்று இப்படியெல்லாம் இருக்கிறதா என்று பார்க்கிறோம். ஒரு மாணவனைச் சேர்க்க வேண்டுமென்றால் அதற்கு இத்தனை வயது ஆகி இருக்க வேண்டும் என்றெல்லாம் பார்க்கிறோம். ஆனால் விவசாயத்தை மேம்படுத்த, விவசாயி எப்படி இருக்க வேண்டும் என்று பார்ப்பதில்லை. அவன் கடன் சுமையில் இல்லாமல், மற்றவர்களால் அடக்கப்படுகிற நிலையில் இல்லாமல், சுதந்திர

1989 ஏப்ரல் 4] [திருமதி ரமணி நல்லதம்பி]

ஜீவியாக, நிர்வாகத்தில் இருப்பவர்கள் போய் அவனைத் தொந்தரவு செய்யக்கூடிய சூழ்நிலை இல்லாமல் இருக்கவேண்டும். தற்போது விவசாயி தன்னிடம் இருப்பதையெல்லாம் விற்று அரசாங்கத்திலே கடன் வாங்கி விவசாயத்தில் ஈடுபடுகிறான்.

(முற்பகல் 11–20)

கடைசியில் திடீரென்று ஒரு நாளைக்கு ஃபியூஸை பிடுங்கி விட்டேன் என்கிறார்கள். பயிரும் கருகிப் போய்விடுகிறது. ஆகவே அப்படி ஆகாமல் இருக்க இந்த மின் இலாகா அவர்களுடைய வாழ்விலே புகுந்து விளையாடும் வாய்ப்பினைத் தவிர்த்து, அவர்களுக்கு பூரண சுதந்திரம் தரும் வகையிலே இந்த மின் இலாகாவுக்கு இந்த மானியத் தொகையினை நீங்கள் அளித்து, இலவச மின்சாரமாக்கி, விவசாயத்தை ஊக்குவிக்க வேண்டும். ஏனென்றால் அவர்கள்தான் 70 சதவீதம் என்று இந்த மானிய அறிக்கையிலே மாண்புமிகு முதல்வரவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். இந்த நாட்டின் முதுகெலும்பு என்று சொல்லப்படுகின்ற வேளாண்மை வர்க்கத்தைச் சார்ந்தவர்களுடைய முதுகெலும்பை வலுப்படுத்த வேண்டுமென்று கேட்டு வலியுறுத்தி அமைகிறேன்.

*திரு. ஆர். பஞ்சாட்சரம் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, நான் பேசுவதற்கு தகுதியுடையவனாக என்னைத் தேர்ந்தெடுத்த முதல்வர் அவர்களுக்கும், 'மக்களின் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு' முதல்வர் அவர்கள் மீதுள்ள பற்றுதலாலும், நம்பிக்கையாலும், அவர் வழிவந்த என்னைத் தேர்ந்தெடுத்த மேல்மலையனூர் தொகுதி மக்களுக்கும், என்னை வளர்த்து ஆளாக்கிய பாசத்திற்குரிய அண்ணன் செஞ்சியார் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்து, இந்த நாட்டு மக்களுக்குப் பணி செய்து கிடப்பதே என்னுடைய பிறவிப் பயன் என்று கருதி, இரவு பகல் பாராமல் சிந்தித்து ஏழை எளிய மக்களின் வளர்ச்சிக்கான நல்ல பல திட்டங்களைத் தீட்டி, சட்ட வடிவமாக்கி செயல்படுத்திக் கொண்டிருக்கிற முதல்வரவர்கள், என்னுடைய தொகுதியிலேயும் என்னுடைய தொகுதி மக்கள் பயன் பெறும் வகையில் திட்டங்களை செயல்படுத்துவார்கள் என்ற நம்பிக்கையோடு எனது உரையை ஆரம்பிக்கிறேன்.

அரிசிப் பற்றாக்குறைக்கு மைய அரசை அணுக வேண்டியுள்ள நிலைமையைப் போக்க தமிழக அரசு சிறு விவசாயி, பெரு விவசாயி என்று பாராமல் எல்லா விவசாயிகளுக்கும் சலுகை அளித்து உணவு உற்பத்தியைப் பெருக்கினாலும், அது தமிழக அரசுக்கே வந்துசேரும். எனவே தமிழக அரசு விவசாயத்திற்கு அதிகப்படியான நிதியினை ஒதுக்கீடு செய்து, தன்னிறைவுத் திட்டம் அடைய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் கடும் வறட்சி காரணமாக கிணறுகளில் தண்ணீர் இல்லாததால், கிணறு ஆழப்படுத்தக் கடன் வழங்க ஏற்பாடு செய்து தரவேண்டும். கிணறுகள் வெட்ட மானியம் அளிக்கப்படுகிறது. அதிலே கிணறு வெட்ட கடன் வழங்கும் போது கிணறுகளுக்கிடையே இடைவெளி 500 அடிக்குக் குறையாமல் இருந்தால்தான் கிணறு வெட்ட அதிகாரம் இருக்கிறது. அந்த இடைவெளி 500 அடி என்பது அறவே நீக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகள் புதிதாக கிணறு வெட்டுவதற்கு முன்னதாக நிலத்தில் எத்தனை அடி ஆழத்தில் தண்ணீர் உள்ளது என்பதை அறிந்துகொள்ள நிபுணர் ஒருவரை யூனியனுக்கு ஒரு ஆள் வீதம் நியமனம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு வழங்கும் மானியத்தில், சிறு விவசாயி, பெரு விவசாயி என்று பாராமல் பாதி விலையில் உரம், விதைகள், பூச்சிமருந்து, விவசாயக் கருவிகள் அனைத்தும் கிடைக்க வழி வகை செய்ய வேண்டும். மூன்று பயிர்கள் இடுவதற்கு உரம் பாதி விலையில் கொடுக்க முடியவில்லை என்றாலும் சம்பாவிலாவது விதை உரம் பாதி மான்யத்தில் கிடைக்க அரசு வழிவகை செய்ய வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். சத்துணவுத் திட்டத்துக்கு எவ்வளவு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறதோ அந்த அடிப்படையில் விவசாயத்துக்கும் பாதி விலையில் உரம் அளிக்க முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு விவசாயி வயல்வெளியில் பாம்பு கடித்து இறந்தாலோ, மின்சாரம் தாக்கி இறந்தாலோ, கிணற்றில் விழுந்து இறந்தாலோ அல்லது விவசாய வேலை செய்யும்போது இறந்தாலோ அவருடைய குடும்பத்திற்கு குடும்ப நல நிதி அளிக்க வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன். இப்போது கொண்டு வந்திருக்கிற திட்டத்தில் எல்லாத் தொழிலாளர்களுக்கும் குடும்பநல நிதி அளிக்கப்பட்டுள்ளது. ஆனால் விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு எந்தவித நிதியும் அளிக்கப்படவில்லை என்பதை இங்கே தெரிவித்து, அவர்களுக்கும் அது அளிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு மாணவன் அரசாங்க உதவித் தொகை பெற வேண்டுமானால், சாதி சான்றிதழ் பெறவேண்டியுள்ளது. சாதிச் சான்றிதழ் பெறுவதற்கு வட்டாட்சியர் அலுவலகத்தில் மிகவும் தாமதம் ஏற்படுகின்றது. இந்த சாதிச் சான்று தேவையில்லாத ஒன்று. காரணம், படித்த சர்ட்டிபிகேட்டிலேயே, எஸ்.எஸ்.எல்.சி. புத்தகத்தில் முதல் பக்கத்தில் சாதியின் பெயர் இருக்கிறது. மத மாற்றம் ஏற்பட்டால்கூட சாதி மாறுவது கிடையாது. எனவே சாதிச் சான்றிதழ் வழங்கும் திட்டம் கைவிடப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

புறம்போக்கு நிலத்தில் வீடு கட்டியிருக்கிற ஏழை விவசாயி ஒரு மின்விளக்கிற்கு மின் இணைப்பு கோரினால் அதற்கு வட்டாட்சியரின் சான்று தேவை என்று இப்போது நடைமுறையில் இருக்கிறது. அது தேவையில்லை என்பதைத் தெரிவித்து, அவர்களுடைய வீட்டு வரி ரசீது இருந்தால் போதும். அதையே வைத்து மின்சாரம் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏழை விவசாயிகளுக்கு, புறம்போக்கு நிலத்தில் அவர்கள் பயிர் செய்துகொண்டுவரும் நிலங்களை பட்டா செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மற்றும் ஏரிப் புறம் போக்கு (நீர் பிடிக்காத இடம்), குட்டை புறம்போக்கு, குளம் புறம்போக்கு, கல்லாங்குத்து புறம்போக்கு ஆகிய நிலங்களை வீட்டுமனைப் பட்டா போட்டுக் கொடுக்க சட்டம் இயற்றப்பட வேண்டும்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கொண்டு வரப்பட்ட நந்தன் கால்வாய்த் திட்டம் முழுமையாக நடைபெறுவதற்குச் சாத்தனூர் அணையிலிருந்து சமுத்திரம் கிராமத்தின் வழியாக சமுத்திரம் ஏரியில் கொண்டு வந்து நந்தன் கால்வாய்த் திட்டத்தை முழுமையாக முடிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அண்மையில் செஞ்சியில் நமது முதல்வரவர்கள் வந்தபொழுது நாங்கள் ஆட்சிக்கு வந்தால் நந்தன் கால்வாய்த் திட்டத்தை முழுமையாகச் செய்து முடிப்போம் என்று சொல்லியிருக்கின்றார் என்பதையும் நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

அதோடு, கலசப்பாக்கம் ஆற்றிலிருந்து அணையைக் கட்டி அன்னமங்கலம் வரையில் இந்த ஏரிகளுக்குத் தண்ணீரைவிட ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி ஏற்பாடு செய்தால் வருகின்ற வழிகளில் கோவூர், சீட்டம்பட்டு, துருவம், துர்க்கை நம்மியந்தல், ஆர்ப்பாக்கம், பேட்டை, மன்சூராபாத், எதப்பட்டு, மேல்வயலாமூர், நாரணமங்கலம், தாழங்குளம், கப்ளாம்பாடி, மனியந்தப்பட்டு, நொச்சலூர், தாழனூர் ஏரி, தோப்பு, மலையனூர் ஏரி, வடக்கு ஏரி, அன்னமங்கலம் ஏரி இதுவரையில் விவசாயத்திற்கு நீர்த்தேக்கத்தை ஏற்படுத்தலாம் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு விவசாயி நிலத்தை மற்றொரு விவசாயி வாங்கும்போது, உடனே பட்டா மாற்றம் செய்யப்பட்டு விடுகிறது. ஆனால் அந்த நிலத்திலுள்ள பம்பு செட்டின் சர்வீசை மட்டும் உடனே பெயர் மாற்றம் செய்வதில்லை. பெயர் மாற்றம் செய்ய ஐந்து முதல் பத்தாண்டுக் காலம் ஆகின்றது. பட்டா மாற்றம் செய்யப்பட்ட, பத்திரத்தை வைத்துக்கொண்டு பம்பு செட்டுகளின் சர்வீசையும் உடனடியாகப் பெயர் மாற்றம் செய்ய அரசு உத்தரவு இட வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

மேல்மலையனூர் மிகவும் பின்தங்கிய பகுதி. விவசாயிகள் பழைய கிணறு வெட்ட யூனியன் மூலமாக மானியத்தில் கடன் வாங்க அரசு ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படி ஏற்கெனவே இருந்த அரசும் செய்து கொண்டிருந்தது. இப்பொழுதும் நம்முடைய அரசும் செய்து கொண்டுள்ளது, செய்ய போதிய நிதியை ஒதுக்கியுள்ளது. இருந்தாலும் அதற்கான ஒதுக்கப்பட்டிருக்கின்ற வங்கிகளில் கடன் கொடுப்பது கிடையாது. இந்த நிலையை எல்லா வங்கிகளிலும் நடந்து கொண்டிருக்கிறது. பொதுவாக என்னுடைய பகுதியில் அதிக மாகக் கடன் வாங்காதவர்களே இருக்கிறார்கள். காரணம், வங்கியிலே கடன் கொடுக்க மறுக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்து, அவர்களுக்கும் கொடுக்கநடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

விவசாயிகள் நிலம் வாங்கி பதிவு செய்ய பத்திரம் கிடைப்பதில்லை. கிடைக்குமிடத்தில் கூட ஒன்றுக்கு இரண்டு மடங்கு கொடுத்து வாங்க வேண்டிய நிலையிருக்கிறது. அதோடு நிலத்தின் மதிப்பீட்டைவிட அதிகமாகவே கணக்கிடப்படுவதால் பத்திரம் பதிவு செய்ய முடியாமல் போய் விடுகிறது. மதிப்பு எதுவாக இருந்தாலும் பத்திரம் பதிவு செய்ய வகை செய்யும்படி உத்தரவு பிறப்பிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

வேளாண்மையைப் பெருக்குவதற்கு, சிறு விவசாயிகள், பெரு விவசாயிகள் என்ற அடிப்படையை ரத்து செய்ய வேண்டும். விவசாயிகள் விற்பனைக் கூடத்தில் விளைபொருட்களை விற் பனை செய்யும்பொழுது உடனுக்குடன் பணம் வழங்க வேண்டும். தற்போது இரண்டு அல்லது மூன்று நாட்கள் கழித்து தான் பணம் பட்டுவாடா செய்யப்பட்டு வருகிறது. விற்பனைக் கூடத்திலே கூட்டுறவு வங்கியைத் தொடங்கி அதன் மூலமாக விவசாயிகளுக்குப் பணத்தைப் பட்டுவாடா செய்து, பின்பு வியாபாரிகளிடமிருந்து வட்டியுடன் வசூல் செய்துகொள்ளலாம்.

மார்க்கெட் கமிட்டிக்குச் சொந்தமான பல கோடி ரூபாய் தென்னார்க்காடு மாவட்ட கூட்டுறவு வங்கியில் டெபாசிட் வைக்கப்பட்டுள்ளது. அந்தப் பணத்தை மார்க்கெட் கமிட்டி யின் அன்றாடக் கொள்முதல் ஒருநாள் ஒன்றுக்கு சராசரி கணக்கெடுத்து, தினமும் ஒதுக்கப்பட்டு அதை விவசாயிகளுக்குத் தினம் தினம் கிடைக்க வழிவகை செய்ய வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

மின்சார வாரியத்தில் விவசாய பம்பு செட்டுகளுக்கு மின் துண்டிப்பு செய்யும்போது பணம் கட்டவில்லை என்றால் எந்த விதமான முன்னறிவிப்பும் இல்லாமல் மின் துண்டிப்பு செய்யப் படுகிறது. பிழைப்புக்காக நுகர்வோர் வெளியூர் சென்று இருந்தால் அவர்களுக்கு மின் துண்டிப்பு அறிவிப்பு தெரியாமல் போய்விடுகின்றது. அவ்வாறு துண்டிக்கப்பட்டு நான்கு மாதங் களில் பணம் செலுத்தவில்லை என்றால் நிரந்தரமாகத்

துண்டிப்பு செய்யப்படுகிறது. இதைத் தவிர்த்து மீண்டும் கழக ஆட்சியில் இருந்ததுபோல் ஓர் ஆண்டிற்கு மின் துண்டிப்பு செய்வதை நிறுத்தி வைக்க வேண்டுமென நான் கேட்டுக் கொள்கிறேன்.

விவசாய மின் இணைப்புகளில் சர்வீஸ்களுக்கு மட்டும் இட மாற்றம் செய்ய ஏற்படும் செலவினை மின்சார வாரியமே ஏற்றுக்கொள்ள வேண்டும். காரணம், இயற்கையின் காரண மாகவும், தண்ணீர்த் தட்டுப்பாட்டின் காரணமாகவும் இட மாற்றம் மிகவும் அவசியமாக ஏற்படுகிறது. எனவே, அப்படி ஏற்படுகின்ற செலவுகளை அரசாங்கமே ஏற்றுக்கொள்ள வேண்டு மென்பதை மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கூறிக்கொள்கிறேன்.

(முற்பகல் 11—30)

1984-இல் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 'ஆன் தி லைன்' திட்டப்படி விவசாய மின்னிணைப்பு போர்க் கால அடிப்படையில் கொடுக்கப்பட்டன. அதில் ஏற்பட்ட மின்சார நுகர்வோர்களின் குறைபாடுகளுக்காகப் பொறியாளர் கள் பழி வாங்கப்பட்டு வீட்டுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். எனவே வேளாண்மை பம்பு செட்டு சம்பந்தமான வழக்குகள் அனைத் தும் வாபஸ் பெறப்பட்டு, பணி நீக்கம் செய்யப்பட்ட பொறி யாளர்களை மீண்டும் பணியில் அமர்த்த வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். இதைக் கூறுவதற்குக் காரணம், ஏற் கெனவே எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக இன்று பணியிலே இருக்கின்ற பொறியாளர்கள் இப்பொழுது பயந்துபோய் இருக்கின் றார்கள். காரணம் ஒரு கிணற்றிற்கு சர்வீஸ் கொடுக்க ஒருவன் புறம் போக்கில் கிணறு உள்ளது என்று சொன்னால்கூட அதை வைத் துக்கொண்டு சர்வீஸ் கொடுக்க மறுக்கிறார்கள். 10, 12 ஆண்டு களாகக் காத்திருந்து, மின்சாரத்தைப் பெறுகிற வாய்ப்பைப் பெறுகிற அந்த 90 நாட்கள் நோட்டீஸ் கிடைக்கும்போது, அந்த விண்ணப்பதாரர் காலமாகி விடுகிறார். அவரின் வாரிசு சான்று வாங்குவதற்கு குறைந்தது ஒரு ஆண்டு, இரண்டு ஆண்டு கூட ஆகிறது. அப்படி ஆகும்போது அந்த கண்டிஷனை அதாவது 90 நாட்களுக்குள் சர்வீஸ் வாங்க வேண்டுமென்ற கண்டிஷனை மாற்றியமைக்க வேண்டும். அந்தக் காலவரையை நீட்டித்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கடந்த காலத் தில் கழக ஆட்சியில் இருந்ததைப் போல செலவழிக்கப்படுகிற மின்சாரத்திற்கு யூனிட் கணக்கில் பணம் செலுத்தும் திட்டத் தைக் கொண்டுவர வேண்டும். ஒரு குதிரை சக்திக்கு எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிக் காலத்தில் ரூபாய் 75 வீதம் வசூல் செய்யப் பட்டது. அதை நிறுத்திவிட்டு, செலவிடப்படுகிற ஒவ்வொரு யூனிட்டிற்கும் குறிப்பிட்ட தொகையை வசூல் செய்யவேண்டு மென்ற முறையைக் கொண்டுவர வேண்டுமென்றுக் கேட்டுக் கொள்கிறேன்.

குறித்த காலத்தில் மின் கட்டணம் செலுத்த முடியாமல் போனால் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டு, மீண்டும் பணம் கட்டும்போது அபராதத் தொகை 30 ரூபாய் கட்ட வேண்டியிருக்கிறது. திராவிடமுன்னேற்றக் கழக ஆட்சிக்காலத்தில் இந்தத் தொகை ஐந்து ரூபாய் என்ற அளவில் இருந்தது. ஆகவே, கழக ஆட்சியில் இருந்ததைப் போல அபராதத் தொகை ரூபாய் ஐந்தாகக் குறைக்கப்பட வேண்டும். 1988 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் கவர்னர் ஆட்சிக் காலத்தில் உயர்த்தப்பட்டது, தற்போது 1–3–1989-லிருந்து அமல்படுத்தப்பட்டு ரூபாய் 30 வீதம் வசூல் செய்யவேண்டுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதை உடனடியாக ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயத்திற்கு தற்போது அளிக்கப்படுகிற மின்சாரம் பற்றாக்குறையாக உள்ளது. பகலில் 6 மணி நேரம், இரவில் 8 மணி நேரம் மின்சாரம் தொடர்ந்து கிடைக்க வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதுபோன்று விவசாயிகளுடைய குறைகள் நிறைய இருக்கின்றன. எனக்கு அளிக்கப்பட்ட நேரம் முடிந்து விட்டதால் இத்துடன் என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.

2. தகவல் கோரல்—தொடர்ச்சி.

(ஏ) பேரவையில் பெண் போலீசாரைப் பணியில் அமர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து.

திரு. ஏ. அப்துல் சமத் : துணைத் தலைவர் அவர்களே, ஐந்து பெண் போலீசாரை இங்கே சபையிலே பணியில் அமர்த்தினால் நலமாக இருக்குமென கருதுகிறேன். காரணம், இன்றைய நிலையே நாளையும் ஏற்பட்டால், செல்வி ஜெயலலிதா அவர்கள் இந்தச் சபைக்கு வந்தால், ஒரு ஆண் போலீசை வைத்து வெளியேற்றினார்கள், கையைப் பிடித்து இழுத்தார்கள் என்றுகூட அவர்கள் பிரச்சாரம் செய்ய நேரிடலாம். எனவே, தயவுசெய்து ஐந்து பெண் போலீசாரை நியமிக்க வேண்டுமென்ற யோசனையைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவர்கள் சபைக்கு வருவதில்லையென்று தெரிவித்து விட்டார்கள். ஆகவே, பெண் காவலர்கள் தேவையில்லை.

*திரு. வி. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் வேளாண்மைத் துறையில் நேரிடையாக ஈடுபட்டிருக்கிற காரணத்தால், வேளாண்மைத் துறையில் கிடைத்திருக்கிற அனுபவங்களை வைத்து மானிய கோரிக்கைகளை இங்கே முன்மொழிந்து இருக்கிறார்கள். இந்த மானிய கோரிக்கையில் 13 தலைப்புகளில் 83 உட்பிரிவுத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. 31 புதிய செயல்பாடு திட்டங்கள் அறிவிக்கப்

குறித்த காலத்தில் மின் கட்டணம் செலுத்த முடியாமல் போனால் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டு, மீண்டும் பணம் கட்டும்போது அபராதத் தொகை 30 ரூபாய் கட்ட வேண்டியிருக்கிறது. திராவிடமுன்னேற்றக் கழக ஆட்சிக்காலத்தில் இந்தத் தொகை ஐந்து ரூபாய் என்ற அளவில் இருந்தது. ஆகவே, கழக ஆட்சியில் இருந்ததைப் போல அபராதத் தொகை ரூபாய் ஐந்தாகக் குறைக்கப்பட வேண்டும். 1988 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் கவர்னர் ஆட்சிக் காலத்தில் உயர்த்தப்பட்டது, தற்போது 1-3-1989-லிருந்து அமல்படுத்தப்பட்டு ரூபாய் 30 வீதம் வசூல் செய்யவேண்டுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதை உடனடியாக ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயத்திற்கு தற்போது அளிக்கப்படுகிற மின்சாரம் பற்றாக்குறையாக உள்ளது. பகலில் 6 மணி நேரம், இரவில் 8 மணி நேரம் மின்சாரம் தொடர்ந்து கிடைக்க வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதுபோன்று விவசாயிகளுடைய குறைகள் நிறைய இருக்கின்றன. எனக்கு அளிக்கப்பட்ட நேரம் முடிந்து விட்டதால் இத்துடன் என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.

2. தகவல் கோரல்—தொடர்ச்சி.

(ஏ) பேரவையில் பெண் போலீசாரைப் பணியில் அமர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து.

திரு. ஏ. அப்துல் சமத் : துணைத் தலைவர் அவர்களே, ஐந்து பெண் போலீசாரை இங்கே சபையிலே பணியில் அமர்த்தினால் நலமாக இருக்குமென கருதுகிறேன். காரணம், இன்றைய நிலையே நாளையும் ஏற்பட்டால், செல்வி ஜெயலலிதா அவர்கள் இந்தச் சபைக்கு வந்தால், ஒரு ஆண் போலீசை வைத்து வெளியேற்றினார்கள், கையைப் பிடித்து இழுத்தார்கள் என்றுகூட அவர்கள் பிரச்சாரம் செய்ய நேரிடலாம். எனவே, தயவுசெய்து ஐந்து பெண் போலீசாரை நியமிக்க வேண்டுமென்ற யோசனையைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவர்கள் சபைக்கு வருவதில்லையென்று தெரிவித்து விட்டார்கள். ஆகவே, பெண் காவலர்கள் தேவையில்லை.

*திரு. வி. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் வேளாண்மைத் துறையில் நேரிடையாக ஈடுபட்டிருக்கிற காரணத்தால், வேளாண்மைத் துறையில் கிடைத்திருக்கிற அனுபவங்களை வைத்து மானிய கோரிக்கைகளை இங்கே முன்மொழிந்து இருக்கிறார்கள். இந்த மானிய கோரிக்கையில் 13 தலைப்புகளில் 83 உட்பிரிவுத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. 31 புதிய செயல்பாடு திட்டங்கள் அறிவிக்கப்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று. நாளை (5–4–1989) காலை 9–00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 12–58 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

41. 1940ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள் (போ. 1) துறையின் 28–4–1988ஆம் நாளிட்ட 960-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை :

(1939ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.)

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்

49. கோரிக்கை எண். 20—வேளாண்மை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1989-90. (தமிழ், ஆங்கிலம்).

50. வேளாண்மைத் துறை பற்றிய செயல்வினை முறைத் திட்டம் 1989-90 (தமிழ் ஆங்கிலம்)

51. தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாளர்கள் இணையம் பற்றிய ஆய்வுரை 1989-90 (தமிழ் ஆங்கிலம்)

52. தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் கழகம் பற்றிய ஆய்வுரை, 1988-89 (தமிழ் ஆங்கிலம்)

53. தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் பணிக் கூட்டுறவு இணையம் பற்றிய ஆய்வுரை, 1988-89 (தமிழ் ஆங்கிலம்).

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1989 ஏப்ரல் 4]

இணைப்பு

பக்கம் 61-இல் உள்ள அடிக்குறிப்பைப் காண்க.)

வேளாண்மைத் துறையின் கொள்கை விளக்கம்.

தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சியில் வேளாண்மைமுதன்மையான பங்கு வகிக்கிறது. சுமார் 70 சதம் மக்களின் வாழ்க்கைக்கு வழிவகுப்பது மட்டுமல்லாமல் சுமார் 50சதம் மக்களுக்கு வேலையும் மாநிலத்தின் மொத்த வருமானத்திற்கு கணிசமான பங்கும் அளிக்கிறது. அதன் காரணமாக, வேளாண்மையும் அதனை சார்ந்த பிரிவும் முன்னேற்றமடைய தேவையான முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

வேளாண் குடிமக்கள் பொருளாதார உயர்வுக்கு மிகவும் அவசியமான பயிர் விளைச்சல் உற்பத்தியை அடைவதில் மூலம் கிராம வளர்ச்சி பெற பல்வேறு திட்டங்கள் வகுக்கப்பட்டு செயலாக்கப்படுகின்றன. அவை தரமான விரிவாக்கப் பணி, காலத்தே தேவையான அளவு இடுபொருள் வழங்குதல், ஒருங்கிணைந்த உர மேலாண்மை, தேவைக்கேற்ப பயிர்பாதுகாப்பு, பண்ணை தொழிலாளர்கள் மற்றும் மகளிர் பயிற்சி, நெல் ஒட்டு மொத்த கொள்முதல் செய்யப்படும். காவிரி நதி படுகை விவசாயிகளுக்கு உற்பத்தி ஊக்கமளிப்பு, ஸ்வீடன் நாட்டு உதவியுடன் வேளாண் காடு வளர்ப்பு ஆகியவை. இம்முன்னேற்ற திட்டங்கள் யாவும் தேவைக்கேற்றவாறு மாறுதல்களுடன் 1989–90-ஆம் ஆண்டில் தீவிரமாக செயல்படுத்தப்படும்.

பொதுவாக 1988–89ஆம் ஆண்டின் பருவநிலை, இயல்பான சாகுபடிக்கு சாதகமாக அமையவில்லை. தென்மேற்கு பருவ மழை காலத்தில் இயல்பான அளவு 308.4 மி. மீட்டர். ஆனால் கிடைத்த மழை அளவு 380·4 மி. மீட்டர் ஆகும். தென்மேற்கு பருவமழை சிறிதளவு இயல்பான அளவை விட அதிகமாக பெய்திருப்பினும் அது காலத்தே தொடங்காததால் மானாவாரி பயிர் சாகுபடி தாமதமாகியதுமில்லாமல் கிணறுகளிலும், நீர்த் தேக்கங்களிலும் போதிய அளவு நீர் கிடைக்கவில்லை. இதன் காரணமாக அந்நீர்த் தேக்கங்கள் குறிப்பிட்ட நாட்களில் சாகுபடிக்குத் திறக்கப்படவில்லை. மேலும் காவிரி நதிப்படுகையில் நெல் சாகுபடிக்கு முக்கியத் தேவையான மேட்டூர் நீர்த்தேக்கம் வழக்கமான நாளான ஜூன் 12ஆம் நாள் குறுவை சாகுபடிக்குத் திறக்கப்படவில்லை. இக்காரணங்களால் சொர்னவாரி, கார் குறுவை பட்டங்களில் நெல் சாகுபடி பரப்பில் குறைவு ஏற்பட்டது. இயல்பான பரப்பான 4.15 லட்சம் எக்டருக்கு பதிலாக 2 லட்சம் எக்டரே பயிராகியது. இருப்பினும், தாமதமாக கிடைக்கப்பெற்ற தென் மேற்கு பருவமழைமேட்டூர் நீர்த்தேக்கத்தின் நீர் நிலையை சிறிதளவு உயர்த்தியதன் காரணமாக ஆகஸ்டு மாதம் 7-ஆம் நாள் 55 நாட்கள் தாமதத்துடன் ஒரு போகச் சாகுபடிக்கு திறக்கப்பட்டது. அக்டோபர் மாத மத்தியில் வடகிழக்கு பருவ மழை தொடங்கலாம் என்ற நம்பிக்கையுடன் சம்பா நெல் சாகுபடி பரப்பு கணிசமான அளவு அதிகரித்தது.

[1989 ஏப்ரல் 4

வடகிழக்கு பருவமழை இரண்டு வார கால தாமதமாக அக்டோபர் 2-ஆம் தேதி தொடங்கியதுடன் இயல்பான அளவான 447.4 மி. மீட்டருக்கு பதிலாக மிகக் குறைவாக 214.1 மில்லி மீட்டர் என்ற அளவே பெய்தது. அதே போல் மற்ற நீர்த்தேக்கங்களின் நீர் நிலையும் நெல் சாகுபடிக்கு திருப்திகரமாக அமையவில்லை. இதன் காரணமாக சம்பா நெல் சாகுபடி இயல்பான பரப்பான 17.65 லட்சம் எக்டர் என்ற அளவுக்கு மாறாக 16.50 லட்சம் எக்டர் என்ற அளவே பயிராகிறது. மேலும் நவரை சாகுபடி இயல்யான பரப்பான 2.20 லட்சம் எக்டர் என்ற அளவுக்கு மாறாக சுமார் 1 லட்சம் எக்டர் என்ற அளவிலேயே அமையலாம் என்று எதிர்பார்க்கப் படுகிறது. இது தவிர மானாவாரி பயிர்களின் உற்பத்தியும் பாதிக்கப்பட்டுள்ளது. இதுகாறும் நிலவிய பருவ நிலைகளை கணக்கில் கொண்டு 1988–89 ஆம் ஆண்டு பயிர் உற்பத்தி கீழ்க் கண்டவாறு இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

	பரப்பு. (இலட்சம் எக்டர்)		உற்பத்தி. (இலட்சம் டன்கள்)	
	இலக்கு	எதிர் பார்ப்பு.	இலக்கு	எதிர் பார்ப்பு.
(1)	(2)	(3)	(4)	(5)
அரிசி . . .	24.00	19.49	57.00	57.10
சிறு தானியங்கள் . .	18.00	14.00	18.00	14.65
பயறுவகைகள் . .	12.00	10.93	5.00	5.00
கரும்பு (வெல்லமாக) . .	2.00	2.00	22.00	22.00
பருத்தி (இலட்சம் பொதிகள்)	2.28	2.30	5.20	5.20

சாகுபடி பரப்பில் குறைவு ஏற்பட்டாலும் எக்டர் மகசூலை திறமையான விரிவாக்கப் பணிகள் மூலம் உயர்த்தி இவ்வாண்டில் குறிப்பிட்டுள்ள உற்பத்தி இலக்குகள் யாவும் சிறுதானியங்களில் தவிர முழுமையாக அடையப்படும்.

1989–90 ஆம் ஆண்டின் உற்பத்தித் திட்டங்கள்.

நெல் :

1989–90 ஆண்டில் இயல்பான பருவநிலை நிலவும் என்ற நம்பிக்கையுடன் 24.00 இலட்சம் எக்டர் சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இதில் 95 சதம் பரப்பில் உயர் விளைச்சல் இரகங்கள் பயிரிடப்படும். ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்குள் இந்திய அளவில் 175 மிலியன் டன்கள் அரிசி உற்பத்தி செய்ய வேண்டும் என்ற தேசிய குறியீட்டிற்கு ஏற்ப 1988–89

1989 ஏப்ரல் 4]

முதல் நம் மாநிலத்தில் செங்கற்பட்டு, தென்னாற்காடு, வட ஆற்காடு, திருச்சிராப்பள்ளி, தஞ்சை, புதுக்கோட்டை, மதுரை, மற்றும் நெல்லை மாவட்டங்களில் சிறப்பு உணவு உற்பத்தி திட்டம் செயலாக்கப்படுகிறது. நீர்ப்பாசனத்தை நிலைப்படுத்துதல், நிலத்தடி நீரை சீரிய முறையில் பயன்படுத்துதல், தேவையான கடன் வசதியைக் கொண்டு முன்னேறிய சாகுபடி முறைகளை கையாளுதல் போன்ற திட்டங்களைச் செயல்படுத்துவதன் மூலம் அரிசி உற்பத்தியை பெருக்குவதற்கான வழிமுறைகள் இத்திட்டத்தில் அடங்கியுள்ளன. இத்திட்டத்தின் மூலம் விதை, துத்தநாக சல்பேட், ஜிப்சம், களைக்கொல்லிகள் மற்றும் பயிர் பாதுகாப்பு மருந்துகள் விநியோகத்தில் 8.20 கோடி ரூபாய் மான்யம் அளிக்கப்படும்.

சிறு தானியங்கள் :

பெருவாரியான சிறுதானியங்கள் மானாவாரியாக பயிரிடப்படுகின்றன. அவைகளின் உற்பத்தியை பெருக்க மானாவாரி சாகுபடி முறைகளான பெருவிளக்கப் பண்ணை முறைக்கு தேவையான முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. 1988–89 ஆம் ஆண்டு சிறுதானியங்கள் 14.00 இலட்சம் எக்டரில் சாகுபடியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. 1989–90-ஆம் ஆண்டில் இயல்பான பருவ மழை நிலவினால் 18 இலட்சம் எக்டரில் சிறுதானியங்கள் பயிரிடப்பட்டு அவற்றில் 10 லட்சம் எக்டரில் உயர் விளைச்சல் இரகங்கள் பயிரிடப்படும்.

பயிறு வகைகள் :

1988–89ஆம் ஆண்டில் பயறு வகைகள் பரப்பு 10.93 இலட்சம் எக்டர் அடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. அது 12 இலட்சம் எக்டருக்கு உயர்த்தப்படும்.

பருத்தி :

பருத்தி சாகுபடி பரப்பு நடப்பு ஆண்டில் 2.30 இலட்சம் எக்டராக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. 1989–90ஆம் ஆண்டில் அதே நிலையில் பயிர் செய்யப்படும்.

கரும்பு :

அதேபோல் கரும்பு சாகுபடியும் 2.00 இலட்சம் எக்டர் என்ற அளவில் பயிர் செய்யப்படும். சிறப்பு உணவு உற்பத்தித் திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்படும் தீவிர முயற்சிகள் காரணமாகவும், எக்டருக்கு 9 மெட்ரிக் டன்கள் என்ற திட்டம் மூலமாகவும் எக்டர் உற்பத்தி திறன் மேலும் அதிகரிக்கப்படும். மானாவாரி சாகுபடி முறைகளுக்கு ஊக்கம் அளிப்பதன் மூலம் சிறு தானியங்களின் மகசூல் அதிகரிக்கப்படும். அதே போல் பயறுவகைகள் உற்பத்தியை பெருக்க நஞ்சைத் தரிசில் பயறுவகை பயிரிடுதல் அதிகரிக்கப்படும். இவ்வாறான முயற்சிகள் மூலம் 1989–90ஆம் ஆண்டில் பயிர் உற்பத்தி கீழ்க்கண்டவாறு அடையக் குறிக்கோள் நிர்ணயிக்கப்பட்டுள்ளது:—

	உற்பத்தி (இலட்சம் டன்களில்).
அரிசி . . .	60.00
சிறுதானியங்கள் . .	18.00
பயறுவகைகள் . .	5.20
கரும்பு (வெல்லமாக) . .	24.20
பருத்தி	5.20 (இலட்சம் பொதிகள்).

விதை உற்பத்தி திட்டம் :

வேளாண் உற்பத்திக்கு முக்கிய இடுபொருள் விதை காலத்தே மற்றும் பருவத்தே தரமான தேர்ந்த விதைகளை வழங்குதல் உற்பத்தியை அதிகரிக்க தேவையான அம்சங்களாகும். தரமான சான்றிதழ் பெற்ற விதைகளை உழவர்களுக்கு வழங்கும் பணியை வேளாண்துறை மேற்கொண்டுள்ளது. 1988–89ஆம் ஆண்டு இத்துறை 14 சதம் நெற்பரப்பிற்கும், 18 சதம் கேழ்வரகு, 9 சதம் சாதாரண சோளம், 50 சதம் ஒட்டு சிறு தானியங்கள், 25 சதம் சாதாரண கம்பு மற்றும் மக்காச்சோளம், 12 சதம் பயறு வகைகள், 10 சதம் மானாவாரி மற்றும் 15 சதம் இறவைப் பருத்தி பரப்பிற்கு சான்றிதழ் பெற்ற விதைகள் வழங்கப்படுகிறது. 1989–90 ஆண்டில் நெல் விதை 20 சதம் பரப்பிற்கு வழங்கப்பட உள்ளது. ஏனைய பயிர்களுக்கு 1988–89ஆம் ஆண்டின் அளவிலேயே வழங்கப்படும். 1988 டிசம்பர் முடிய விநியோகித்த விதை விபரமும், 1989–90-ஆம் ஆண்டில் வழங்க உத்தேசித்துள்ள இலக்கு ஆகியவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

	(மெட்ரிக் டன்கள்)		
	1988–89 இலக்கு.	1988–89 டிசம்பர். வரை சாதனை.	1989–90 இலக்கு.
(1)	(2)	(3)	(4)
நெல் . . .	18,620	17,197	24,000
சிறுதானியங்கள் . .	1,121	943	1,195
பயறு வகைகள் . .	2,800	1,483	2,850
பருத்தி	340	205	340

1989 ஏப்ரல் 4]

இத்துறையின் கீழ் இயங்கிவரும் 44 அரசு விதைப் பண்ணைகள் மூலமாகவும் 51 விதை மையங்கள் மூலமாகவும் விதை உற்பத்தி செய்யப்படுகிறது. நெல், சிறுதானியங்கள், பயறு வகைகள், எண்ணெய்வித்துக்கள், காய்கறி மற்றும் பருத்தி பயிர்களின் தரமான ஆதாரவிதைகளையும், சான்றிதழ் விதைகளை உற்பத்தி செய்வதோடல்லாமல், அண்மையிலுள்ள விவசாயிகளுக்கு விஞ்ஞான வேளாண் சாகுபடி முறைகள் மற்றும் பண்ணை நிர்வாக நுணுக்கங்கள் செயல் விளக்கமாக செயல்படவும் அரசு விதைப்பண்ணைகள் நடத்தப்படுகின்றன.

மாநிலத்தில் உற்பத்தியாகும் எல்லா இரகங்களின் மூல விதை வேளாண்மைப் பல்கலைக் கழகத்திடமிருந்தும், தேசிய அளவில் உள்ள இரகங்களின் ஆதார விதைகளை இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்திடமிருந்தும் பெற்றுத் தேவைக்கேற்ப இவ்வரசு விதைப்பண்ணைகளில் ஆதார விதையாக பெருக்கப்படுகிறது. இவ்வாதார விதை அரசு விதைப்பண்ணை மற்றும் விவசாயிகளின் நிலங்களில் அமைக்கப்படும் விதைப்பண்ணைகள் மூலம் சான்றிதழ் பெற்ற விதைகளாக பெருக்கப்படுகிறது. அரசு விதைப்பண்ணைகளில் முக்கிய அறிவிக்கப்படாத இரகங்களின் விதைகளும் பெருக்கம் செய்யப்பட்டு ‘‘ உண்மைநிலை விதை ’’ அட்டைகளுடன் வேளாண் குடிமக்களின் விருப்பத்திற்கிணங்க விநியோகிக்கப்படுகிறது. இவ்வரசு விதைப்பண்ணைகளின் விதை உற்பத்தி இலக்கு டிசம்பர் 1988 முடிய சாதனை, மற்றும் 1989–90 ஆம் ஆண்டிற்கான இலக்கு ஆகியவை கீழே கொடுக்கப் பட்டுள்ளன.

வரிசை எண்.	பயிர்.	1988–89 இலக்கு.	1988 டிசம்பர் முடிய சாதனை.	1989–90 ஆண்டு இலக்கு.
(1)	(2)	(3)	(4)	(5)
		(மெட்ரிக் டன்கள்.)		
1	நெல்	3,895	510.3	3,895
2	சிறுதானியங்கள் ..	170	35.9	170
3	பயறு வகைகள் ..	167	24.1	167
4	எண்ணெய் வித்துக்கள்	112	15.0	112
5	காய்கறி வகைகள் ..	45	9.3	45
6	பருத்தி	10	4.0	10

[1989 ஏப்ரல் 4

இரண்டாம் நிலை விதையான சான்றிதழ் விதைகள் 51 விதைமையங்களின்கீழ் அமைக்கப்படும் விதைப்பண்ணைகள் மூலம் உற்பத்தி செய்யப்படும். இதற்கு உதவிட 16,000 டன்கள் திறன் கொண்ட 15 விதை சுத்திகரிப்பு நிலையங்கள் இயங்கு கின்றன.

தரமான நோயற்ற வீரிய கரும்பு விதைக் கரணைகளை சுமார் 35,000 எக்டருக்கு ஒவ்வொரு வருடமும் அளிக்க 3 அடுக்கு கொண்ட விதைப்பெருக்குத் திட்டம் செயல்படுத்தப் படுகிறது. அதில் 35 எக்டரில் முதல் தர, 350 எக்டரில் இரண் டாம் தர மற்றும் 3,500 எக்டரில் வணிகரீதியாக நாற்றங்கால் அமைக்கப்பட்டு முதல் தர மற்றும் இரண்டாம் தர நாற்றங் காலுக்கு எக்டருக்கு 1,500 ரூபாய் என்ற விகிதத்தில் விதை உற்பத்தி விவசாயிகளுக்கு ஊக்குவிப்பு மான்யம் வழங்கப்படு கிறது. வணிகரீதி நாற்றங்காலுக்கு மான்யம் இல்லை. இத் திட்டம் 1989-90 ஆம் ஆண்டிலும் தொடரப்படும்.

1989-90 ஆம் ஆண்டில் பயிர் சாகுபடி முன்னேற்ற நடவடிக்கைகள்.

நெல் :

சிறப்பு உணவு உற்பத்தித் திட்டம்.

இத்திட்டம் மத்திய அரசின் முழு நிதியுதவியுடன் 1988-89- ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. நம் மாநிலத்தில் உள்ள செங்கற்பட்டு, தென் ஆற்காடு, வட ஆற்காடு, திருச்சி, தஞ்சை, புதுக்கோட்டை, மதுரை மற்றும் நெல்லை மாவட்டங்களில் இத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. 1988-89 ஆம் ஆண்டில் இடு பொருட்கள் மான்யமாக 306.80 இலட்சம் ரூபாய் ஒப்பளிக்கப் பட்டுள்ளது. டிசம்பர் 1988 முடிய சாதனை மற்றும் 1989-90 ஆம் ஆண்டில் இலக்கு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

பொருள்.	1988-89 ஆண்டு இலக்கு.	1988 டிசம்பர் முடிய சாதனை.	1989-90 இலக்கு.
(1)	(2)	(3)	(4)
நெல் பரப்பு (இலட்சம் எக்டர்).	18.60	13.20	18.60
அரிசி உற்பத்தி (இலட்சம் டன்கள்).	45.15	38.88	46.85

1989 ஏப்ரல் 4]

பொருள்.	1988–89 ஆண்டு இலக்கு.	1988 டிசம்பர் முடிய சாதனை.	1989-90 இலக்கு.
(1)	(2)	(3)	(4
உர வினியோகம் (இலட்சம் டன்கள்).	5.09	4.02	2.59
கூடுதல் உர விற்பனை நிலையங்கள் திறத்தல் (எண்ணிக்கை) ..	800	816	800
மேலுரமிடுதலை இரண்டு அல்லது மூன்று முறை யாகப் பிரித்து இடுதல்	1.75	2.35	2.00
முசோரிபாஸ்பேட் உப யோகித்தல் (இலட்சம் எக்டேர்) ..	0.25	0.17	0.48
அசோஸ்பரில்லம் உப யோகித்தல் (இலட்சம் எக்டேர்) ..	0.51	0.46	0.56
அசோஸ்பரில்லம் பொட் டலங்கள் வினியோகித் தல் (இலட்சம் பொதி)	5.05	4.55	5.80
நீலப்பச்சைப் பாசி இடுதல் (இலட்சம் எக்டர்) ..	2.38	2.29	2.38
விதை வினியோகம் (ஆயி ரம் டன்கள்) ..	14.42	13.41	18.60
விதை பரிமாற்றம் (டன்கள்)	4,184	6,293	4,650
அத்தநாகசல்பேட் இடுதல் (இட்சம் எக்டர்) ..	1.09	0.67	1.26
யூரியாவுடன் கூடிய ஜிப் சம் உற்பத்தி ..	0.25	0.20	0.49
களைக்கொல்லி உபயோகம் (இலட்சம் எக்டர்) ..	1.40	1.08	1.40

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

பொருள்.	1988–89 ஆண்டு இலக்கு.	1988 டிசம்பர் முடிய சாதனை.	1989–90 இலக்கு.
(1)	(2)	(3)	(4)
மான்யம் வழங்குதல் (இலட்சம் ரூபாய்).			
விதை விநியோகம்	106.76	74.67	1989–90 ஆம் ஆண்டில் 25 சத மாநில அரசின் பங்குடன் 820 இலட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்பட உள்ளது.
உபரி விதை கையிருப்பு வைத்தல்.	4.37	0.35	
துத்தநாக சல்பேட் விநியோகம்.	83.72	49.97	
ஜிப்சம் விநியோகம்	19.55	18.38	
களைக்கொல்லி விநியோகம்.	66.40	47.20	
பயிர் பாதுகாப்பு மருந்துகள்.	26.00	..	
மொத்தம் ..	306.80	190.57	

எக்டருக்கு 9 மெட்ரிக் டன் நெல் உற்பத்தி திட்டம்.

உற்பத்தி திறனை உயர்த்த கீழ்க்கண்ட அணுகுமுறை செயல்படுத்தப்படுகிறது :—

1 அதிக விளைச்சல் திறன் கொண்ட பகுதிகள்.	எக்டருக்கு 9 மெட்ரிக் டன்களுக்கு மேல்.
2 குறைவான விளைச்சல் திறன் கொண்ட பகுதிகள்.	எக்டருக்கு 6 முதல் 8 மெட்ரிக் டன்கள் வரை.
3 பிரச்சினைப்பகுதிகள் ..	எக்டருக்கு 6 மெட்ரிக் டன்களுக்குக் குறைவாக.
4 மானாவாரி பகுதிகள் ..	

1988–89 ஆம் ஆண்டில் “எக்டருக்கு 9 மெட்ரிக் டன் உற்பத்தி திட்டம்” சுமார் ஒரு இலட்சம் எக்டரில் செயல்படுத்தப்பட்டதில் முதல் பயிர் அறுவடை முடிவுகள் ஊக்குவிப்பதாக உள்ளது. 1989–90 ஆம் ஆண்டில் இத் திட்டம் 1.10 இலட்சம் எக்டரில் செயல்படுத்தப்படும்.

[1989 ஏப்ரல் 4

சிறு தானியங்கள்.

பெருவாரியான சிறுதானிய சாகுபடி மானாவாரி நிலங்களில் செய்யப்படுவதால் 20 அம்சத் திட்டத்தில் ''மானாவாரி நிலச் சாகுபடி'' 2வது அம்சமாக செயல்படுத்தப்படுகிறது. மானாவாரி நிலங்களில் பயிர் உற்பத்தி அதிகரிக்கப் பெரு விளக்கப் பண்ணை முறை கடைப்பிடிக்கப்படுகிறது. வேளாண் பொறியியல் துறையால் தெரிந்தெடுக்கப்பட்டு மண்வளப் பாதுகாப்பு முறைகள் மேற்கொள்ளப்பட்ட 316 பெரு விளக்கப் பண்ணைகளில் தரமான இடுபொருள் விநியோகம் உட்பட எல்லா மானாவாரி சாகுபடி முறைகளும் பரந்த அளவில் செயல் விளக்கம் செய்து காட்டப்படுகிறது. 1989–90 ஆம் ஆண்டிலும் கீழ்க் கண்ட திட்டங்களுடன் இது தொடரப்படும்.

1989–90ஆம் ஆண்டின் திட்டம்.

பெருவிளக்கப் பண்ணைகள் (எண்கள்)	316
பெருவிளக்கப் பண்ணைகளின் பரப்பு (ஆயிரம் எக்டர்)	162
மற்ற இடங்களில் மானாவாரி சாகுபடி முறைகள் (ஆயிரம் எக்டர்).	50
பெருவிளக்கப் பண்ணைகள் தரமான விதை விநியோகம் (ஆயிரம் டன்கள்).	3.70

பயிறு வகைகள். :

பொறுக்கு விதைகள், விதை நேர்த்தி, உரம், பயிர் பாதுகாப்பு மற்றும் அறுவடைக்கு பின் பாதுகாப்பு ஆகிய தொழில் நுட்பங்களைக் கையாண்டு தற்போது உள்ள உற்பத்தித் திறனை குறைந்த பட்சம் எக்டருக்கு 25 கிலோ அதிக அளவு உயர்த்துவதன் மூலம் பயறு வகைகள் உற்பத்தி இலக்கான 5.20 இலட்சம் டன்கள் அடையப்படும்.

வான்வெளியில் உள்ள தழைச்சத்தை கிரகித்து வேர்முண்டுகளில் சேமித்து பயிருக்கு அளிக்க நுண்ணுயிர் கலவை பொட்டலங்கள் வேளாண் விரிவாக்க மையங்கள் மூலம் வழங்கப்படுகின்றன. ஆண்டு இலக்கான 6 இலட்சம் எண்களில் டிசம்பர் 1988 வரை 3.21 இலட்சம் பொட்டலங்கள் தயாரித்து விநியோகிக்கப் பட்டுள்ளன. 1989–90 ஆம் ஆண்டில் 6 இலட்சம் நுண்ணுயிர் கலவை பொட்டலங்கள் தயாரித்து விநியோகம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. நஞ்சை தரிசில் பயிராகும் பயறு வகை பயிருக்கு இலை மூலம் டை அம்மோனியம் பாஸ்பேட் அளிக்கவும் பூக்கும் பருவத்தில் பூச்சி தடுப்பு நடவடிக்கையாக 10 சதம்

1989 ஏப்ரல் 4]

பி.எச்.சி. தூள் தூவவும் உழவர்களை ஊக்குவிக்க தென்னாற்காடு, திருச்சி, தஞ்சை, நெல்லை மற்றும் சிதம்பரனார் மாவட்டங்களில் ''நஞ்சை தரிசில் பயறு வகை பயிர்களுக்கு திருந்திய சாகுபடி முறைகளை பரப்புதல்'' திட்டம் செயல்படுத்தப்படுகிறது. 1988–89-ம் ஆண்டில் 20,000 எக்டர் பரப்பில் சனவரி முதல் மார்ச் வரையிலான காலத்தில் செயல்படுத்தப்படுகிறது. 1889–90-ம் ஆண்டிலும் 20,000 எக்டர் பரப்பில் செயல்படுத்தப்படும்.

ஏற்கெனவே செயலாக்கப்படும் தேசிய பயறு வகைகள் பெருக்குத் திட்டம் தெரிந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் பயறு வகைகள் சாகுபடியில் தோன்றும் சிக்கல்களை கண்டறிவதோடல்லாமல் மினிகிட்டுகள், விதை கிராமங்கள், அணுசரணை ஆராய்ச்சி, வட்டார செயல் விளக்கங்கள், விதைகளை முன்னிருப்பில் வைத்தல், ஒட்டுண்ணி மூலம் பயிர் பாதுகாப்பு, காய்ப்புழுவைக் கட்டுப்படுத்துதல் மற்றும் பயிற்சி ஆகிய முறைகள் மூலம் பயறு வகைகளின் உற்பத்தி பெருக்கப்படும். இத் திட்டம் தென்னாற்காடு, வடாற்காடு, தஞ்சை, சேலம், மற்றும் கோவை மாவட்டங்களில் 27.33 இலட்சம் ரூபாய் செலவில் செயலாக்கப்படுகிறது. அதில் டிசம்பர் 1988 வரை 13.15 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. 1989–90-ம் ஆண்டிலும் இதே நிதியளவில் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பருத்தி :

பஞ்சு உற்பத்தியை அதிகரிக்க கீழ்க்கண்ட வழிமுறைகள் கையாளப்படும் :—

1. பருத்தி சாகுபடி பரப்பை அதிகரித்தல்.

2. சாகுபடி பரப்பு முழுவதிலும் முன்னேறிய சாகுபடிமுறைகளான உர உபயோகம் மற்றும் பயிர்பாதுகாப்பு முறைகளை கையாளுதல்.

3. துறை மூலமாக 10 சதம் மானாவாரி பரப்பிற்கும் 15 சதம் இறவை பரப்பிற்கும் தேவையான தரமான வீதைகள் விநியோகித்தல்.

கோவை வேளாண் பல்கலைக் கழகத்திடமிருந்து பெற்ற மூல விதையைக் கொண்டு எம்.சி.யு. 5, 9, 10, எல். ஆர். ஏ. 5166 மற்றும் சே. 10 ஆகிய இரகங்களின் ஆதார விதை வைகை அணைப்பண்ணை இரண்டில் உற்பத்தி செய்யப்படுகிறது. வைகை அணை அரசின் விதைப் பண்ணைகளிலிருந்து கிடைக்கப்படும் ஆதார விதைகளைக் கொண்டு சான்றிதழ் பெற்ற விதைகளை தனியார் விதைப் பண்ணைகளில் உற்பத்தி செய்ய

1989 ஏப்ரல் 4]

பருத்தி அபிவிருத்தி திட்டத்தின் செயல் முறைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

வரிசை எண் மற்றும் பொருள்.	1988–89 இலக்கு.	1988 டிசம்பர் முடிய சாதனை.	1989–90 இலக்கு.
(1)	(2)	(3)	(4)
1 சாகுபடி பரப்பு (இலட்சம் எக்டர்).	2.28	2.05	2.28
2 சான்றிதழ் பெற்ற விதை உற்பத்தி (குவிண்டால்).	3,000	2,729	3,400
3 சான்றிதழ் பெற்ற விதை விநியோகம் (குவிண்டால்).	3,400	2,054	3,400
4 விதைப் பண்ணைகள் (எக்டர்).	700	699	700
5 உழவியல் நுட்பங்கள் பரப்பு (இலட்சம் எக்டர்)	2.28	2.05	2.25
6 பயிர்பாதுகாப்பு பரப்பு (இலட்சம் எக்டர்).	2.28	2.05	2.25
7 சமசீர் உரமிடல் (இலட்சம் எக்டர்).	2.28	2.05	2.25

கரும்பு :

தரமான விதைக் கரணைகள் வழங்குவதோடல்லாமல் கரும்பு இடைக்கணு புழுவை கட்டுப்படுத்த ஒட்டுண்ணி வளர்த்துவிடுதல், சர்க்கரை ஆலைப் பகுதிகளில் கட்டுக் கோப்பு சாகுபடி முறைகளை செயல் விளக்கம் செய்து காட்டுதல் போன்ற திட்டங்களும் செயல்படுத்தப்படுகின்றன. 1989–90-ம் ஆண்டில் இலக்குகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

[1989 ஏப்ரல் 4

(1)	1988-89 இலக்கு. (2)	31-12-1988 முடிய சாதனை. (3)	1989-90 இலக்கு. (4)
ஒட்டுண்ணி விடுதல் (எக்டர்).	10,500	6,906	10,500
செயல் விளக்கம் அமைத்தல் (எண்கள்).	575	403	575

எருவும் உரமும்.:

1988-89-ம் ஆண்டின் இலக்கான 7.70 இலட்சம் மெட்ரிக் டன்கள் உர விநியோகத்தில் டிசம்பர் 1988 வரை 3.22 இலட்சம் டன்கள் தழைச் சத்தும், 1.44இலட்சம் டன்கள் மணிச் சத்தும் 1.49 இலட்சம் டன்கள் சாம்பல் சத்தும் ஆக மொத்தம் 6.15 இலட்சம் டன்கள் இரசாயன உரங்கள் விநியோகம் செய்யப் பட்டன. 1989-90-ம் ஆண்டில் 8 இலட்சம் டன்கள்தரையணி மற்றும் சாம்பல் சத்து கொண்ட உரங்கள் விநியோகிக்கப்படும்.

விவசாயிகளுக்கு வழங்கப்படும் உரங்களின் தரத்தை கட்டுப் படுத்த 6 உர ஆய்வுக்கூடங்கள் ஆண்டொன்றுக்கு 11,000 மாதிரி களை ஆய்வு செய்யும் திறனுடன் இயங்குகின்றன. 1988-89-ம் ஆண்டில் டிசம்பர் 1988 வரை 8,303 உரமாதிரிகள் எடுக்கப் பட்டு ஆய்வுக்கு அனுப்பப்பட்டுள்ளன. 1989-90-ம் ஆண்டில் 11,000 உர மாதிரிகள் எடுக்கப்பட்டு ஆய்வுக்கு அனுப்பப்படும். தரக்குறைவான உரங்கள் மீது தேவையான தொடர் நட வடிக்கைகள் இத்துறையின் தரக் கட்டுப்பாடு பிரிவின் மூலம் செயல்படுத்தப்படுகின்றன.

விவசாயிகளின் நிலங்களில் நடத்தப்பட்ட ஆராய்ச்சிகளின் முடிவுகளின்படி தழைச்சத்து உரங்களை தார் அல்லது வேப்பம் பிண்ணாக்குடன் கலந்து பிரித்து இடுதல் நல்ல பலன் அளிப்பதாக உள்ளதால் இம்முறை அதிக அளவில் பரவிடச் செய்யப் படுகிறது.

நீலப்பச்சைப்பாசி, அசோகா, ரைசோபியம் போன்ற உயிரின உரங்களின் உபயோகம் பரவி வருகிறது. இவைகளை இரசாயன உரங்களுடன் கூட்டாக இடுதல் பற்றி உழவர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர். 1988-89-ம் ஆண்டில் நீலப் பச் சைப்பாசி இடவேண்டிய இலக்கான 2.6 இலட்சம் எக்டரில் டிசம்பர் 1988 முடிய 2.51 இலட்சம் எக்டர் பரப்பு அடையப் பெற்றுள்ளது. 1989-90-ம் ஆண்டில் 2.6 இலட்சம் எக்டர்

1989 ஏப்ரல் 4]

பரப்பில் நீலப்பச்சைப்பாசி இடப்படும். அதேபோல் டிசம்பர் 1988 முடிய 9.57 இலட்சம் அசோஸ்பைரில்லம் பொட்டலங்கள் விநியோகிக்கப்பட்டன. 1989–90 ஆம் ஆண்டில் 12 இலட்சம் பொட்டலங்கள் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பசுந்தாளுர விதைகள் விநியோகம் மறுபடியும் தொடங்கப்பட்டு 1989–90 ஆம் ஆண்டில் 150 மெட்ரிக் டன் விதைகள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

மானாவாரி மற்றும் உர உபயோகம் குறைவாக உள்ள பகுதிக்கான தேசிய திட்டம் ஒன்று நம் மாநிலத்தில் தருமபுரி மாவட்டத்தில் செயல்படுத்தத் தொடங்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் செலவு 3 ஆண்டு காலங்களுக்கு மொத்தமாக 23.9 இலட்சம் ரூபாய் ஆகும். இச்செலவை மைய அரசு, மாநில அரசு மற்றும் உர நிறுவனங்கள் ஆகிய மூவரும் சமமாக பகிர்ந்துகொள்வர்.

உற்பத்தி ஊக்கமளிப்பு.

காவிரி நதிப்படுகையில் தமிழ்நாடு நுகர்வோர் பொருள் வாணிபக் கழகத்திற்கென அளிக்கப்படும் ஒவ்வொரு குவிண்டால் நெல்லுக்கு 35 ரூபாய் உற்பத்தி ஊக்கத் தொகையாக விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டு வருகிறது. 1988–89 ஆம் ஆண்டில் டிசம்பர் முடிய 10.83 கோடி ரூபாய் இதற்கென செலவிடப்பட்டுள்ளது. அது இவ்வாண்டில் 30 கோடி ரூபாயாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பயிர் பாதுகாப்பு.

1988–89 ஆம் ஆண்டு உணவு மற்றும் உணவில்லாத பயிர்களின் பூச்சி தடுப்பு நடவடிக்கைகள் 57.98 இலட்சம்எக்டரிலும், நோய் தடுப்பு நடவடிக்கைகள் 19.45 இலட்சம் எக்டரிலும் செயல்படுத்த திட்டமிட்டப்பட்டு டிசம்பர் 1988 வரை 47.39 இலட்சம் எக்டரில் பூச்சிகள் தடுப்பு நடவடிக்கைகளும், 16.78 இலட்சம் எக்டரில் நோய் தடுப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டது. 1989–90 ஆம் ஆண்டு 58.35 இலட்சம் எக்டரில் பூச்சி தடுப்பு நடவடிக்கைகளும், 20.28 இலட்சம் எக்டரில்நோய் தடுப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

பூச்சி நோய்கள் தாக்குதலுக்கான வாய்ப்பை முன்கூட்டியே விவசாயிகளுக்கு தெரியப்படுத்தவும் அதற்கு தேவையான தடுப்பு நடவடிக்கைகளை உடனடியாக செயல்படுத்தவும் பூச்சி நோய் கண்காணிப்பு திட்டம் 1988–89 ஆம் ஆண்டு பெருமளவில் மேற்கொள்ளப்பட்டது. ஒவ்வொரு வாரமும் 7,124 திடல்களில் பூச்சி நோய் கண்காணிப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திடல்களிலிருந்து பெறப்படுகின்ற புள்ளி விவரங்கள்

மாவட்ட அளவில் ஒவ்வொரு வாரமும் விரிவாக்கப் பணியாளர்கள் மற்றும் விஞ்ஞானிகள் கூட்டத்தில் ஆராயப்பட்டு, அவ்வாரத்திற்கு விவசாயிகளுக்குத் தர வேண்டிய செய்திகள் இறுதியாக்கப்படுகிறது. இச்செய்திகள் வானொலி மற்றும் தொலைக்காட்சி மூலமாகவும் மற்றும் விரிவாக்கப்பணியாளர்கள் மூலமாகவும் விவசாயிகளுக்குத் தெரியப்படுத்தப்படுகிறது. இத் திட்டம் 1989–90 ஆம் ஆண்டு தொடர்ந்து செயல்படுத்தப் படும்.

பூச்சிநோய் தாக்குதலை திறமையாக கட்டுப்படுத்த,— ஒருங்கிணைந்த பயிர்பாதுகாப்பு தொழில் நுட்பங்கள் பெருமளவில் பரிந்துரைக்கப்படுகின்றன. அவையாவன, பலதரப்பட்ட அதிக செலவில்லாத ஒருங்கிணைந்த பூச்சி நோய் ஒழிப்பு முறைகளான உழவியல் முறை, கையினால் எடுத்து அளிக்கும் முறை, ஒட்டுண்ணி மூலம் கட்டுப்படுத்தும் முறை, ஆகியவையுடன் தேவைக்கேற்ப பூச்சி மருந்து தெளிக்கும் முறையுமாகும். ஒருங்கிணைந்த பயிர்பாதுகாப்பு முறைகள் எல்லா விவசாயிகளுக்கும் தெரிவிக்கும்பொருட்டு பாசன பகுதிகளில் 20 எக்டர் கொண்ட பெருவிளக்கத் தளைகள் 99 இடங்களிலும், 40 எக்டர்கொண்ட தளைகள் மானாவாரி பகுதிகளிலும் 84 இடங்களிலும் அமைக்கப் பட்டுள்ளன. இதுமட்டுமல்லாமல் செங்கற்பட்டு, தென்னாற்காடு, வடஆற்காடு, திருச்சி மற்றும் தஞ்சை மாவட்டத்தைச் சேர்நத 2,500 விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும் ஒரு எக்டருக்கு ரூ. 100 மதிப்புள்ள இன ஈர்ப்பு பொறி, விளக்கு பொறி ஆகிய உபகரணங்கள் 50 சதவிகித மான்ய விலையில் எல்லா மாவட்டத்திலும் ஒருங்கிணைந்த பெருவிளக்கங்கள் அமைந்தவிவசாயிகளுக்கு 7,320 எக்டர் பரப்பில் வழங்கப்படுகிறது. இத் திட்டத்தில் டிசம்பர் 1988 வரை 1950 விவசாயிகளுக்கு பயிற்சியும் 5,780 எக்டர் பரப்பில் மான்ய விலையில் உபகரணங்களும் வழங்கப் பட்டுள்ளன.

1989–90 ஆம் ஆண்டு இத்திட்டத்தில் ஒரு உட்கோட்டத்திற்கு 50 விவசாயிகள் வீதம் மொத்தம் 4,950 விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கவும், 14,640 எக்டரில் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு உபகரணங்கள் 50 சதவிகிதமானியத்தில் வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

பூச்சி நோய்களை ஒழிக்க மைய அரசுநிதி உதவியுடன் செயல் படுத்தப்படும் திட்டங்களின் 1988–89 ஆம் ஆண்டில் இலக்கு டிசம்பர் முடிய சாதனைகள் மற்றும் 1989–90 ஆம் ஆண்டின் இலக்கு ஆகியவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

1989 ஏப்ரல் 4]

வரிசை எண் மற்றும் பூச்சி நோயின் பெயர்.	1988–89ம் ஆம் ஆண்டு திட்ட இலக்கு.	டிசம்பர் 1988இல் சாதனை.	1989–90 ஆம் ஆண்டு இலக்கு.
	(இலட்சம் எக்டேர்.)		
(1)	(2)	(3)	(4)
1. நெல் புகையான் ஒழித்தல்	0.20	0.21	0.30
2. குலை நோய்	0.30	0.20	0.40
3. பச்சைத்தத்துப் பூச்சி	0,20	0.10	0.30
4. இலை சுருட்டுப்புழு	0.20	0.22	0.40
5. எலி ஒழிப்பு	2.00	1.47	2.00
6. சோளம் குருத்து ஈ	0.05	0.05	0.10

இத்திட்டத்தில் பூச்சி மருந்துகள் விவசாயிகளுக்கு 50 சத வீதம் மானியத்தில் வழங்கப்படுகின்றன. இத்திட்டம் 1989–90-ம் ஆண்டில் முன் கூறியவாறு செயல்படுத்தப்படும். இத்திட்டத்தில் மானியமாக செலவிடப்படும் தொகையை மத்திய மாநில அரசுகள் சம அளவில் ஏற்கின்றன.

களைக்கொல்லி மூலம், களையை ஒழிப்பதன் பலன்களை விவசாயிகளுக்குத் தெரியப்படுத்துவதற்காக 1988–89ஆம் ஆண்டில் 0.17 இலட்சம் எக்டேரில் செயல் விளக்கத் தளைகள் அமைக் திட்டமிட்டு டிசம்பர் 1988 வரை 0.092 இலட்சம் எக்டேரில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத் திட்டத்தில் களை கொல்லி மருந்துகள் 25 சதம் மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்படு கிறது. இத்திட்டத்தின் 1989–90 ஆம் ஆண்டு 0.30 இலட்சம் எக்டரில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

விவசாயிகளுக்கு தரமான பூச்சி மருந்துகள் கிடைப்பதை உறுதி செய்யும் பொருட்டு, பூச்சி மருந்துகளுக்கு தரக்கட்டுப்பாடு பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் 16,200 பூச்சி மருந்து மாதிரிகள் ஒன்பது பூச்சி மருந்து ஆய்வு நிலையங்களில் ஆய்வு செய்யப்பட்டு அதில் தரமற்றதாக உள்ள மருந்துகளை தயாரிப்பவர்கள் மற்றும் விற்பனை செய்பவர்கள் மீது குற்றத்தின் தன்மைக்கேற்ப பூச்சி மருந்து சட்டம் 1968ன் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

உழவர் பயிற்சி நிலையங்கள்.

நவீன விவசாய உற்பத்தி நுட்பங்களைப்பற்றி உழவர்களுக்கு பயிற்சியளிப்பதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். குறிப் பாக இடுபொருட்கள் மற்றும் அவற்றினை திறம்பட கையாளும் வழிமுறைகளை கற்பித்து அதன் மூலம் இடுபொருட்களின் விலையை ஈடு செய்வதற்கு ஏற்ப கணிசமான மகசூல் பெறச்

செய்வதே இந்நிலையங்களின் நோக்கமாகும். இக்குறிக்கோளை அடைய உழவர் பெருமக்களுக்கு தொடர்ந்து பயிர் உற்பத்தி நுணுக்கங்கள், நவீன உயர் விளைச்சல் ரகங்கள், உபரி மகசூல் பெறும் வகையில் அனைத்து இடுபொருட்களையும் போதுமான அளவில் திறம்பட கையாளும் வழி முறைகளைப்பற்றி பயிற்சி அளித்தல் இன்றியமையாததாகும். இத்திட்டம் (1) உழவர், (2) வேளாண் மகளிர் மற்றும் (3) வேளாண் இளைஞர்கள் ஆகிய மூன்று பிரிவினரும் பயனடையும் வகையில் அமைந்துள்ளது. நவ்ளாக், திண்டிவனம், ஆடுதுறை, லால்குடி, பாளையங் கோட்டை, காஞ்சீபுரம், குடுமியான்மலை, திருப்பதிசாரம், சேலம், தருமபுரி, பரமகுடி மற்றும் பவானிசாகர் ஆகிய இடங் களில் மொத்தம் 12 உழவர் பயிற்சி நிலையங்கள் செயல் படுகின்றன.

உழவர் பயிற்சி நிலையங்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் 300 உழவர் விவாதக் குழுக்களை அமைத்து அதன் அமைப் பாளர் அல்லது குழுத் தலைவர்களுக்கு நிலையப்பயிற்சி அளிக்கப் படுகிறது. அத்துடன் தானிய சேமிப்பு, எலிகள் ஒழிப்பு மகளிர்க் கான செயல் விளக்கங்கள் ஆகிய முறைகளிலும் பயிற்சி அளிக்கப் படுகிறது. டென்மார்க் நாட்டு முழு நிதி உதவியுடன் வேளாண் மகளிருக்காக செயல்படும் பண்ணை மகளிர் மேம் பாட்டு திட்டம் (டான்வா) ஆறு உழவர் பயிற்சி நிலையங்களில் செயல்படுத்தப்படுகிறது.

12 உழவர் பயிற்சி நிலையங்கள்.	1988–89 இலக்கு.	31–12–88 முடிய சாதனை.	1989–90 இலக்கு.
(1)	(2)	(3)	(4)
ஆண் பெண் உழவர்களுக் கான நிலையப் பயிற்சி கள் (எண்கள்).	264	220	264
மகளிர்க்கான செயல் விளக்கங்கள். (எண்கள்).	132	105	132
உழவர் விவாதக்குழு அமைப்பாளர்களுக்கான நிலையப் பயிற்சி (எண்கள்).	120	110	120
களப் பயிற்சிகள் (எண்கள்).	1,320	1,072	1329

1989 ஏப்ரல் 4]

வேளாண்மை பள்ளிகள் :

வேளாண் பள்ளிகள், வேளாண் இளைஞர்கட்கு குறிப்பாக பள்ளியிலிருந்து எட்டாம் வகுப்பு வரை படித்து நின்றுவிட்ட 18 முதல் 30 வயதுக்குட்பட்ட, வேளாண்மையை பின்னணியாகக் கொண்ட வேளாண் இளைஞர்களுக்கு விஞ்ஞான வேளாண்மை தொழில் நுட்பங்களில் பயிற்சியளிக்கும் சீரிய நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. இந்த வேளாண் பள்ளிகள் 1961-ம ஆண்டில் துவக்கப்பட்டு படிப்படியாக அவற்றின் எண்ணிக்கை அதிகப்படுத்தப்பட்டது. வேளாண் துறையின் கீழ் தற்போது 12 வேளாண் பள்ளிகள் செயலாற்றி வருகின்றன. பசும்பொன் முத்துராமலிங்கம், அண்ணா, காமராசர், வ. உ. சிதம்பரனார், திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களைத் தவிர மற்ற மாவட்டங்களில் மாவட்டத்திற்கு ஒன்று என இப் பள்ளிகள் இயங்கி வருகின்றன. திருச்சிராப்பள்ளி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் உள்ள வேளாண் இளைஞர்கள் புதுக்கோட்டை மாவட்டம் குடுமியான்மலையில் அமைக்கப்பட்டுள்ள வேளாண் பள்ளியில் சேர்க்கப்படுகின்றனர். கோயம் புத்தூர் மற்றும் பெரியார் மாவட்டங்களில் உள்ள வேளாண் இளைஞர்கள பவானிசாகரில் உள்ள வேளாண் பள்ளியில் சேர்க்கப்படுகின்றனர். நெல்லை மாவட்ட இளைஞர்கள் கிள்ளி குளம் பள்ளியிலும் காமராசர் மற்றும் பசும்பொன் மாவட்ட இளைஞர்கள் பரமகுடி பள்ளியிலும், அண்ணா மாவட்ட இளை ஞர்கள் மேலூர் பள்ளியிலும் சேர்க்கப்படுகின்றனர்.

1984–85 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு பள்ளியிலும் ஆண் டொன்றுக்கு 25 மாணவர்கள் என்ற அளவில் மாதத்திற்கு ரூ. 100 உதவித் தொகையுடன் பயிற்சி பெறுகின்றனர். பயிற்சிக் கான காலம் செப்டம்பர் 1-ம் தேதி முதல் ஆகஸ்டு 31-ந் தேதி வரையாகும்.

	1988–89		1989–90
	இலக்கு.	சாதனை.	இலக்கு.
12 வேளாண் பள்ளிகள்	300	300	300

மாநில பயிற்சி நிலையம் குடிமியான்மலை :

பயிற்சி வழி தொடர்பு திட்டம் தொடங்கியதைத் தொடர்ந்து செப்டம்பர் 1981 முதல் மாநில பயிற்சி நிலையம் செயல்பட ஆரம்பித்தது. இப்பயிற்சி நிலையம் வேளாண் இணை இயக்கு நர் (பயிற்சி) அவர்களின் மேற்பார்வையில் இரண்டு வேளாண்மை துணை இயக்குநர்கள், மூன்று வேளாண்மை உதவி இயக்குநர்கள், மூன்று வேளாண் அலுவலர்கள் மற்றும் இதர அலுவலர்களுடன் இயங்கி வருகிறது.

[1989 ஏப்ரல் 4

கீழ்க்காணும் பயிற்சிகளை அளிப்பது இப்பயிற்சி நிலையத்தின் நோக்கமாகும்:—

1. புதிதாக பணிக்கு அமர்த்தப்பட்ட வேளாண்மை அலுவலர்களுக்கு ஊக்குவிப்பு பயிற்சி அளித்தல் (15 நாட்கள்)

2. வேளாண்மை அலுவலர்கள், வேளாண்மை துணை அலுவலர்களுக்கு சிறப்பு பயிற்சி அளித்தல் (15 நாட்கள்).

3. கிராம விரிவாக்க பணியாளர்களுக்கு புத்துயிரூட்டப்பயிற்சி அளித்தல் (இரண்டு மாதங்கள்).

4. கிராம விரிவாக்கப் பணியாளர்களுக்கு சிறப்பு பயிற்சி அளித்தல் (15 நாட்கள்).

1988–89 ஆம் ஆண்டின் இலக்கு டிசம்பர் முடிய சாதனை மற்றும் 1989–90 ஆம் ஆண்டின் இலக்கு ஆகியவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

		பயிற்சியாளர்களின் எண்ணிக்கை.		
வரிசை எண்.	பயிற்சி.	1988–89 இலக்கு.	31-12-88 முடிய சாதனை.	1989–90 திட்டம்.
(1)	(2)	(3)	(4)	(5)
1.	வேளாண்மை அலுவலர்களுக்கு ஊக்குவிப்பு பயிற்சி.	250	30	100
2	வேளாண்மை அலுவலர் வேளாண் துணை அலுவலர்களுக்கு சிறப்பு பயிற்சி யளித்தல்.	840	675	1,050
3.	கிராம விரிவாக்க பணியாளர்களுக்கு புத்துயிரூட்டப் பயிற்சி அளித்தல்	330	182	..
4.	கிராம விரிவாக்கப் பணியாளர்களுக்கு சிறப்பு பயிற்சி யளித்தல்.	700	519	1,000
	மொத்தம் ..	2,120	1,406	2,150

1989 ஏப்ரல் 4]

பண்ணை மகளிர் மேம்பாட்டுத் திட்டம் (டான்வா) :

இது டென்மார்க் அரசு நிதியுதவியுடன் செயல்படும் திட்டம். இத்திட்டம் 3.21 கோடி ரூபாய் செலவில் 7 ஆண்டு காலங்களில் துவக்கப் பணி, செயல் பணி, இறுதிப் பணி ஆகிய மூன்று கால கட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் செங்கல் பட்டு, தென்னாற்காடு, தஞ்சை, புதுக்கோட்டை, இராமநாத புரம் மற்றும் நெல்லை மாவட்டங்களில் 6 உழவர் பயிற்சி நிலையங்கள் மூலம் செயல்படுத்தப்படுகிறது. பண்ணை மகளிருக்கு வேளாண்மை தொழில் நுட்பங்களில் பயிற்சி அளிப்ப தன்மூலம் வேளாண் உற்பத்தியை உயர்த்தவும், அவர்களின் சமூக அந்தஸ்தை உயர்த்தவும் இத்திட்டம் வழி வகுக்கிறது. ஆண்டுதோறும் ஒவ்வொரு உழவர் பயிற்சி நிலையங்களிலும் 30 பண்ணை மகளிர் கொண்ட ஒரு பயிற்சி பிரிவாக 80 கிராம நிலை பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. அதேபோல் ஆடுதுறை மற்றும் குடுமியான்மலையில் உள்ள உழவர் பயிற்சி நிலையங் களில் 30 பண்ணை மகளிர் கொண்ட 16 பயிற்சி பிரிவுகளுக்கு நிலையப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

வேளாண்மை மேம்பாட்டுஅமைப்பை திருத்தியமைத்தல் :

பயிற்சி வழி தொடர்பு திட்டத்திற்கான உலக வங்கி நிதியுதவி 1987 நவம்பர் மாதத்துடன் முடிவுற்றது. பயிற்சி வழி தொடர்பு திட்டத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட விரி வாக்க வேளாண்மை முறை மாநில அரசு நிதியில் தொடரப் படுகிறது.

பயிற்சி வழி தொடர்பு திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதால் வேளாண் வளர்ச்சிப் பணிகள் ஊராட்சி நிறுவனங்களிடமிருந்து பிரிக்கப்பட்டதுடன் அவைகளுக்கு வேளாண் பணிகளில் பங் கில்லை என்ற எண்ணம் ஊராட்சி ஒன்றிய குழுக்களுக்கு தோன்றியுள்ளது. 1981 ஆம் ஆண்டிற்கு முன் வேளாண்மை விரிவாக்கப்பணி ஊராட்சி ஒன்றிய அமைப்பில் இருந்தது. ஊராட்சி அமைப்புகளுக்கு கிராமங்களுடன் நெருக்கமான தொடர்பு உள்ளதாலும், கிராம மக்களின் விருப்பங்களை அவை பிரதிபலிப்பதாலும், வேளாண் வளர்ச்சிப் பணிகள் ஊராட்சி அமைப்புகளோடு இணைத்து செயல்பட வேண்டிய தேவையை அரசு பரிசிலித்து முன்பிருந்ததுபோலவே வேளாண் பணிகளை செயல்படுத்தப்பட வேண்டிய பொறுப்புகளை ஊராட்சி ஒன்றியங்களிடமே திரும்ப ஒப்படைப்பது என்று முடிவெடுத்துள்ளது. இதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கட் பிரதிநிதிகளும் வேளாண் வளர்ச்சிப் பணிகளில் பங்கேற்கும் வகையில் ஊராட்சி ஒன்றிய அளவில் பணியாற்றும் வேளாண் துறையைச் சேர்ந்த விரிவாக்க மற்றும் இடுபொருள் பிரிவு களின் பணியாளர்களை ஊராட்சி ஒன்றிய கட்டுப்பாட்டில் கொண்டு வர அரசு முடிவெடுத்துள்ளது.

[1989 ஏப்ரல் 4

தமிழ்நாடு வேளாண் மேம்பாட்டுத் திட்டம் :

வேளாண் உற்பத்தியையும் அதன் மூலம் விவாசாயிகள் அடையும் இலாபத்தையும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் கூட்டாலும் அவர்களின் ஆலோசனைகள் மற்றும் மேற்பார்வையாலும் உயர்த்திட தமிழ்நாடு வேளாண் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படும். தேர்ந்த விதை, உரம், பூச்சி மருந்துகள், களைக்கொல்லிகள் போன்ற இடு பொருட்களை பயன்படுத்த தேவையான வேளாண் உத்திகளை சிறு சிறு பகுதிகளில் மிகுந்த உத்வேகத்துடன் அறிமுகப் படுத்தப்படும். தற்போது பயிற்சி வழி தொடர்பு திட்டத்தில் உள்ள பணியாளர்களே அதற்கு பயன்படுத்தப்படுவர். சுமார் 1 கோடி ரூபாய் அளவில் விதை பெருக்கம், உபரி விதை இருப்பு வைத்தல் மற்றும் விநியோகித்தல் போன்றவற்றிற்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். இத்திட்டம் ரூ. 24.92 கோடி செலவில், விரிவாக்கப்பணியாளர்களுக்கும் மற்றும் விதை விநியோகத்திற்கும் என செலவிடப்படும்.

கிராம அளவில் விவசாயிகள் பங்கேற்க அடிமட்டத்தில் திட்டமிடுதல், கூட்டுறவு மற்றும் இதர நிறுவனங்கள் மூலம் அதிக அளவில் இடுபொருள் வழங்க இடுபொருள் சேவைகள் நிலைப்படுத்துதல் இடத்திற்கேற்ப தொழில் நுட்பங்களை உருவாக்கவும் புதிய வேளாண் உத்திகளை பண்ணை வயல் களில் ஆராய்ச்சி செய்யவும் தேவையான அளவு மண்டல அளவில் ஆராய்ச்சி பணிகள் மேற்கொள்ளுதல், இயற்கை வளங்களான, நிலம் மற்றும் நீர் இவைகளை பாதுகாக்க திட்டம் தீட்டுதல், நீர்பராமரிப்பு மற்றும் சாகுபடிக்கு உபயோக மற்ற நிலங்களை மேம்படுத்த திட்டமிடுதல் ஆகியவை இத் திட்டத்தின் சில முக்கிய அம்சங்களாகும்.

வேளாண் உற்பத்தியை பெருக்கும் நோக்குடன் காலத்தே தேவையான பயிர் கடன்களை கூட்டுறவு மற்றும் அரசுடமை யாக்கப்பட்ட வங்கிகள் மூலம் அளிக்க தேவையான அளவு வேளாண் விரிவாக்க சேவைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப் படும்.

வேளாண்மையில் பங்கேற்கும் பண்ணை மகளிருக்கு வேளாண் தொழில் நுட்பங்கள் சென்றடையும் வகையில் பண்ணை மகளிருக்கான விரிவாக்கம் மேம்படுத்துவதுடன் பயிற்சியும் அளிக்கப்படும். பண்ணை முன்னேற்ற பணிகளுடன் பண்ணையை சார்ந்த பணிகளான காடு வளர்ப்பு, தீவன மேம்பாடு கால்நடைகளுக்கு ஊட்டச் சத்து அளித்தல், மண் வளப் பராமரிப்பு போன்றவைகளையும் இணைக்கும் வகையில் விரிவாக்கம் செயல்படும்.

1989 ஏப்ரல் 4]

சிறுதளைப் பாத்திகள் :

புதிதாக அறிமுகப்படுத்தப்படும் மற்றும் அறிமுகப்படுத்தப் படவிருக்கும் நெல், சோளம், கம்பு ஆகிய பயிர்களின் இரகங்களை உழவர்களிடையே விரைவில் பரவிடச் செய்ய செயல் விளக்கங் கள் அமைக்க தேவையான விதைகள், சிறுதளைப் பைகளாக பை ஒன்றுக்கு ரூபாய் ஒன்று என்ற அடையாள விலையில் வழங்கப்படுகிறது. 1988–89 ஆம் ஆண்டு இலக்கான 54,500 நெல் மற்றும் 74,000 சிறு தானியங்களின் சிறுதளைப் பைகளில் டிசம்பர் மாத முடிய 53,639 நெல் மற்றும் 88,969 சிறு தானிய சிறுதளைப் பைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன அரசு நிதி யுதவிப்பதற்கு ஏற்ப இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப் படும்.

அதேபோல் சிறு மற்றும் குறு நில உழவர்களுக்கென ஒரு சிறுதளைப்பைக்கு அடையாள விலையாக ரூ. 5 என்ற விகிதத்தில் பயறுவகை விதைகள் கொண்ட சிறுதளைப் பைகள் வழங்கப் படுகின்றன. ஆண்டு இலக்கான 37,000 எண்களில் டிசம்பர் 1988 முடிய 29,917 பயிறு வகைகளின் சிறுதளைப் பைகள் வழங்கப்பட்டுள்ளன. 1989–90 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடரப்படும்.

சொட்டு நீர்ப் பாசனம் :

சுமார் 40 முதல் 70 சதம் வரை நீரை சேமிக்கும் திறன் கொண்ட சொட்டு நீர் பாசன முறை நீர் தட்டுபாடு உள்ள இடங் களுக்கு சாலச் சிறந்தது, கத்திரி, முள்ளங்கி, மிளகாய், பருத்தி, கரும்பு, வாழை, தென்னை, மா, திராட்சை போன்ற இடை வெளி அதிகம் உள்ள பயிர்களுக்கு இந்நீர்பாசன முறை மிகச் சிறந்தது.

1988–89 ஆம் ஆண்டிற்கு மத்திய அரசு உதவியுடன் சிறு/குறு ஆதி-திராவிடர்கள் பயன் பெறும் வகையில் ரூ. 120 இலட்சம் மான்ய ஒதுக்கீடுடன் கீழ்க்காணும் மான்ய விகிதத் துடன் செயல்படுத்தப்படுகிறது:—

1. குறு விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு ரூ. 2,000 வீதம் ஒரு நபருக்கு அதிக பட்சமாக ரூ. 4,500.

2. சிறு விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு ரூ. 1,500 வீதம் நபருக்கு அதிகபட்சமாக ரூ. 3,375.

3. ஆதி திராவிட/பழங்குடி விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ. 3,000 வீதம் அதிகபட்சம் ரூ. 6,750.

4. சமுதாய முறையில் மேற்கொள்ளப்படும் சொட்டு நீர் பாசனத்திற்கு 50 சதம்.

டிசம்பர் 1988 வரை 89 ஏக்கர் சொட்டு நீர்பாசன முறைக்கு கொண்டு வரப்பட்டு, 1.79 இலட்சம் ரூபாய் மான்யம் அளிக்கப்பட்டுள்ளது. 1989–90 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடரப்படும்.

உப்பு படிந்த நிலங்களை சீர்படுத்துதல்.

தென்னாற்காடு, புதுக்கோட்டை, மதுரை மற்றும் இராம நாதபுரம் மாவட்டங்களில் 520 எக்டர் உப்பு படிந்த நிலங்களை சீர்படுத்த இத்திட்டம் மூலம் தேவையான ஜிப்சம் 50 சதம் மான்ய விலையில் வழங்கப்படுகிறது. 1988 டிசம்பர் வரை 315 எக்டர் நிலம் சீர்திருத்தப்பட்டது. 1988–89 ஆம் ஆண்டில் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

பரந்த அளவு செயல் விளக்கங்கள்.

தற்போது கிடைக்கும் நெல் விளைச்சலை மேலும் எக்டருக்கு 750 கிலோ உயர்ந்த 20 ஏக்கர் பரப்பு கொண்ட 113 பரந்த அளவு செயல் விளக்கங்கள் பாசன பகுதிகளில் அமைக்கவும், மானாவாரி தொழில் நுட்பங்களை கையாள உழவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு மானாவாரி பகுதிகளில் 40 எக்டர் கொண்ட 85 பரந்த அளவு செயல் விளக்கங்கள் அமைக்கவும், இத்திட்டம் 1988–89 பகுதி-2 திட்டமாக ஒப்பளிக்கப்பட்டது இத்திட்டத்தின் மூலம் எக்டருக்கு 200 ரூபாய் என்ற அளவில். பாசன பகுதிகளிலும் எக்டருக்கு 100 ரூபாய் என்ற அளவில் மானாவாரி பகுதிகளிலும் மான்யம் இடுபொருட்களாக வழங்கப்படுகிறது. இத்திட்டம் 1989–90 ஆம் ஆண்டிலும் தொடர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

சுவீடன் நாட்டு நிதி உதவியியுடன் வேளாண் காடு வளர்ப்பு:

இவ்வாண்டு சுவீடன் அரசு நிதியுதவியுடன் சாகுபடிக்கு பயனற்ற நிலங்களை உபயோகிக்கவும் மக்களின் எரிபொருள் தீவனம் மரம் மற்றும் பழ தேவைகளைப் பூர்த்தி செய்யவும் பரந்த அளவில் மரம் நடும் திட்டம் புகுத்தப்பட்டுள்ளது. 1988–89 ஆம் ஆண்டில் திட்டமிட்ட 49 இலட்ச ரூபாய் செலவில் 50 இலட்சம் கன்றுகள் நடும் இலக்கில் டிசம்பர் 1988 வரை 13.50 இலட்சம் கன்றுகள் நடப்பட்டுள்ளன. இத்திட்டம் 5 ஆண்டு காலத்தில் தொடர்ந்து செயல்படுத்தப்படும். 1989–90ம் ஆண்டில் கீழ்க்கண்டவாறு தொடரப்படும்:—

	1989–90ம் ஆண்டு திட்டம்.
1. பழ மற்றும் எரிபொருள் மரக் கன்றுகள் விநியோகம்.	60 இலட்சம் எண்கள்.
2. கன்றுகளின் விலை	40 இலட்சம் ரூபாய்.
3. மரம் வளர்க்க ஊக்கத்தொகை...	100 இலட்சம் ரூபாய்.
4. மேம்பாட்டு திட்டங்கள்.. ..	14 இலட்சம் ரூபாய்.

மண் ஆய்வு :

வேளாண் குடிமக்களின் நிலங்களிலிருந்து மண் மாதிரிகள் எடுத்து அவைகளின் களர் உவர் தன்மை மற்றும் நிலத்தில் இருக்கும் பயிர் ஊட்டச் சத்துக்களின் அளவுகளை கண்டறிந்து, தேவைக்கேற்பவும் உழவர்களின் விருப்பத்திற்கேற்ப பயிரிட உள்ள பயிருக்கு தேவையான உர சிபாரிசு செய்யவும் பாசன நீரின் தன்மையையும் பாசனத்திற்கு உகந்ததா என்பதையும் அறியவும் மண் ஆய்வு கூடங்கள் இயங்குகின்றன. மேலும் இம் மண் ஆய்வுக் கூடங்கள் மண்வள ஆய்வு தளைகளை பண்ணை நிலங்களிலேயே அமைத்து ஆராய்ச்சி செய்கின்றன. தமிழகத்தில் 14 மண் ஆய்வுக் கூடங்களும் 15 நடமாடும் மண் ஆய்வு ஊர்திகளும் இயங்குகின்றன. அவைகளின் செயல்முறை இலக்குகளின் முன்னேற்றம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

(இலட்சம் மண் மாதிரிகள்)

தொடர் எண் மற்றும் திட்டம்.	1988–89 இலக்கு.	டிசம்பர் 1988 முடிய சாதனை.	1989–90 இலக்கு.
(1)	(2)	(3)	(4)
1 மண் ஆய்வுக் கூடம்..	7.08	5.02	7.08
2 நடமாடும் ஆய்வு கூடம் ..	2.70	2.00	2.70

1989–90 ஆம் ஆண்டில் மண் ஆய்வுக் கூடங்கள் மற்றும் மண் ஆய்வு ஊர்திகள் மண் ஆய்வுப் பணிகளுடன் நில ஆய்வுகளை மாவட்ட வாரியாக குறிப்பிடப்பட்ட மண் வகைகளில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மண் அளவை மற்றும் நில உபயோக அமைப்பு :

மண் அளவை மற்றும் நில உபயோக அமைப்பு மாநிலத்தில் உள்ள மண் வகைகளை அவற்றின் வளத்திற்கேற்ப வரிசைப் படுத்தும் பணியை மேற்கொண்டு வருகிறது. தமிழகத்தில் உள்ள 161 வட்டங்களிலும் ஆரம்ப கட்ட மண் அளவைப் பணிகள் முடிக்கப்பட்டு வரைப்படங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்த வரைப் படங்களின் அறிக்கை நாக்பூரில் உள்ள தேசிய மண் அளவை மற்றும் நில உபயோக திட்டத்தின் அமைப்புடன் கலந்தாலோசிக்கப்பட்டு இறுதி செய்யப்படும். இம்மண் அளவை மற்றும் நில உபயோக அமைப்பில் நான்கு அலகுகளின் 1988—89 ஆம் ஆண்டின் முன்னேற்றம் கீழே கொடுக்கப் பட்டுள்ளன:—

(இலட்சம் எக்டரில்)

	1988—89 இலக்கு.	டிசம்பர் 1988 முடிய சாதனை.	1989—90 இலக்கு.
நில அளவை. ..	11.20	10.00	11.20

செங்கல்பட்டு மாவட்டத்தில் களர் நிலங்களை சீரமைத்தல்.

களர் உவர் நிலங்களை செம்மை படுத்தும் முறைகளை செயல் விளக்கம் செய்து காட்ட இத்திட்டம் செங்கல்பட்டு மாவட்டத்தில் செயல் படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் 50 சத மான்ய விலையில் களர் தன்மையை சீரமைக்க தேவையான ஜிப்சம் வழங்கப்படுகிறது. 1988—89ம் ஆண்டில் 800 எக்டர் சீரமைக்க திட்டமிட்டதில் டிசம்பர் 1988 வரை 459 எக்டர் சீரமைக்கப்பட்டுள்ளன. இத்திட்டம் 1989—90-ம் ஆண்டில் தொடரப்படும்.

நுண்ணுயிர் கலவை தயாரித்தல்.

நவீன மண் வள பராமரிப்பு திட்டங்களில் இயற்கை உரங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. இயற்கை உரங்கள் சுற்றுப்புற சூழ்நிலைகளுக்கு கேடு விளைவிக்கும் தன்மையற்றவை என்ற காரணத்தால் அவற்றிற்கு உழவர்களிடையே மிகுந்த வரவேற்பு உள்ளது. பயறுவகைகள் மற்றும் பசுந்தாளுர பயிர்களுக்கு இடக்கூடிய ரைசோபியம் கலவைகளுக்கு உழவர்களிடையே தேவை ஏற்பட்டுள்ளது. கடந்த சில ஆண்டுகளில் நெல், சிறுதானியம், எண்ணெய் வித்துக்கள், காய்கறி வகைகள் போன்ற பயிர்களுக்கு இட அசோஸ்பைரில்லம், அசடோபேக்டர், பாஸ்போ பேக்டீரியம் போன்ற நுண்ணுயிர்

1989 ஏப்ரல் 4]

கலவைகள் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன. அசோஸ்பைரில்லத்திற்கு தொடர்ந்து தேவை இருந்து வருவதால் அதன் உற்பத்தி ஆண்டுதோறும் அதிகரிக்கப்பட்டு வருகிறது. இவ்வாண்டு டிசம்பர் மாதம் வரை 15.17 இலட்சம் நுண்ணுயிர் கலவை பொட்டலங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

1989–90ஆம் ஆண்டில் கடலூர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் இயங்கிவரும் நுண்ணுயிர் கலவை தயாரிக்கும் அளவு 20 இலட்சம் பொட்டலங்கள் என திட்டமிடப்பட்டுள்ளன.

நுண்ணூட்ட உரக் கலவை தயாரித்தல்.

பயிர்களுக்கு நுண்ணூட்ட உரத்தின் அவசியம் செயல் விளக்கங்கள் மூலம் உயர்த்தப்பட்டுள்ளது. வேளாண் குடிமக்களும் அதனை உணர்ந்து கொண்டுள்ளதால் நுண்ணூட்ட உரக் கலவையின் தேவை தொடர்ந்து பெருகி வருகின்றது. தரமான நுண்ணூட்ட உரக் கலவை தயாரித்து அளிக்க குடுமியான்மலையில் உள்ள நிலையம் இயங்கி வருகிறது. இத்திட்டம் இலாப நட்டமில்லாதவாறு செயல்படுத்தப்படுகிறது. இவ்வாண்டு இலக்கான 1,000 மெட்ரிக் டன்கள் என்ற உற்பத்தி அளவில் டிசம்பர் வரை 498 மெட்ரிக் டன்கள் நுண்ணூட்ட உரக் கலவை தயாரிக்கப்பட்டுள்ளது. 1989–90ஆம் ஆண்டில் 1,000 டன்கள் தயாரிக்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

தரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்கள்.

உழவர்களுக்கு விற்கப்படும் உரம் மற்றும் பூச்சி மருந்துகளின் தரத்தைக் கட்டுப்படுத்த உரக்கட்டுப்பாடு சட்டம் மற்றும் பூச்சி மருந்துச் சட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. அவைகளுக்கு உதவ 9 பூச்சிக்கொல்லி ஆய்வகங்களும் ,6 உரக்கட்டுப்பாடு ஆய்வகங்களும் இயங்குகின்றன. ஆண்டு தோறும் 16,200 பூச்சி மருந்து மாதிரிகள் மற்றும் 11,000 உர மாதிரிகள் ஆய்வு செய்யும் திறன் கொண்டவை. இவ் ஆய்வகங்கள் 1988 டிசம்பர் மாதம் வரை அவை 12,226 பூச்சி மருந்து மாதிரிகள் மற்றும் 8,225 உர மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. 1989–90 ஆம் ஆண்டில் அவை தங்களின் முழுத் திறனளவுக்குச் செயல்படும்.

மத்திய கட்டுப்பாட்டு ஆய்வகம்.

மண், உரம், நுண்ணுயிர் கலவை மற்றும் பூச்சிலிருந்து ஆய்வு கூடங்களை ஒழுங்குபடுத்தி கட்டுப்பாட்டில் வைக்கும் நோக்குடனும் மேற்படி ஆய்வுக்கூடங்களில் செய்த சோதனைகளிலும் தரத்தையும் பரிசோதித்து ஒழுங்குபடுத்தும் நோக்குடனும் குடுமியான் மலையில் மத்தியக்கட்டுப்பாடு ஆய்வகம் செயல்பட்டு வருகிறது. மேலும் இந்த மத்தியக் கட்டுப்பாடு ஆய்வகம் பலவேறு

களப் பணியாலர்ளகளுக்கு மண் சம்பந்தப்பட்ட விஞ்ஞானம், வேளாண்மை இரசாயனம் ஆகியவை சம்பந்தப்பட்டப் பயிற்சியும் கொடுக்கப்பட்டு வருகிறது. இந்தத் துறையில் இரசாயனப் பிரிவில் பணியாற்றும் தொழில் நுட்ப பணியாளர்களுக்கு ஆரம்பப்பயிற்சி மற்றும் மறு பயிற்சி ஆகியவைகள் இங்கு அளிக்கப்படுகிறது. மேற்கண்ட இத்திட்டத்தின் இதே பணி 1989–90ஆம் ஆண்டும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

இவ்வாறான நடவடிக்கைகளுடன் 1989–90ஆம் ஆண்டில் உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடையவும், விரும்பும் வகையில் கிராம வளர்ச்சி அமையவும் இத்துறை நம்பிக்கையுடன் நடைபோடும்.

எண்ணெய் வித்துக்கள் துறை :

எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியைப் பெருக்குவது மற்றும் சமையல் எண்ணெய் விநியோகத்தை அதிகரித்து, எண்ணெய் இறக்குமதியைக் குறைப்பது ஆகியவற்றை நோக்கமாகக்கொண்டு எண்ணெய் வித்து அபிவிருத்தித் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியில் இரண்டாவது இடத்தைப் பெற்று அதிக அளவில் எண்ணெய்வித்து உற்பத்தி செய்யும் மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாடு இருந்து வருகிறது.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 1989–90ஆம் ஆண்டில் எண்ணெய்வித்து சாகுபடிப்பரப்பினை 14.67 இலட்சம் எக்டரில் இருந்து 15.85 இலட்சம் எக்டருக்கு அதிகரித்திடவும் எண்ணெய்வித்து உற்பத்தியை 14 இலட்சம் டன்னிலிருந்து 18 இலட்சம் டன்னிற்கு அதிகரித்திடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

எண்ணெய் வித்துக்கள் உற்பத்தித் திறனை மேம்படுத்திடத் தேவையான புதிய தொழில் நுணுக்கங்களைக் கண்டுபிடித்தல் மற்றும் கையாளுதல் தொடர்பாக, மிகவும் உயர்மட்ட அளவில் விவாதிக்கப்பட்டு, களப்பணியாளர்களுக்குப் பயிற்சியளிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

1988–89ஆம் ஆண்டில், 15.61 இலட்சம் எக்டரில் எண்ணெய்வித்துக்கள் சாகுபடி செய்து 17.00 இலட்சம் டன் உற்பத்தி செய்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.

1989 ஏப்ரல் 4]

விதை உற்பத்தி மற்றும் விநியோகம்.

நிலக்கடலை சாகுபடியில் 5 சதம், எள் சாகுபடியில் 15 சதம் சூரியகாந்தி சாகுபடியில் 50 சதம், ஆமணக்கு சாகுபடியில் 30 சதம் பரப்பளவிற்குத் தேவையான விதைகளை உற்பத்தி செய்து, விவசாயிகளுக்கு விநியோகம் செய்வது இத்துறையின் விதை நிவியோகக் கொள்கை.

தென்னை அபிவிருத்தி :

1988–89 ஆம் ஆண்டில் 197 கோடி தேங்காய்கள் உற்பத்தியை அடைந்திட வேண்டும் என்ற குறிக்கோளுடன் 1.78 இலட்சம் எக்டர் பரப்பிலிருந்து 1.86 இலட்சம் எக்டர் பரப்புக்கு தென்னை சாகுபடிப் பரப்பை அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. 1988–89ஆம் ஆண்டு 18 இலட்சம் நெட்டை தென்னை கன்றுகளும், 7 இலட்சம் வீரிய ஒட்டு ரகத் தென்னங் கன்றுகளும் விநியோகிக்கப்படும்.

பூச்சி மற்றும் நோய்க்கொல்லி மருந்துகள், உயிரின உரம் நுண்ணூட்டச் சத்து, திருந்திய வேளாண் கருவிகள் பயிர் பாதுகாப்புக் கருவிகள் போன்ற இடுபொருட்களை உபயோகிப்பதற்கும், சான்றிதழ் பெற்ற விதைகள் உற்பத்தி செய்வதற்கும் பெருவிளக்கப் பண்ணையின் மூலமாகத் திருந்திய சாகுபடி முறைகளைப் பெரும் அளவில் விவசாயிகள் கடைபிடிக்கவும் விவசாயிகளுக்கு இத்திட்டங்களின் கீழ் நிதி உதவிட எல்லா மாவட்டங்களில் வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாளர்கள் இணையம்.

தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாளர்கள் இணையம் ஜனவரி திங்கள் முதல் நாள் 1981-ம் ஆண்டில் தேசிய பால்வள வாரியத்தின் எண்ணெய் வித்துக்கள் மற்றும் தாவர எண்ணெய் அபிவிருத்தித் திட்டங்கள் தமிழ்நாட்டில் அமுல்படுத்தும் இணைப்பு நிறுவனமாக பதிவு செய்யப்பட்டது.

குறிக்கோள் :

தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாளர்கள் இணையம், எண்ணெய் வித்து உற்பத்தியாளர்கள் சமூக பொருளாதார வளர்ச்சிக்கென்று தேசிய பால்வள வாரியத்தின் உதவியுடன் நிலக்கடலை உற்பத்தி பெருக்க கொள்முதல், பதப்படுத்துதல், விற்பனை ஆகியவைகளை ஒருங்கிணைத்து செயல் படுத்தி வருகிறது.

[1989 ஏப்ரல் 4

திட்ட முதலீடு :

இத்திட்டத்தின் மொத்த நிதி ஒதுக்கீடு ஏழு ஆண்டுகளுக்கு ரூ. 15.60 கோடி. அவற்றில் 8.40 கோடி (54 சத வீதம்) கடனாகவும் ரூ. 1.20 கோடி (46 சதவீதம்) காமன்யமாகவும் தேசிய பால்வள வாரியத்தினால் அளிக்கப்படுகிறது.

திட்டப் பகுதி :

இத்திட்டம் 20 வட்டங்களில் 335 எண்ணெய்வித்து கூட்டுறவு சங்கங்களை அமைத்து 82,000 உற்பத்தியாளர்களை உறுப்பினர் களாக்கி 92,000 எக்டேர் நிலக்கடலை சாகுபடி பரப்பை திட்ட வளர்ச்சி பணியில் கொண்டுவர உள்ளது.

சாதனை : (1989-90) 1—4—1988 முதல் 31—1—1989 வரை.

இதுவரை 332 எண்ணெய்வித்து கூட்டுறவு உற்பத்தி யாளர்கள் சங்கங்களில் 1988–89 ஆம் ஆண்டு 31—1—1989 முடிய 52,930 உறுப்பினர்களாக்கி 97,486 எக்டேர் நிலப்பரப்பு சாகுபடிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு செயல்பட்டு வருகிறது.

பதப்படுத்துதல் :

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்திற்கு (டான்பெட்) சொந்தமான இரண்டு எண்ணெய் பிழியும் ஆலைகளை (திருவண்ணாமலை மற்றும் விருத்தாசலம்) 1985 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய்வித்து உற்பத்தியாளர்கள் இணையம் (டான்காப்) அரசாங்கத்தின் மூலமாக ஏற்றுக்கொண்டன. இவை நாளொன்றுக்கு 166 டன் எண்ணெய் பிழியும் திறன் கொண்டது.

விற்பனை :

இத்துடன் சென்னையில் உள்ள கிண்டியில் எண்ணெய் நிரப்பு வதற்காக ஒரு கொள்கலன் நிரப்பு நிலையத்தினை (நாள் ஒன்றுக்கு 15 டன்கள் திட்டத்தின் ஒரு அங்கமாக ஏற்படுத்தப் பட்டுள்ளது. இந்த நிரப்பு நிலையம் 15 கிலோ (டின்கள்), 5 கிலோ (அடைப்பான்களில்) 1 கிலோ (பாலிதீன் பைகள், புட்டிகள்) 0.5 கிலோ (புட்டிகள், பாலிதீன் பைகள்) நுகர்வோருக் கென்று நிரப்பி விற்பனைக்கு அளிக்க வழி செய்துள்ளது. இணை யத்தின் இரண்டு எண்ணெய்களான 'பியுர் நெட் (பிழியப், பட்ட நிலக்கடலை எண்ணெய்) 'வின்னர் (சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய்) அங்காடிகளில் விற்பனைக்கு கொண்டு வந்துள்ளது.

1989 ஏப்ரல் 4]

தமிழ்நாட்டில் பாமாயிலின் எண்ணெய் பொது விநியோக முறை.

இந்திய அரசாங்கம் அளிக்கும் பாமாலின் எண்ணெயை தமிழ்நாட்டில் பொது விநியோகம் முறையில் விற்பனை செய்யப் பட்டு வருகிறது.

திட்ட விரிவாக்கம் :

தேசிய பால்வள வாரியத்தின் ஒப்புதலுடன், இத்திட்டம் எண்ணெய் வித்துக்கள் விளையும் சேலம், தர்மபுரி, கோயம் புத்தூர், பெரியார், திருச்சிராப்பள்ளி மற்றும் தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் மேலும் விரிவுபடுத்த உள்ளது.

தோட்டக் கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை :

தமிழகத்தில் பழங்கள், காய்கறிகள், கிழங்கு வகைகள் மற்றும் அன்னிய செலாவணியைத் தரும் மலைப்பயிர்கள், வாசனைத் திரவியங்கள், முந்திரி போன்றவற்றில் உற்பத்தியினை விதி கரிக்கும் நோக்கத்துடன் தோட்டக்கலைத் துறை பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. 1988–89ம் ஆண்டிற் கான உற்பத்தித் திட்டத்தில் 24.98 இலட்சம் மெட்ரிக் டன்கள் பழங்களும், 9.41 இலட்சம் மெட்ரிக் டன்கள் காய்கறிகளும், 20.27 இலட்சம் மெட்ரிக் டன்கள் கிழங்கு வகைகளும், 2.36 இலட்சம் மெட்ரிக் டன்கள் வாசனைத் திரவியங்களும், 1.14 இலட்சம் மெட்ரிக் டன்கள் மலைப் பயிர்களும், 0.44 இலட்சம் மெட்ரிக் டன்கள் மலர்களும் உற்பத்தி செய்ய திட்டமிடப் பட்டுள்ளது. 1988–89ம் ஆண்டில் மா பயிருக்கு பாதகமான சீதோஷ்ண நிலை நிலவியதால் 1988–89ம் ஆண்டில் மா உற்பத்தி குறைந்தாலும் அனைத்து இனங்களிலும் உற்பத்தி 1988–89-ம் ஆண்டில் குறிப்பிடப்பட்ட சாதனை அடையப்படும்.

தமிழ்நாட்டில் பல ஆண்டு பழப்பயிர், வாசனைத் திரவியப் பயிர்களின் பரப்பினை அதிகப்படுத்துவதுடன், தோட்டக்கலைக் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 54 பண்ணைகளில் தரமான கன்றுகளும் உற்பத்தி செய்யப்படுகின்றன. 1988–89 ஆம் ஆண்டில் இதுவரை 45.42 இலட்சம் பழக்கன்றுகளும், 83 இலட்சம் தேயிலைச் செடிகளும் உற்பத்தி செய்யப்பட்டு விநி யோகம் செய்யப்பட்டுள்ளது. 1989–90ம் ஆண்டில் இத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள பண்ணைகளில் 50 இலட்சம் மா, சப்போட்டா, கொ.வா, பலா, முந்திரி போன்ற பழக்கன்று களும், 135 இலட்சம் தேயிலைக் கன்றுகளும் உற்பத்தி செய்து விநியோகம் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

1989–90ம் ஆண்டில் 110 மெட்ரிக் டன் உயர் விளைச்சல் இரகங்களின் தரமான காய்கறி விதைகளை விநியோகம் செய்து காய்கறி பரப்பில் 80 சதவிகிதத்தில் உயர் ரக தரமான விதைகளை உபயோகப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

நகர்ப் புறங்களில் காய்கறி விதை உற்பத்தியினை அதிகரிக்கும் பொருட்டு ரூ. 3.00 இலட்சம் செலவில் 4,000 காய்கறி சிறுதளைகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. மேலும் 1988–89ம் ஆண்டில் தமிழகத்தில் 114 வட்டாரங்களில் ரூ. 4.73 இலட்சம் செலவில் பயறுவகை சிறுதளைத் திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சிறப்பு மற்றும் பின்தங்கிய பகுதி திட்டம் :

தமிழகத்தில் திருநெல்வேலி—கட்டபொம்மன், கன்னியாகுமரி காமராசர், மதுரை, அண்ணா, கோயம்புத்தூர் போன்ற மாவட்டங்களில் உள்ள மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் பழங்கள், வாசனைத் திரவியங்கள், மலைப்பயிர்கள் போன்றவற்றின் உற்பத்தியை அதிகரிக்கவும், பசுமைப் பரப்பினை அதிகரிக்கவும், இயற்கைச் சூழ்நிலையைப் பாதுகாக்கும் பொருட்டும், மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் நீலகிரி மாவட்டத்தில் ஒருங்கிணைந்த பயிர் நடவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் தேயிலையிலும், பழப்பயிர்களிலும் தலா 520 ஹெக்டேரும் 575 ஹெக்டர் தேயிலைத் தோட்டங்களில் இடைவெளி நடவும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பழங்குடியினர் உப திட்டம் :

தமிழகத்தில் சேலம், வடாற்காடு, தென்னாற்காடு, தர்மபுரி மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் உள்ள 13 யூனிட்களில் உள்ள பழங்குடியினரின் வாழ்கைத் தரத்தையும்தினை உயர்த்திடவும், பழங்குடியினர் நிலங்களில் பயிர் உற்பத்தியினை அதிகரிக்கவும் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது.

பயிற்சி வழித் தொடர்புத் திட்டம் :

நீலகிரி மாவட்டத்திலும், அண்ணா மாவட்டம் கொடைக்கானல் வட்டத்திலும் உற்பத்தியை அதிகப்படுத்தவும், அதிகமான மகசூல் மற்றும் வருவாய் மூலம் விவசாயிகள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தியும் தோட்டக் கலைத் துறையால் பயிற்சி வழித் தொடர்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

1989 ஏப்ரல் 4]

மத்திய அரசு உதவி பெறும் திட்டங்கள் :

தமிழ்நாட்டில் பயிரிடப்பட்டு வரும் முந்திரியின் உற்பத்தியை அதிகப்படுத்தும் நோக்குடன் புதிய விவசாய உத்திகளைக் கடைபிடிக்கச் செய்யவும், உயர் ரக முந்திரிக் கன்றுகளை வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இருபது அம்ச திட்டம் :

இத் துறையில் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களின் 3,250 பழங்குடியினர் குடும்பங்கள் பயனடைய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வேளாண்மை பொறியியல் துறை.

வேளாண்மைப் பொறியியல் துறை தமிழகத்திலுள்ள நிலம் மற்றும் நீர் வளங்களைப் பாதுகாத்தல், மேம்படுத்துதல் மற்றும் நிர்வகித்தல் ஆகிய பணிகளில் ஈடுபட்டுள்ளது. வறட்சி மற்றும் வெள்ளம் போன்ற இயற்கை சீற்றங்களின்போது, நிவாரணப் பணிகளையும் இத் துறை செயல்படுத்துகிறது. கிராமப் புறங்களிலே வேலை வாய்ப்பு அளித்திடும் வகையில் ஊரக நில மற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டம் போன்ற வேலை வாய்ப்பு திட்டங்களையும் இத் துறை செயல்படுத்துகிறது.

நிலம் மேம்பாடு :

இத்துறையிடம் 120 புல்டோசர்களும், 159 டிராக்டர்களும் உள்ளன. இவை மாவட்டங்களில் பல்வேறு முக்கிய நகரங்களில் நிறுத்தப்பட்டுள்ளன. இவை உழவர்களுக்கு வாடகை முறையில் வழங்கப்படுகிறது. சிறு மற்றும் குறு நில விவசாயிகள் மற்றும் இந்து ஆதி திராவிடர் விவசாயிகள் ஆகியோர்களுக்குச் சலுகைகள் வழங்கப்படுகின்றன.

சிறு பாசனம் :

உழவர்கள் குழாய்க் கிணறுகள் அமைப்பதற்கும் வடிமுனைக் குழாய்கள் அமைப்பதற்கும், வறண்ட கிணறுகளில் ஆழ்ப்படுத்தியோ அல்லது பக்கவாட்டில் துளையிட்டோ நீர் வளம் பெறுவதற்கும் வாடகை முறையில் துளைக் கருவிகளை இத்துறை வழங்கி வருகிறது. இதற்கென 157 விசைத் துளைக்கருவிகளும் 157 பாறை வெடி மற்றும் நீர்த்துளைக் கருவிகளும், 408 கைத் துளைக் கருவிகளும், 10 காற்றழுத்த கருவிகளும், 10 ரெஸிஸ்டிவிடி மீட்டர்களும், 2 மின்சார வாக்கில் கருவிகளும் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

கிணற்றுப் பாசனப் பகுதிகளில் நீர் நிர்வாகத்திற்கு உழவர்களுக்கு உதவிடவேண்டும் என்ற அவசியத்தை உணர்ந்து நடைபெறுகின்ற திட்டங்களை ஒருமுகப்படுத்தி உழவர்களின் தேவைகள் எதிர் கொள்ளப்படும். 1989-90 ஆம் ஆண்டில் 5,000 குழாய்க் கிணறுகள் அமைக்கவும், 3,650 வடிமுனைக் குழாய் அமைக்கவும், 5,500 கிணறுகளில் நீர்வளம் மீட்கவும் திட்டமிடப்படுகிறது.

மண் மற்றும் நீர் வளப் பாதுகாப்பு :

தமிழகத்தில் உள்ள நிலங்கள் மண் அரிப்பாலும், மேலும் நிலம் வளம் குன்றிப் போவதாலும் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளன. மண் மற்றும் நீர் வளப்பாதுகாப்பு பணிகள் மேற்கொள்ளப்படுவதால் இப்பாதிப்புகள் நிவர்த்தி செய்யப்படுகின்றன. மானாவாரி நிலங்கள் உற்பத்தித் திறனைப் பெருக்கிடும் வகையில் நில வளம் காத்தலும் நீர் வளம் பெருக்கவும் மிகவும் அவசியம் என்கிற கருத்து எல்லோருடைய கவனத்தையும் கவர்ந்துள்ளது.

தொலை உணர்வு திட்டங்கள் மூலம் மேற்கு மலைத் தொடர்ச்சி பகுதி நீர்பிடிப் பகுதிகளில் தகுதிநிலை அறிக்கை தயாரிக்கப்படுகிறது. மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புப் பணிகள் திட்டமிடுதலில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை இது குறிக்கின்றது. திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் தரங்குறைந்த நிலங்களை மீட்கும் பணியில் எரி சக்தி தரும் மரங்களை வளர்க்கும் புதிய திட்டம் ஒன்று இவ்வாண்டு 523 ஹெக்டேர் பரப்பில் சுமார் 52.30 இலட்ச ரூபாய் செலவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்புறுதித் திட்டம் போன்ற சிறப்புத் திட்டங்களும் இத் துறை மூலம் செயல்படுத்தப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் ஊற்று நீர்த் தேக்கங்கள் கட்டப்படுகின்றன. இத் தேக்கங்களை நிலத்தடி நீர் மீட்பிற்குத் துணையாகவும் வேலை வாய்ப்புப் பெருக்கம் மற்றும் பல்நோக்கு சமுதாய உடைமையாகவும் விளங்குகின்றன.

பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் :

தமிழ் நாட்டில் வேளாண்மைப் பொறியியல் துறையினரால் காவிரி, கீழ்பவானித் திட்டம், சாத்தனூர் நீர்த்தேக்கத் திட்டம் மற்றும் பரம்பிக்குளம் ஆழியாறு திட்டங்கள் மைய அரசின் உதவியாலும், பெரியார்-வைகைப் பாசனப் பகுதி உலக வங்கியின் உதவியாலும் பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பண்ணை மேம்பாட்டுப் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன இதனால் இப் பாசனப் பகுதிகளில் கிடைக்கும் நீரை உரிய நேரத்தில் சரிசமமாக பங்கீடு செய்ய உத்தரவாதம் அளிக்

1989 ஏப்ரல் 4]

கிறது. இத் திட்டத்தின் முக்கிய நோக்கம் உருவாக்கப்பட்ட பாசன நிலங்களை முழுமையாக பயன்படுத்துவதற்காக, இந்திய அரசு இத்திட்டத்தை மேலும் விரிவான அளவில் செயல்படுத்த திட்டங்கள் வகுக்கக்கப்பட்டுள்ளன.

விவசாயிகளின் பங்குடன் கூடிய சுழற்சி முறைப் பாசனத் திட்டம் அறிமுகப்படுத்துதல் காவிரி, கீழ்பவானி மற்றும் பெரியார் வைகை பாசனப் பகுதிகளில் பரிசோதிக்கப்பட்டது.

விவசாயிகள் குழுவின் இந்த வினை முறைத் திறம் கீழ்பவானித் திட்டத்தின் கீழான தீண்டல் பிரிவு வாய்க்காலில் குறிப்பிடத் தகுந்த வெற்றியைத் தந்திருக்கிறது. இம்முறை பிற பாசனக் கோட்டங்களிலும் பின்பற்றப்பட்டு வருகிறது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

செயல் இலக்கு : பரப்பு : ஹெக்டேரில்

வரிசை எண்.	பாசனப்பகுதி பணித் திட்டம்.	1989-90 ஆம் ஆண்டிற்கான திட்டம்.
(1)	(2)	(3)
	மத்திய உதவியுடன் கூடிய பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்.	
	பண்ணை மேம்பாட்டுப் பணிகள்--	
1	காவிரிப் பாசனப் பகுதி	21,600
2.	கீழ்பவானி பாசனப்பகுதி	10,000
3.	பரம்பிக்குளம்--ஆழியாறு பாசனப்பகுதி	11,000
4	சாத்தனூர் பாசனப்பகுதி ..	3.300
	மொத்தம் ..	45,900
	சுழற்சி முறைப் பாசனத் திட்டம் (வாரப்பந்தி) :	
1.	காவிரிப் பாசனப்பகுதி	1,000
2.	கீழ்பவானிப் பாசனப்பகுதி ..	2.000
3.	பரம்பிக்குளம் ஆழியாறு ..	2,000
4.	பெரியார்-வைகை பாசன்ப்பகுதி	1,000
	மொத்தம் ..	6,000

[1989 ஏப்ரல் 4

வெளி உதவித் திட்டம்—

பண்ணை மேம்பாட்டுப் பணிகள் :

1. பெரியார்-வைகை பாசனப்பகுதி	..	7,000
2. கதிரடிக்கும் களம் கட்டுதல்		100

நதிப் பள்ளத்தாக்குத் திட்டம் :

நதிப்பள்ளத்தாக்குத் திட்டத்தின் நீர் பிடிப்புப் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்வதன் மூலம், நீர்த் தேக்கங்களில் ஏற்படும் வண்டல் மண் படிவை தடுக்கும் நோக்கத்துடன் '' நதிப் பள்ளத்தாக்குத் திட்டம் '' என்ற பெயருடன் இத்திட்டத்தை இந்திய அரசு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் துவக்கியது. தமிழ் நாட்டில் குந்தா மற்றும் கீழ்பவானி நீர் பிடிப்புப் பகுதிகளில் இத்திட்டமானது செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் மரம் வளர்த்தல் முதலான உயிரியல் முறைகள் விரிவுப்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும் மரம், வளர்ப்பு திட்டத்தின் கீழ் நடப்பட்ட நாற்றுக்களை பராமரிக்கும் பணியும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

விதைச் சான்றளிப்புத் துறை.

விதைச் சான்றளிப்புத் துறை விதைச் சட்டம், 1966 மற்றும் விதை விதிகள் 1968-ன் அடிப்படையில் விதைச் சான்றளிப்புப் பணிகளை செயலாக்கி வருகின்றன. அதிக மகசூல் பெறுவதற்கு தரமான நல்விதைகளின் அவசியத்தை நமது வேளாண் பெரு மக்கள் உணர்ந்துள்ளதால் நமது மாநிலத்தில் தரமான சான்று விதைகளின் தேவை சீராக அதிகரித்து வருகிறது. வேளாண் பெரு மக்களுக்குத் தரமான விதைகள் உற்பத்தி மற்றும் விநியோகம் செய்யும் சீரிய பணியில் இத்துறை தரக்கட்டுப்பாட்டு ஆய்வாளராக பணிபுரிகிறது.

1988-89-ம் ஆண்டில் (ஜனவரி 1989 முடிய) விதைச் சான்றளிப்பின்கீழ் 20,735 ஹெக்டேர் பரப்பில் விதைப் பண்ணைகள் பதிவு செய்யப்பட்டு, 15,685 மெட்ரிக் டன் விதைகளுக்குச் சான்றளிப்பு செய்யப்பட்டுள்ளது. 1989-90ம் ஆண்டில் 24,000 ஹெக்டேர் பரப்பில் விதைப் பண்ணைகள் சான்றளிப்பிற்காக பதிவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

1989 ஏப்ரல் 4]

பயிற்சி :

விதைச் சான்று துறையினுடைய களப்பணியாளர்கள் பெறும் பயிற்சி அவர்களுக்கு விதை உற்பத்தி நுணுக்கங்களுக்கும் சான்று அளிப்பு நடைமுறைகளுக்கும் ஊக்கம் தருகிறது. விதைச் சான்றளிப்புத் துறை அலுவலர்களால், சான்று விதை உற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் சகோதரத் துறை அலுவலர்கள், தனிப்பட்ட விதை உற்பத்தியாளர் மற்றும் விதை விற்பனையாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. விதைச் சான்று பயிற்சித் திட்டத்தின் மூலம் 1988-89-ம் ஆண்டில் (ஜனவரி 1989 முடிய) 8,943 நபர்களுக்கு விதைச் சான்று சம்பந்தமான பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மேலும், 1989-90-ல் 9,000 நபர்களுக்கு விதைச் சான்றுப் பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

விதை ஆய்வு :

1988-89ம் ஆண்டில் (ஜனவரி 1989 முடிய) விதை விற்பனை நிலையங்களில் 6,592 விதை மாதிரிகள் எடுக்கப்பட்டு, விதைப் பகுப்பாய்வு செய்யப்பட்டது. இது தவிர;, 6,608 விதை விற்பனை நிலையங்கள் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. 1989-90ம் ஆண்டில், 8,000 விதை மாதிரிகள் எடுக்கவும், 8,000 விதை விற்பனை நிலையங்கள் ஆய்வு செய்யவும், விதை ஆய்வுத் திட்டத்தின் மூலம் திட்டமிடப்பட்டுள்ளது.

விதைப் பரிசோதனை :

விதைச் சான்றளிப்புத் துறையின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட 3 விதைப் பரிசோதனை நிலயங்கள் முறையே கோயம்புத்தூர், மதுரை மற்றும் குடுமியான்மலை ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன. 1988-89-ம் ஆண்டில் (ஜனவரி 1989 முடிய) 21,393 விதை மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளது.

27,500 விதை மாதிரிகள் பகுப்பாய்வுகள் செய்யவும், விதைப் பரிசோதனையை விரைவுபடுத்தி சேவையை பெருக்கிடும் வகையில் ரூ. 49.13 இலட்சம் ஒதுக்கீட்டில் திருநெல்வேலி, தஞ்சாவூர், சேலம் மாவட்டங்களில் 3 விதைப் பரிசோதனை நிலையங்கள் அமைத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

வீரிய ஒட்டு விதையின் பயிர் இனத்தூய்மை அறியும் கிறப்பு சோதனைகளை ஆய்வு செய்திடும் வகையில் கோயம்புத்தூரில் ரூ. 5 இலட்சம் செலவில் கண்ணாடி ஆய்வுக்கூடம் கட்டி முடிக்கப் பெற்று ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றது.

1988-89-ல் (ஜனவரி 1989 முடிய) 219 வீரிய ஒட்டுப்பருத்தி மற்றும் அதன் தாயாதி ரகங்கள் இனத் தூய்மை பரிசோதனை செய்யப்பட்டது. கண்ணம்பாளையம் அரசு விதைப் பண்ணையிலும் ஜனவரி 1989 முடிய 246 வீரிய பருத்தி இனத் தூய்மை பரிசோதனை செய்து முடிக்கப்பட்டுள்ளது.

[1989 ஏப்ரல் 4

ஒட்டு ரகங்களுக்கு மட்டுமல்லாமல் ஆதார நிலை 1 மற்றும் 2 ரக விதைகளுக்கு இனத் தூய்மை பரிசோதனையை படிப்படியாக மேற்கொள்ள திட்டமிடப்பட்டிருக்கிறது.

வேளாண்மை விற்பனைத்துறை.

வேளாண்மை விற்பனைத்துறை கீழ்க்காணும் திட்டங்களை செயல்படுத்தி இயங்கி வருகிறது :—

(1) வேளாண்மை விளைபொருட்களின் விற்பனையை விவசாயிகள் பயன்பெறும் வண்ணம் ஒழுங்குபடுத்தி விற்பனைக் கூடங்களை அமைத்து அதன் வழியாக செயல்படுத்துதல்.

(2) நுகர்வோர் நலன் காக்க வேளாண்மை. கால்நடை மற்றும் வனப் பொருட்களை தரம் பிரித்து விநியோகிக்க வகை செய்தல்.

(3) உழவர் பெருமக்கள் தங்கள் விளைபொருட்களை உரிய விலைக்கு விற்க வசதியாக ‘‘ வணிகமுறை ’’ தரம் பிரித்தல்.

(4) விற்பனைத்துறை சம்மந்தமாக பணியாளர்களுக்குப் பயிற்சி அளித்தல்.

(5) பருத்தி சான்றுரையும் சட்ட அமுலும்.

(6) உழவர்களின் விளைபொருள் விற்பனையில் காணும் பிரச்சினைகளை தீர்க்க வேண்டி சர்வேக்கள் எடுத்தல்.

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் :

வேளாண் பெருமக்களின் விளைபொருட்களுக்கு நல்ல விலைப்பெற்றுதரும் நோக்கத்துடன் தமிழகத்தில் 14 விற்பனைக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அவற்றின் கட்டுப்பாட்டில் 272 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் செயல்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் அடிப்படையில் இதுவரை 137 விற்பனைக் கூடங்களுக்கு சொந்தமாக நிலம் வாங்கப்பட்டு 107 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் சொந்த கட்டிடங்களில் இயங்கி வருகின்றன. 1988–89 ஆம் ஆண்டு (டிசம்பர் 1988 மாதம்) முடிய 3.22 லட்சம் டன் வேளாண்மை விளைபொருட்கள் விற்பனைக் கூடங்கள் வழியாக விற்பனை செய்யப்பட்டு இதற்காக வியாபாரிகளிடம் கட்டணம் மூலம் ரூ. 392.42 லட்சம் வருவாய் வந்துள்ளது. விவசாயிகளிடமிருந்து ஆண்டு தோறும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு வரும் விளைபொருட்களின் அளவை மென்மேலும் பெருக்கவும், புதிய பொருட்களை சேர்க்கவும் தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

1989 ஏப்ரல் 4]

மத்திய அரசு உதவியுடன் பெரிய நகரங்களில் காய்கறி மற்றும் பழங்கள் விற்பனை செய்ய ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களை நிறுவி அவற்றில் குளிர்சாதன சேமிப்பு வசதி, குடி நீர், மின்சாரம் மற்றும் விற்பனை கூட வசதிகள் செய்யவும் திட்டமிடப்படுகிறது.

விவசாயிகள் தங்கள் விளைபொருட்களுக்கு தக்க விலை கிடைக்காதபோது சேமித்து பின்னர் விற்றுப் பயனடைய கிராமிய சேமிப்பு கிடங்குகள் மைய அரசு உதவியுடன் 89 இடங்களில் கட்டப்பட்டுள்ளன. 1988–89 ஆம் ஆண்டில் மேலும் ஒன்பது இடங்களில் உரக்கிடங்குகள் கட்டும் வேலை எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

(2) அக்மார்க் தரம் பிரிப்பு :

''அக்மார்க்'' முறை தரம் பிரிப்பிற்காக தமிழகத்தில் 35 அக்மார்க் ஆய்வகங்களும், அவற்றின் தரம் பிரிப்புக்களை சரி பார்க்க ஒரு முதன்மை ஆய்வகம் திருச்சியை தலைமையிடமாகக் கொண்டும் செயலாற்றி வருகின்றன.

அக்மார்க் ஆய்வகங்களின் வழியாக மத்திய கட்டுப்பாட்டிற்கு உட்பட்டபொருட்களாகிய உணவு எண்ணெய்கள், நெய், தேன், மசாலா பொடி வகைகள் விஞ்ஞான ரீதியாக இரசாயன முறையில் அக்மார்க் தரம் பிரிப்பு செய்து, அக்மார்க் முத்திரைச் சீட்டுக்களை தரம் பிரிப்பு செய்யப்பட்ட பண்டங்களின் மீது பொருத்தப்படுகின்றன. இவ்வாறு தரத்திற்கு உத்திரவாதமுள்ள பண்டங்கள் 1988–89 ஆம் ஆண்டில் (டிசம்பர் 1988 மாதம் முடிய) 1,36,573 குவிண்டால் தரம் பிரிக்கப்பட்டு ரூ. 7.53 லட்சம் கட்டணமாக வசூலிக்கப்பட்டுள்ளது.

அதே போன்று தற்பொழுது தமிழகத்தில் அரிசி, பருப்பு, உருளைக்கிழங்கு, கரும்பு, வெல்லம், மஞ்சள், பாக்கு போன்ற மத்தியக் கட்டுப்பாடற்ற பொருட்கள் பௌதீக முறையில் வேளாண்மை அலுவலர் (விற்பனை) அவர்களால் அக்மார்க் தரம் பிரிப்பு செய்து நுகர்வோருக்கு தரமான பொருட்கள் கிடைக்க வழிவகை செய்கின்றன. டிசம்பர் 1988 மாதம் முடிய 2,47,812 குவிண்டால் அளவு பொருட்கள் அக்மார்க் தரம் பிரிக்கப்பட்டுள்ளன.

எதிர்காலத்தில் மைய அரசு மேலும் அத்தியாவசிய பண்டங்களின் பரிசோதனைகளை தீவிரப்படுத்த உள்ளதால் இத்தகைய ஆய்வுக்கூடங்களின் பணி விரிவாக்கப்படும். அதிகமாக வியாபாரிகள் ''அக்மார்க்'' விற்பனையில் பங்குபெற வழி செய்யப் படும்.

தமிழகத்தில் உரிய வசதிகளுடன் இயங்க வசதியாக ஆய்வுக் கூடங்களுக்கு சொந்த கட்டிடங்கள் கட்டும் திட்டத்தில் இது வரை 11 இடங்களில் கட்டப்பட்டுள்ளன.

(3) வணிகமுறை தரம் பிரிப்பு :

வணிகமுறை தரம் பிரிப்பு மையங்கள் 102 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் அமைக்கப்பட்டு, வேளாண்மை விளை பொருட்களை இலவசமாக நவீன விஞ்ஞான கருவிகளின் வாயிலாக தரம் பிரிப்பு செய்யப்படுகின்றன. இதனால் வேளாண் பெருமக்களுக்கு தரத்திற்கேற்ப போட்டி விலைகளின் பேரில் அதிக வருவாய் பெறுகின்றனர். 1988—89 ஆம் ஆண்டில் (டிசம்பர் 1988 மாதம் முடிய) வேளாண் விளைபொருட்கள் 33.3 இலட்சம் குவிண்டால் வணிகமுறை தரம் பிரிப்பு செய்யப் பட்டுள்ளன.

தமிழகத்தில் பருத்தி அதிக அளவில் வரத்து உள்ள 11 மையங்களில் நவீன விஞ்ஞான கருவிகளைக் கொண்டு பருத்தி தரம் பிரிப்பு செய்து உழவர் பெருமக்களுக்கு தரத்திற்கேற்ப நல்ல விலையினை பெற இயங்கி வருகின்றன. டிசம்பர் 1988 மாதம் முடிய 1,64,893 குவிண்டால் பருத்தி தரம் பிரிக் கப்பட்டுள்ளது.

பருத்தி தரம் பிரிப்புப் போன்ற புஞ்சை புளியம்பட்டி என்னும் இடத்தில் புகையிலை தரம் பிரிக்கப்பட்டு தரத்திற் கேற்ப நல்ல விலையினை விவசாயிகள் பெற ஒரு மையம் வருகிறது. டிசம்பர் 1988 மாதம் வரை 10,400 குவிண்டால் புகையிலை தரம் பிரிக்கப்பட்டுள்ளது.

(4) பயிற்சி அளித்தல் :

வேளாண்மை விற்பனைத்துறை இயக்ககத்தால் செயல் படும் பயிற்சி மையத்தில் ஆண்டு தோறும் 60 பயிற்சியாளர் கள் ''அக்மார்க்'' வணிகமுறை தரம் பிரிப்பு, பருத்தி தரம் பிரிப்பு மற்றும் புகையிலை தரம் பிரிப்புத் திட்டங்களில் உள்ள தொழில் நுட்பங்களில் 3 மாத கால பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. வேளாண்மை உதவி அலுவலர்கள் மற்றும் ஒழுங்குமுறை விற்பனைக்கூட மேற்பார்வையாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. 1988—89 ஆம் ஆண்டு (டிசம்பர் 1988 மாதம் முடிய) 750 பயிற்சியாளர்கள் இப்பயிற்சியினை பெற்றுள்ளனர்.

(5) பருத்தி சான்றுரையும், சட்ட அமலும் :

பருத்தி விதைகளில் சுத்தத் தன்மையைக் காக்கவும், பருத்தி ''அரவை மற்றும் பண்படுத்தும்'' தொழிற்கூடங்களில் பருத்தி விதை மற்றும் பஞ்சில் கலப்பினங்கள் ஏற்படுவதை தடுக்கவும், தமிழகத்திற்கு தேவைப்படும் பருத்தியின் அளவை ஆய்ந்து

1989 ஏப்ரல் 4]

பிற மாநிலங்களிலிருந்து தருவிக்கப்படும் பருத்தி மற்றும் பஞ்சின் அளவினை கண்காணித்தும் செயல்படுத்துகிறது. இத்தகைய செயல்பாட்டுக்கு 1988–89 ஆம் ஆண்டில் (டிசம்பர் 1988 முடிய) 46,263 உரிமங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. 570 ஏக்கர் பருத்தி பயிர் சான்றுரை பதிவு செய்யப்பட்டுள்ளது. இவற்றுக்காக ரூ. 3.31 இலட்சம் கட்டணமாக கிடைக்கப்பெற்றுள்ளது.

மாநில வேளாண்மை விளை பொருள் விற்பனை வாரியம் :

இவ்வாரியம் பல்வேறு மாவட்ட விற்பனைக் குழுக்களின் பணிகளை இணைத்து விவசாயிகளுக்கு விற்பனையில் உதவி புரிய சிறந்த வழிமுறைகளை வகுத்து வருகிறது. மேலும் விற்பனைக் குழுக்களின் பிரச்சினைகளை அரசுக்கு விளக்கி சீரிய முறையில் செயல்பட்டு வருகிறது.

இவ்வாரியத்தில் ஒரு கட்டுமானப் பிரிவு இயங்கி விற்பனைக் குழுக்கள் மற்றும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் புதிய விற்பனைக்கூட கட்டிடங்கள், கிட்டங்கிகள், உலர் களங்கள் மற்றும் அங்கு கூடும் விவசாயிகளின் வசதிக்கான கட்டிடங்கள் கட்டுதல் ஆகிய பணிகளை மேற்கொள்ளுகின்றன.

கரும்பு சாலை அபிவிருத்தி திட்டம் :

கரும்பு சாலை அபிவிருத்தி திட்டம் கரும்பு செஸ் நிதியிலிருந்து வரும் பணத்திலிருந்து செயலாக்கப்பட்டு வருகிறது. தற்போது கரும்பு செஸ் ரூ. 5 வீதம் வசூலிக்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் இத்திட்டத்தின் கீழ் போடப்படும் புதிய சாலைகள் அரசால் தேர்வு செய்யப்படுகிறது. பொதுவாக புதிய சாலைகள் போடுவதற்கு ரூ. 150 இலட்சத்திற்கு ஒவ்வொரு ஆண்டும் ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட அரசு அறிவுரையின்படி மொத்தம் ரூ. 450 இலட்சம் பெறுமான ஒப்பளிக்கப்பட்ட பணிகள் ஆண்டுதோறும் கைவசம் இருக்கும். இது தவிர கரும்பு சாலை அபிவிருத்தி திட்ட கண்காணிப்பு பொறியாளருக்கு, சாலைகளை பராமரிக்க ஆண்டுதோறும் ரூ. 50 இலட்சம் (திட்டங்கள் தலைப்பின் கீழ் அல்லாத நிதியாக) அரசு ஒதுக்கீடு செய்கிறது.

1981 ஆம் ஆண்டில் தனியார் சர்க்கரை ஆலைகள் கரும்பு செஸ் வசூலிப்பதை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில், வழக்கு தொடர்ந்தன. உயர்நீதி மன்றமும் செலுத்த வேண்டிய தொகையில் 25 சதவீதத்திற்கு வங்கி உறுதியின் சான்று அளிக்க வேண்டும் என்னும் அடிப்படையின் கீழ் இடைத் காலத் தடை உத்திரவினை பிறப்பித்துள்ளனர். கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகள், தனியார் துறை சர்க்கரை ஆலைகளுடன் சேராமல் அவர்கள் செலுத்த வேண்டிய கரும்பு செஸ் நிதியினை தவறாமல் செலுத்தி வருகிறார்கள்.

[1989 ஏப்ரல் 4

நகர்புற கலவை உரத்திட்டம்.

தற்போது 98 நகராட்சிகள் மற்றும் 8 நகரியங்கள், நகராட்சிகள் நிர்வாக இயக்குநர் கட்டுப்பாட்டின்கீழ் உள்ளது. நடப்பு ஆண்டில் 2,56,550 மெட்ரிக் டன் கலவை உரம் தயாரிக்கும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நகராட்சிகள் தயாரிக்கும் கலவை எருவில் உற்பத்தித் திறனை நிர்ணயிக்க ஒவ்வொரு நகராட்சியின் கலவை எரு உற்பத்தி அதன் மக்கள் தொகையில் 3 சதவீதம் அளவில் கணக்கிடப்பட்டுள்ளது.

கழிவு நீர்ப்பயன் திட்டம் :

23 நகராட்சிகள் தற்போது கழிவு நீர்பண்ணைகளை நிர்வகித்து வருகின்றன. கழிவுநீர் பண்ணைகளை முறைப்படி பராமரிக்கவும் பசும்புல் மற்றும் சில பயனுள்ள பயிர்களை பயிர் செய்யவும் தொழில் நுட்ப ஆலோசனைகள் வழங்கப் படுகின்றன.

வறட்சிக்குப்பட்ட பகுதிகள் திட்டம் :

வறட்சிக்குட்பட்ட பகுதிகள் திட்டம் மத்திய அரசு தொடங்கிய சிறப்புத் திட்டமாகும். பல அபிவிருத்தி பணிகள் மூலம் நீண்ட காலமாக வறட்சி தாக்குதலுக்கு உட்பட்ட பகுதிகளை மேம்படுத்துவதும் வறட்சித் தாக்குதலினால் இப்பகுதிகளில் ஏற்படும் கடுமையை ஓரளவு குறைப்பதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம் 657 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு ஆகும் செலவினை மத்திய அரசும் மாநில அரசும் சம அளவில் ஏற்கும். இத்திட்டம் நம் மாநிலத்தில் 43 வட்டாரங்களில் பின்வருமாறு செயல்படுத்தப்படுகிறது:—

	மாவட்டங்கள் பெயர்.	வறட்சிக்குட்பட்ட பகுதிகள் அமல் படுத்தும் வட்டாரங்களின் எண்ணிக்கை.
1.	தர்மபுரி	12
2.	இராமநாதபுரம்	7
3.	பசும்பொன் முத்துராமலிங்கம்	6
4.	காமராசர்	5
5.	புதுக்கோட்டை	4
6.	வ. உ. சிதம்பரனார்	8
7.	திருநெல்வேலி கட்டபொம்மன்	1
		43

1989–90 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு ரூ. 657.00 இலட்சம் ஆகும்.

1989 ஏப்ரல் 4]

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்.

வேளாண்மையை நவீனமயமாக்கவும், வேளாண்மை உற்பத்திப் பொருட்களை பதப்படுத்தவும், தொழிற்சாலைகளை தானே நிறுவி நடத்துவதில் தமிழ்நாடு வேளாண் தொழில்கள் கழகம் ஈடுபட்டுள்ளது. விவசாயிகளுக்கு நியாயமான விலையில் உரங்கள், பூச்சி மருந்துகள், உதிரி பாகங்கள், டயர்கள், டியூப்கள், முதலானவற்றை விற்கும் முகவர்களாக இக்கழகம் செயல்படுகிறது. இவ்வாண்டு (1988-89) பல்வேறு நிறுவனங்கள் தயாரித்த 16,500 மெட்ரிக் டன் உரங்களையும் ரூ. 285 இலட்சம் பெறுமான உதிரி பாகங்கள் மற்றும் கருவிகளையும், 70 டிராக்டர்களையும், 150 பவர் டில்லர்களையும் இக்கழகம் விற்க உள்ளது. இக்கழகத்தில் பூச்சிக் கொல்லி மருந்து தயாரிக்கும் பிரிவு 750 மெட்ரிக் டன் மருந்துகளையும், 52,800 லிட்டர் திரவ மருந்துகளையும் தயாரித்து விற்பனை செய்ய உள்ளது. மீன்பிடி வலை தயாரிக்கும் ஆலை அதன் குறியீடான 75 மெட்ரிக் டன் மீன்பிடி வலைகளை தயாரிக்க உள்ளது. கழகத்தின் மற்றொரு நடவடிக்கையான கால்நடை மற்றும் கோழி வளர்ப்புத் தீவனம் தயாரிக்கத் தேவையான சத்துணவு தயாரிப்பதில் நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது. குறிப்பாக இக்கழகம் சூரியகாந்தி விதைகளிலிருந்து தயாரிக்கும் எண்ணெய்க்கு இன்றியமையாத தேவை ஏற்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் 7,000 மெட்ரிக் டன் சூரியகாந்தி விதைகளை பதப்படுத்தும் நாமக்கல் மற்றும் பொனாக்குளத்தில் அமைந்துள்ள எண்ணெய் கரைத்து பிரித்தெடுக்கும் ஆலைகள் 7,600 மெட்ரிக் டன் அரிசித் தவிட்டிலிருந்து எண்ணெய் எடுக்கும்.

2. 1989-90 ஆம் ஆண்டில் 40,000 மெட்ரிக் டன் உரங்களையும், 150 டிராக்டர்களையும், 250 பவர் டில்லர்களையும் விற்கவும், 3,350 மெட்ரிக் டன்கள் பூச்சி மருந்துகளையும், ஒரு இலட்சம் திரவ பூச்சி மருந்துகளையும், 75 மெட்ரிக் டன் மீன்பிடி வலைகளையும், 8,000 மெட்ரிக் டன் சூரியகாந்தி விதைகளையும், 7,900 டன் அரிசித் தவிட்டையும், பதப்படுத்தவும் திட்டமிட்டுள்ளது. இக்கழகம் தமிழ்நாட்டில் மாநில அளவில் உணவு பதப்படுத்தும் துறைகளை ஒருங்கிணைத்து ஊக்குவிக்கும் முக்கிய முகவரமைப்பாக செயல்படவிருக்கின்றது.

தமிழ்நாடு வேளாண்மை பொறியியல் மற்றும் பணிக் கூட்டுறவு இணையம்.

மாவட்ட மற்றும் வட்டார அளவில் வேளாண்மைப் பொறியியல் மற்றும் சேவைக் கூட்டுறவு மையங்களை நிறுவி அதன் மூலம் கிராமப் புற விவசாயிகளுக்குச் செறிவான சேவைகளைச் செய்வதே இவ்விணையத்தின் முக்கிய குறிக்கோளாகும் கிராமப்புற விவசாயிகளுக்கு விவசாய இயந்திரங் மற்றும் துணைக் கருவிகள் ஆகியவற்றை வாடகைக்கு விடு பணி

விவசாய இயந்திரங்களைச் செப்பனிடும் பணி, விதைகள் உரம், பூச்சிக் கொல்லிகள், விவசாயத் துளைக் கருவிகள், பயிர் பாதுகாப்பு தளவாடங்கள் போன்ற விவசாய இடுபொருட் களை வழங்குதல் போன்ற இன்னபிற சேவைகளைச் செய்து வருகின்றன.

2. பிற திட்டங்கள். :

மேற்கூறிய வாலாய திட்டத்தைத் தவிர, விவசாய கடன்தாரர்களுக்கு, டீசல் இயந்திர பம்ப்செட் மற்றும் மின் ஒருமுனைப்படுத்தும் திட்டம் மற்றும் விவசாயிகளுக்கு தானிய சேமிப்புக் குதிர்களைத் தயாரித்து 25 சதவீத மானியத்தின் வழங்கும் திட்டமாகிய தானிய சேமிப்பு இயக்கத் திட்டம் ஆகிய அரசுத் திட்டங்களை இவ்விணையம் செயல்படுத்தி வருகின்றது.

3. மத்திய அரசின் சார்புத் திட்டத்தின் கீழ் விவசாயிகள் வேளாண் சேவை மையங்களை நிறுவுதல்.

இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாவன :

1. விவசாயச் சேவை மையங்களை நிறுவி 50 சதவீதம் மானியத்தில் வாடகைப் பணி இயந்திரங்களை அமைத்தல்.

2. மேம்படுத்தப்பட்ட வேளாண் கருவிகளையும் மற்றும் கைக் கருவிகளையும் கொண்டு செயல் முறை விளக்கங்கள் நடத்துதல் ; மற்றும்

3. மேம்படுத்தப்பட்ட விவசாயக் கருவிகளையும், கைக் கருவிகளையும் பிரபலப்படுத்துவதற்காக, 50 சதவீதம் மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்குதல்.

இத்திட்டத்தின் கீழ் 104 விவசாயிகள் வேளாண் பணி மையங் கள் ஏற்படுத்தப்பட்டன.

4. ஆழ்குழாய் கிணறு தோண்டும் வேலைகள்.

நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டம் மற்றும் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், சேலம் கோவை, பெரியார், அண்ணா, தஞ்சாவூர் மற்றும் வட ஆற்காடு மாவட்டங்களில் இதுவரை 657 ஆழ்குழாய் கிணறு தோண்டும் வேலை இணையத்தால் முடிக்கப்பட்டுள்ளது.

1989 ஏப்ரல் 4]

5. மத்திய அரசு சார்புத் திட்டத்தின் கீழ் ஆயில் என்ஜின் பம்பு செட்டுகள் குறை நிவர்த்தி செய்தல்.

கிராமப் புறங்களில், ஆயில் என்ஜின் பம்பு செட்டுகளின் திறனை அதிகரிக்கும் பொருட்டு 1987–88 ஆம் ஆண்டில் ஆயில் என்ஜின் பம்பு செட்டுகள் குறை நிவர்த்தித்திட்டத்தினை அரசு அறிமுகப்படுத்தியது.

6. தெரிவு செய்யப்பட்ட வட்டார வேளாண்மை மையங்களை வலுப் படுத்துதல்.

இணைப்பு சங்கங்களின் செயல்களை அதிகப்படுத்தும் நோக்கத்துடன் 1987-89 ஆம் ஆண்டில் ரூ. 6.00 இலட்சம் செலவில் ஒரு மையத்திற்கு ரூ. 20,000 வீதம் 30 மையத்திற்கு தொழிற் கூடம் கருவிகள் வழங்க அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம்

வேளாண்மைக் கல்வி ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கம் கல்வி முதலியவற்றில் பல்கலைக் கழகம் ஆற்றிய பணிகளும், எதிர்கால நோக்கங்களும் கீழே தரப்பட்டுள்ளது.

கல்வி :

1. வேளாண்மை, வனவியலில் முதுநிலைக் கல்வித் திட்டம் துவங்குதல்.

2. சுற்றுப்புறச் சூழ்நிலை அறிவியலில் முதுகலைப் பட்டம் தொடங்குதல்.

3. வேளாண் உயிரியல் நுட்ப மையம் ஒன்று நிறுவுதல்.

4. கால்நடை அறிவியல் மற்றும் வேளாண் பொறியியல் பாடங்களில் டிப்ளமா/சான்றிதழ் படிப்பு தொடங்குதல்.

பதிநான்கு புதிய பயிர் இரகங்கள் ஜனவரி 1989-ல் வெளியிடப் பட்டனபுதிய இரகங்களையல்லாமல் பயிர் நிர்வாகம்,பயிர்ப் பாது காப்பு, வேளாண் பொறியியல், வனவியல், கால்நடை அறிவியல், மீன் வளம், தோட்டக்கலை ஆகிய துறைகளில் பல புதிய வேளாண் உத்திகள் கண்டுபிடிக்கப்பட்டன.

வேளாண் பொறியியல். :

பின்வருவன இவ்வாண்டில் உருவாக்கப்பட்டன :

அக்ரோ ஜெனரேட்டர்,
சமூக சாண எரிவாயு சாதனம்.
சாண எரிவாயு அரிக்கென் விளக்கு.
ஸ்பெரிக்கல் சாண எரிவாயு சாதனம்.
புகைவரா அடுப்பு.
சூரிய சக்தியால் இயங்கும் உலர்த்தி.
வயலில் பேசின் உருவாக்கும் கருவி.

விரிவாக்கக் கல்வி. :

கோவை, மதுரை, திருச்சி, விருத்தாசலம், காட்டுப்பாக்கம் மற்றும் பாண்டிச்சேரியில் உள்ள உழவர் பயிற்சி நிலையங்கள் இவ்வாண்டில் பயிற்சி முகாம்கள், செயல் விளக்கங்கள், கிராம கூட்டங்கள் மற்றும் பண்ணை அறிவுரை பணிகள் ஆகியவற்றை நடத்தின. கட்டுரைகள் வெளியிடப்பட்டன. வானொலி நிகழ்ச்சிகள் மற்றும் அறிக்கைகள் ஒலிபரப்பப்பட்டன. தொலைக் காட்சி நிகழ்ச்சிகளும் நடத்தப்பெற்றன. இவ்வாண்டில் உழவர் கேள்விகளுக்குப் பதிலளிக்கப்பெற்றது. வெளியீடுகள் பதிப்பிக் கப்பட்டன.

